வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
மக்களின் தேவையே எமது சேவை
புத்தூர்


# புதுவை நாதம்

## இதழ் 5

"உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே"



ஒக்ரோபர், 2024



நூலக அபிவிருத்திக்குழு,
பொது நூலகம்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவை நாதம்

## இதழ் - 5

**நூலக அபிவிருத்திக்குழு,**
**பொது நூலகம்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

**2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | புதுவை நாதம் (இதழ் 5) |
| வெளியீடு | : | நூலக அபிவிருத்திக்குழு<br>பொது நூலகம்,<br>வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,<br>புத்தூர் |
| பதிப்பு | : | ஒக்ரோபர், 2024 |
| இதழாசிரியர் | : | திருமதி.பாலரதி சதீஸ்வரன் |
| நூல் வடிவமைப்பு | : | சுடர்நிலவு கிறபிக்ஸ், இணுவில். |
| பக்கங்கள் | : | xxiv + 123 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

**தூர நோக்கு** (Vision)

அருமையாகக் கிடைக்கக்கூடிய வளங்களை
சிறந்த நிர்வாக முகாமைத்துவத்தின் கீழ் ஒருங்கிணைத்து
பிரதேச அபிவிருத்தியினை துரித கதியில் மக்கள்
பங்களிப்புடன் நிறைவேற்றல்.

**பணி நோக்கு** (Mission)

சிறந்த வினைத்திறனுடன் கூடிய தொழில்நுட்பத்துடன்
அனைத்து வளங்களையும் பயன்படுத்தி நலன்மிக்க
உறுதியான சேவைகளை வலி கிழக்கு பிரதேச சபை
மக்களுக்கு வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும்
பிரதேசத்தையும் மேம்படச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தூர் - பொது நூலகத்தின்

## **நோக்கு** (Vision)

வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதன் மூலம் வாசகர்களின் அகவிருள் போக்கி அறிவாற்றல்களை மேம்படுத்தி சீரிய சிந்தனையையும் நேரிய மனப்பாங்கையும் கொண்ட இளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

## **பணிக்கூற்று** (Mission)

சிறார்களை மிக்க அன்பும் மிகையான ஆற்றலும் பண்பட்ட உள்ளமும் கொண்டவர்களாகவும் தேசிய வளர்ச்சியில் பங்கு கொள்ளக் கூடியவர்களாகவும் சர்வதேசத்தின் போக்குகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வல்ல ஆற்றல் மிக்க பிரஜைகளாவும் உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேசசபை
# புத்தூர்

1) பிரதேசசபையின் பெயர் - வலிகாமம் கிழக்கு பிரதேசசபை - புத்தூர்

2) பிரதேசசபை முகவரி - பருத்தித்துறை வீதி, புத்தூர்.

3) கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் - புத்தூர் மேற்கு J/273

4) பிரதேசசெயலர் பிரிவு - வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் - கோப்பாய்

5) பிரதான மொழி மூலம் - தமிழ்

6) இட அமைவு (கிராமம் / நகரம்) - கிராமம் (புத்தூர்)

7) தொலைபேசி இலக்கம் - 0212058867

செயலாளர் - இராமலிங்கம் பகீரதன் - 0212058983

பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் - 0212058981

8) தொலைநகல் இலக்கம் - 0212058866

9) ஈமெயில் முகவரி - secveps@yahoo.com

10) பிரதேசசபையின் நடைமுறையிலுள்ள செயற்றிட்டங்கள்

i. குடிநீர் வழங்கல்

ii. கழிவகற்றல்

iii. ஆயுள்வேத வைத்தியசேவை

iv. நூலக சேவை

v. வீதிப்புனரமைப்பு

vi. சனசமூக நிலையங்களிற்குரிய மானியம் வழங்கல்

vii. சந்தை வசதி

viii. மயானங்கள் / சேமக்காலைகள் பராமரிப்பு

ix. வீதி விளக்குப் பொருத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இதன் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

அ) உப அலுவலகங்கள்

i.
- புத்தூர் உபஅலுவலகம் - 0212058988
- ஆயுள்வேத வைத்தியசாலை
- பொதுநூலகம்

ii.
- அச்சுவேலி உபஅலுவலகம் - 0212058972
- ஆயுள்வேத வைத்தியசாலை
- பொதுநூலகம்

iii.
- நீர்வேலி உபஅலுவலகம் - 0212058973
- ஆயுள்வேத வைத்தியசாலை
- பொதுநூலகம்

iv.
- உரும்பிராய் உப அலுவலகம் - 0212058978
- பொதுநூலகம்
- ஆயுள்வேத வைத்தியசாலை

v.
- கோப்பாய் உபஅலுவலகம் - 0212058974
- பொதுநூலகம்

ஆ) சனசமூக நிலையங்கள்

இ) முன்பள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநூலகம் பற்றிய தரவுகள்

| | | |
|---|---|---|
| பெயர் | :- | பொது நூலகம், புத்தூர் |
| இடம் | :- | பருத்தித்துறைவீதி, புத்தூர் |
| தொலைபேசி இலக்கம் | :- | 0212058988 |
| நூலகர் | :- | திருமதி. பாலரதி சதீஸ்வரன் |
| நூலக ஆளணி | :- | நூலகர் - 01<br>நூலக ஊழியர் - 02 |
| மொத்த நூல்கள் | :- | 10948 |
| அங்கத்தவர்கள் | :- | 992 + 101 (சிறுவர்கள்) |
| இலவச அங்கத்தவர் | :- | 1710 |
| நாளாந்த வாசகர் | :- | 90 - 150 |
| வகை | :- | பிரதேசசபை நூலகம் |
| நூலகப்பரப்பளவு | :- | 1218 Sq. Feet (சதுரஅடி) |
| திறந்திருக்கும் நேரம் | :- | 8.15 மணி - 4.15 மணிவரை |
| நூலகக் குழுக்கள் | :- | நூலக ஆலோசனைக்குழு<br>சிறுவர் வட்டம் |
| நூலக விழாக்கள் | :- | உலக புத்தகதினம்<br>வாசிப்பு மாதம்<br>சர்வதேச தினங்கள் கொண்டாடுதல் |
| வழங்கும் சேவைகள் | :- | சிறுவர் பகுதி<br>உசாத்துணை சேவை<br>இரவல் வழங்கல்<br>பத்திரிகைகள்<br>சஞ்சிகைகள்<br>கதைநேரம்<br>சுழற்சி முறையில் நடமாடும் சேவை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



அக்டோபர் மாதத்தை வாசிப்பு மாதமாக பிரகடனப் படுத்தப்பட்டு நாடு பூராகவும் பொது நூலகங்கள் ஊடாகவும் பாடசாலைகளிலுள்ள பொது நூலகங்கள் ஊடாகவும் வாசிப்பை மேம்படுத்தும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் புத்தூர் பொது நுலகமும் அந்த செயற்பாடுகளில் இருந்து பின்னிற்கவில்லை என்பது அவர்களது செயற்பாடுகள் மூலமாக காணக்கூடியதாக உள்ளது.

வாசிப்பதால் மனிதன் புரணமடைகின்றான் என்பது முதுமொழி. அந்த முதுமொழிக்கிணங்க வாசிப்பதற்கான நூலினை ஒவ்வொரு வருடமும் புத்தூர் பொது நூலகம் வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதன்படி இந்தவருடமும் புதுவைநாதம் எனப்பெயரிடப்பட்ட அந்த நூல் வெளிவருகின்ற வேளையில் நூலாக்கற் குழுவினருக்கும் நூலகருக்கும் அவரோடு இணைந்து செயற்பட்ட அனைவருக்கும் எல்லாம் வல்ல நடராஜப் இராமலிங்கேஸ்வரப் பெருமான் நல்லாசிகளை வழங்கப் பிரார்த்தித்துக் கொண்டு எனது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சர்வே ஜனாகா சுகினோ பவந்து

**சிவஸ்ரீ.ந.யோகாணந்தேஸ்வரக் குருக்கள்,**
**பிரதமகுரு,**
**நடராஜ இராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்,**
**ஆவரங்கால்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# METHODIST CHURCH – SRI LANKA

## Puttur Mission

**Rev. T. Robert Sasikaran**
Superintendent Minister
Mobile No: 077 495 1004
Email: sasikaranrobert@gmail.com

**St. Luke's Methodist Church,**
Point Pedro Road,
Puttur,
Sri Lanka.




## ஆசிச்செய்தி

இன்றைய அறிவியல் என்பது உச்சநிலையில் இருந்தாலும், மனிதனின் தனி ஆளுமை என்பது ஒப்பீட்டளவில் மிகக்குறைவாகவே உள்ளது. சந்திரனையும், செவ்வாய்க் கிரகத்தையும் ஆராய்ந்தறிந்திருக்கும் மனிதன் தன் உள்ளத்தையும், சுயத்தையும் அறிந்து வைத்திருக்கத் தவறிவிட்டான். தனக்குள் இருக்கும் அறியாமை களைக் கண்டுகொள்வதுதான் நமது இன்றைய தேடலாக அமைய வேண்டும்.

சம காலத்தில் வாழும் ஒவ்வொருவரும் தேடி அறியவும், கற்று உணரவும், பண்பட்ட நல்ல சமூகமாய் வாழவும் காலம் நம்மை அழைக்கின்றது. படைப்புகளின் சிறப்புப் படைப்பாகிய மனிதன் எப்போது படைப்பாளனை மறந்தானோ அப்போது மனித குலம் விரைவாக அழிவை நோக்கிச் சென்றுவிட்டது. எனவே எவன் ஒருவன் உலகத்தில் கற்றுக்கொள்ள மறுக்கிறானோ அவன் சமகாலத்தில் வாழும் தகுதியை இழக்கின்றான் என்பதே உண்மை.

புதுவைநாதம் இதழ் 05 தொடர்ச்சியாய் இவ்வாண்டும் புதுப்பொலிவோடு வெளிவருவதையிட்டுப் பெருமை கொள்கின்றேன். தொடர் முயற்சிக்கு வாழ்த்துக்கள் கூறுவதோடு, எமது சமூகத்தின் கண்கள் திறந்து வழிகாட்டிட இறைவனின் நல்லாசிகள் கிடைக்க ஆசிக்கின்றேன்.

**அருள்பணி த.றொபேட் சசிகரன்**
**பொறுப்புக்குரு,**
**புத்தூர் மெதடிஸ்த திருச்சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகம்
කාර්යාලය
Office } 021 221 9375/76

தொலைநகல்
ෆැක්ස්
Fax } 021 221 9374

இணையதளம்
වෙබ් අඩවිය
Website } www.np.gov.lk

மின்னஞ்சல்
විද්‍යුත් තැපෑල
E-mail } governornp@gmail.com

எனது இல
මගේ අංකය
My No } G/NPC/A4/Greeting/2024

நாகலிங்கம் வேதநாயகன்
නාගලිංගම් වේදනායගන්
Nagalingam Vethanayahan

ஆளுநர், வட மாகாணம்
ආණ්ඩුකාරවර, උතුරු පළාත
Governor, Northern Province

ஆளுநர் செயலகம்
ආණ්ඩුකාරවර, කාර්යාලය
Governor's Secretariat

பழைய பூங்கா, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை.

පැරණි උද්‍යානය, නුවර පාර,
චුණ්ඩිකුලි, යාපනය, ශ්‍රී ලංකාව.

Old Park, Kandy Road,
Chundikuli, Jaffna, Sri Lanka.

திகதி
දිනය
Date } 19.12.2024



# வடமாகாண கௌரவ ஆளுநரின் வாழ்த்துச் செய்தி

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பது ஆன்றோர் வாக்கு. தேசிய வாசிப்பு மாதத்தினையொட்டி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் வெளியிடப்படும் "புதுவை நாதம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

இச்சஞ்சிகையானது 05ஆவது இதழாக இவ்வருடமும் வெளிவருவது பாராட்டுக் குரியது. மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் வகையிலும், அவர்களின் வாசிப்புத் திறனை வளர்த்தெடுக்கும் வகையிலும் கடந்த 04 வருடங்களாக இச்சஞ்சிகையை வெளியிட்டுவரும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினர பாராட்டுக் குரியவர்கள்.

மாணவர்கள் இன்றைய சமூக ஊடகங்கள் பலவற்றால் கவனச் சிதறல்களுக்குட் பட்டு தேவையற்ற மன அழுத்தங்களுக்கு உள்ளாகி பின்விளைவுகள் பலவற்றை எதிர் நோக்குகின்றனர். இந்நிலையில் வெளிவரும் "புதுவை நாதம்" போன்ற ஏனைய சஞ்சிகைகளையும், புத்தகங்களையும் வாசிப்பதானது அவர்களது மொழித்திறன் ஆற்றலை வளர்ப்பதோடு, சொல்வளம் மற்றும் எழுத்து வளத்தையும் வளர்க்க ஏதுவாகின்றது.

இந்நிலையில் "புதுவை நாதம்" சஞ்சிகையானது வருடாவருடம் இன்னும் பல புதிய அம்சங்களைத் தன்னகத்தே தாங்கிவந்து மாணவச் செல்வங்கள் உட்பட அனைவருக்கும் பயன்தரும் இதழாக வெளிவரவேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

N. V

**நா.வேதநாயகன்,**
**ஆளுநர்,**
**வட மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாணம்
ප්‍රධාන ලේකම් කාර්යාලයල උතුරු පළාත
CHIEF SECRETARY'S SECRETARIAT, NORTHERN PROVINCE

A9,வீதி, கைதடி
A9,පාර, කයිතඩි
A9, Road, Kaithadi

Chief Secretary : 021 222 0843
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

Office : 021 222 0846 (ACS)
: 021 222 0845 (Legal)
: 021 223 2372 (Accountant)
: 021 222 0842 (AO)
: 021 222 0840 (Gen)



# வாழ்த்துச் செய்தி

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலகத்தின் கீழ் இயங்கிவரும் பொது நூலகம், 2019 ஆம் ஆண்டிலிருந்து "புதுவை நாதம்" எனும் நூலை வருடாந்தம் வெளியிட்டு, மாணவர்கள் மத்தியில் வாசிப்பு கலாசாரத்தின் தூண்டுகோலாகத் திகழ்வதையிட்டு எனது மனமார்ந்த பாராட்டுதல்களை முதற்கண் தெரிவிக்கின்றேன்.

வாசிப்பதனால் உருவாகின்ற கல்வி அறிவோடு உடல் உள நன்மைகள் குறித்து மருத்துவ சமூகம் அனேக உண்மைக் கருத்துகளை முன்வைத்ததன் நிமித்தம் தேசிய வாசிப்பு மாதம் அகில இலங்கை ரீதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பாடசாலை களில் மற்றும் பொது நூலகங்களில் போட்டிகளும் நிகழ்வுகளும் நடாத்துதல் ஒரு முக்கிய அங்கமாக தற்போது உள்ளது. புத்தக வாசிப்பு மூலம் ஏற்படும் அறிவும் அனுபவமும் பல தொடர்பாடல் மற்றும் புத்தாக்கப் பரிமாறலுக்கான வித்துக்களையும் உருவாக்கி வருவதனை நாம் அனேக தொடர்பாடல் அம்சங்களுக்கூடாக அறியலாம்.

இந்த உயரிய முயற்சியின் தொடர்ச்சியாக, இவ்வருடமும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலகத்தினால் வெளியிடப்படும் புதுவைநாதம் இதழ்-05 மாணவர்களுக்கு மற்றும் வாசிப்பு ஆர்வலர்களுக்கு மிகுந்த பயனுறுதியாகவும் வாசிப்பின் முக்கியத்துவத்தையும் அறிவின் ஆற்றலையும் மற்றவர்களுடன் பகிரும் ஒரு ஊடகமாக இருக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

வாசிப்பின் சிறப்பையும் சமூகத்தின் முன்னேற்றத்தையும் முன்னிறுத்தி இத்தகைய செயற்பாடுகள் தொடரவும் இந்நூலை வெளியிடுவதற்கு மூலகாரணராகச் செயற்படும் புத்தூர் பொது நூலகத்திற்கும் உறுதுணையாக இருக்கின்ற வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிறைவான வாழ்த்துக்களுடன்,

**இ.இளங்கோவன்**
**பிரதம செயலாளர்,**
**வடக்கு மாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சு,
வடமாகாண சபை

මුදල් හා ක්‍රමසම්පාදන, නීතිය හා සාමය, ඉඩම්, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, සංචාරක, පළාත් පාලන, පළාත් පරිපාලන, ග්‍රාම සංවර්ධන, මාර්ග සංවර්ධන, මෝටර් රථ ප්‍රවාහන
සහ ප්‍රවාහන අමාත්‍යාංශය
උතුරු පළාත් සභාව

**Ministry of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Tourism, Local Government, Provincial Administration, Rural Development, Road Development, Motor Traffic and Transport, Northern Provincial Council**

---

# வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கீழ் இயங்கிவரும் பொது நூலகத்தினால் "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டுவரும் வாசிப்பு மாத செயற்திட்டத்துடன் இவ்வருடம் ஐந்தாவது இதழாக வெளிவரும் "புதுவை நாதம்" எனும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"புதுவை நாதம்" வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் வரலாற்றினையும், மாணவச் செல்வங்களின் பல்வேறு ஆக்கங்களையும் கவிதைகள், கட்டுரைகள் என்பவற்றினையும் தாங்கி வெளிவருவதன் மூலம் தமிழ் சமூகத்தின் அறிவாற்றலுக்கான பெரும் பயணத்தினைத் துவக்கியிருப்பது சிறப்பிற்குரியது.

இதன்வழி வாசிப்பின் முக்கியத்துவத்தினையும், தமிழ்மொழி மற்றும் பண்பாட்டின் பாரம்பரியத்தினை உலகறியச் செய்வதிலும் புதுவை நாதம் தனக்கான முக்கியமான பங்கினை வகிக்கும் என்பதில் ஐயமில்லை.

வாசிப்பின் வழி அறிவு செம்மையாகட்டும். இதை அடையும் ஒவ்வொரு மக்களும் சிறந்த அறிவாளிகளாகி உலகை வென்றிட, இத் தொலைநோக்கு பணியின் தொடர்ச்சியான வெற்றிக்கும் "புதுவை நாதம்" இதழின் வளர்ச்சிக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**செ. பிரணவநாதன்,**
**செயலாளர்,**
**நிதி, திட்டமிடல் மற்றும்**
**உள்ளூராட்சி அமைச்சு,**
**வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம்
පළාත් පාලන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
Department of Local Government, Northern Province
முதியோர் இல்ல வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
වැඩිහිටිනිවාස සංකීර්ණය "A9 පාර" කයිතඩි"යාපනය.
Elders Home Complex, A9 Road, Kaithady, Jaffna.
Website - www.np.gov.lk
Email – nplocalca@gmail.com

| | | |
|---|---|---|
| எனது இல / මගේ අංකය / My No. NP/14/01/ET/CD/Gen | உமது இல / ඔබේ අංකය / Your No. | திகதி / දිනය / Date 30.01.2025 |

## வாழ்த்துரை

வலிகாமம் பிரதேச சபைக்குட்பட்ட புத்தூர் உப அலுவலகத்தின் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாத நிகழ்வினை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற "புதுவை நாதம் இதழ் 05" நூலிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியில் கணிசமான பங்கினை நூலகங்கள் வகிக்கின்றன. இன்றைய காலகட்டத்தில் பொது நூலகங்களின் பணி சிறப்பான தேவைப்பாடுகளை உடையதாக அமைந்திருக்க வேண்டுமென எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு பொதுநூலகம் சிறப்பாக இயங்குகின்றது என்றால் அந்தப் பிரதேசம் வளர்ச்சியடைந்த பிரதேசமாக கணிக்கப்படும். நூலகங்கள் தனித்து நூல்களை வாங்கி விநியோகிக்கும் இடமாக இல்லாமல் அதிவேகமாக வளர்ந்துவரும் உலகிற்கு ஏற்ப நவீன தொழிநுட்பங்களையும் உள்வாங்கி பல்வேறு தேவைகளையும் சமூகத்திற்காக ஆற்றும் நிறுவனமாக, சமூகத்தினையும் சபைகளையும் ஒன்றிணைக்கின்ற இடமாக திகழ வேண்டுமென விரும்புகின்றேன்.

அவ்வகையில் இந்நூலானது வாசகர்களினதும், ஆக்ககர்த்தாக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்து எல்லோர் மத்தியிலும் நீங்கா இடம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன், "புதுவை நாதம் இதழ் 05" நூலிற்கு எனது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேவந்தினி பாபு,
உள்ளூராட்சி ஆணையாளர்,
வடக்கு மாகாணம்.

தேவந்தினி பாபு
உள்ளூராட்சி ஆணையாளர்
உள்ளூராட்சி திணைக்களம்
வடக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்
ප්‍රාදේශීයපළාත්පාලනසහකාරකොමසාරිස්කාර්යාලය - යාපනය
Office of the Regional Assistant Commissioner of Local Government -Jaffna


சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
සිවන් පන්නයි පාර, යාපනය.
Sivan Pannai Road, Jaffna.


எனது இல. / මගේ අංකය / My No.

உமது இல. / ඔබගේ අංකය / Your No.

திகதி / දිනය / Date 30.01.2025

# வாழ்த்துச் செய்தி

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் "புதுவைநாதம்" எனும் நூலானது தனது ஐந்தாவது இதழினை விரிக்கின்றது என்பதில் மிக்க மகிழ்ச்சியுறுவதொடு இவ்விதழ் மிகச்சிறப்பாக அமைவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"புத்தகங்கள் கைத்துப்பாக்கிகளை விட வலிமையான ஆயுதம்."

(லெனின்)

இந்த வலிமை மிகு ஆயுதமான நூல்களை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் மட்டுமே நம்மை நாமே வலிமையாக்கிக் கொள்ள முடியும். அவ்வாறான ஓர் பலம் மிக்க ஆயுதமான புத்தகத்தினை இப் பிரதேச சபையானது தொடர்ச்சியாக தயாரித்து வெளியிட்டு வருகின்றமை அப்பிரதேச மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

எமது சமூகத்தினரிடையே வாசிப்பு பழக்கத்தினை அதிகரிப்பதன் மூலம் அவர்களை மிகச் சிறந்த சமூகமாக்க் முடியும். உலகப் புகழ் பெற்ற ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்பவர். உலகில் மனிதனின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு "புத்தகம்" எனக் கூறுகிறார். ஆம் அறிவை விசாலப்படுத்தச் செய்யும் புத்தகங்களை வெறும் பொருளாகப் பார்க்கும் மனநிலை மாறவேண்டும். அதற்கு புத்தகம் வாசிக்கும் பழக்கத்திற்கு நாம் ஒவ்வொருவரும் மாறவேண்டும்.

நம்மை புத்தாக்கம் செய்து கொள்வதற்கான அத்தனை சக்திகளும், அனுபவங்களும் புத்தகங்களில் மட்டுமே நிறைந்திருக்கின்றன. நம்மைக் கடந்து போகின்றவர்களையும், கடத்திப் போகின்றவர்களையும் கையாள்வதற்கான எல்லாத் தந்திரங்களையும் கொண்டிருக்கும் காலக் கண்ணாடியாக புத்தகங்கள் திகழ்கின்றன. சொந்த அனுபவத்தோடு அடுத்தவர்களின் வாழ்க்கையில் இருந்து பெற்ற அனுபவங்களையும் சேர்த்து நம் அன்றாட வாழ்க்கை முறைக்குப் பயன்படுத்துவதில் தான் வெற்றியின் சூட்சுமம் அடங்கி இருக்கிறது. அந்த சூட்சுமத்தை நமக்கான அடையாளமாய் மாற்றிக் கொள்வதற்கு வாசிப்பு என்னும் வசியம் அவசியம்!

சமுதாயத்திற்கு தேவையான நூல் ஆக்கத்தினையும், வாசிப்பு பழக்கத்தினையும் ஒன்றிணைத்து ஊக்குவிக்கும் உங்களது இம்முயற்சி மிகச்சிறப்பானது. எதிர்வரும் காலங்களில் இவ்விதழ் ஆண்டுக்கு ஒரு இதழாக இல்லாமல் கூடிய இதழ்களை விரித்து சமூகத்தின் கைகளில் சிறப்பாக தவழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**பொ.ஸ்ரீவர்ணன்**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,**
**உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு-கோப்பாய்
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය වලිකාමම් නැගෙනහිර - කෝපායි
Divisional Secretariat, Valikamam East – Kopay
General Telephone No: 021 223 0011 Fax: 021 223 1211 E-mail: valieast@gmail.com

# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாத செயற்றிட்டத்தையொட்டி வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலகத்தின் கீழ் இயங்கிவரும் பொது நூலகத்தினால், வாசிப்பு மாத செயற்றிட்டத்துடன் வெளியீடு செய்யப்படும் "புதுவைநாதம்" எனும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். வலிகிழக்கு பிரதேசத்தில் சிறப்பாக இயங்கிவரும் பொதுநூலகத்தின் பணிகளையும் வியக்கிறேன்.

"உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" என்ற தொனிப்பொருளில் இச் செயற்றிட்டம் அமைந்திருப்பது சிறப்பிற்குரியது. காலத்தின் தேவையறிந்து செயற்படும் விதம் வரவேற்பிற்குரியது. வாசிப்புப் பழக்கம் இன்றைய சமுதாயத்தில் அருகி வருகின்றமை யாவரும் அறிந்த விடயம். இப்பழக்கம் நம்மில் எத்தனை பேரிடம் இருக்கின்றது என்பது கேள்விக்குறியாகவே அமைந்திருக்கின்றது. புத்தக வாசிப்பின் அவசியத்தை சிறுவயதிலிருந்தே பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும். ஒவ்வொருவரும் புத்தகம் படிக்கும் பழக்கத்தை உருவாக்கி தினமும் முப்பது நிமிடங்களாவது வாசிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் படிப்படியாக வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளலாம்.

வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்துவதோடு சிறந்த அறிவுத்திறனையும் நுண்ணறிவையும் வழங்குகிறது. பரந்துபட்ட உலக அறிவினைப் பெற்றுக்கொள்ளவும் புதிய புதிய தகவல்களை அறிந்து கொள்ளவும் வாசிப்பு எமக்க உறுதுணையாக இருக்கின்றது.

"நூல் பல கல்" என்றும் "நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு" என்றும் ஔவைப்பிராட்டியார் கூறியது சற்று சிந்திக்க வேண்டியது. வாசிப்பு என்பது மனிதனுக்கு சிறந்த ஒரு பொழுதுபோக்காகவும் மன அழுத்தத்திற்கான மாபெரும் மருந்தாகவும் காணப்படுகிறது என்றால் மிகையாகாது. கற்பனை ஆற்றல், பொறுமை, சிந்திக்கும் திறன், படைப்பாற்றல் போன்ற பல்வேறுபட்ட நன்மைகளை வாசிப்பு எமக்குத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்றைய உலகம் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் நவீனமடைந்துள்ள சமூகங்களைக் கொண்டுள்ளதாகும்". எனவே இச் சமூகங்களில் வாசிப்பு என்பது குறைவடைந்து ஏனைய பல புதிய அம்சங்களில் பொழுது போக்கினை மக்கள் கழிக்கின்றனர். குறிப்பாக இளம் வயதினர் இணையத்தளங்களில் மூழ்கியுள்ளதை நாம் கண்கூடாகவே காண்கிறோம். எமது சமூகத்தைச் சீர்ப்படுத்த வேண்டுமானால் வாசிப்பு பழக்கத்தை மென்மேலும் ஊக்கப்படுத்த வேண்டும். இன்று இணைய வாசிப்பு மேலோங்கினாலும் கையிலே நூலை வைத்து வாசிக்கும் உணர்வை யாருமே பெற்றுக்கொள்வதில்லை.

"ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஊரில் ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது" என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். அந்தளவிற்கு நூலகத்தின் பயன்கருதி செயற்படும் வலிகிழக்கு பிரதேச சபையின் பொது நூலகத்தின் பணிகள் என்றும் போற்றுதற்குரியது.

பல்வேறு தகவல்களைத் தாங்கி ஐந்தாவது இதழாக வெளிவரும் "புதுவை நாதம்" நூல் மேலும் வளர்ச்சி பெறவேண்டும். இனிவரும் ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக வெளியீடு செய்யப்பட வேண்டும். இச் செயற்றிட்டங்களில் பணியாற்றும் அத்தனை உள்ளங்களையும் வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

"வாசிப்பை நேசிப்போம்"
"வாசிப்பை சுவாசிப்போம்"
"வாசிப்பையே வாழ்வாக்குவோம்."

**ச. சிவஸ்ரீ**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**கோப்பாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை





**திரு.இராமலிங்கம் பகீரதன்**
**செயலாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை



**திரு.சுந்தரசிங்கம் சிவானந்தஜோதி**
**பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்**



**திரு.சுதர்சனன் ஜனார்த்தனன்**
**பொறுப்பதிகாரி, உப அலுவலகம், புத்தூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை –புத்தூர்
වැලිකාමම් නැගෙනහිර ප්‍රාදේශීය සභාව–පුත්තූර්
Valikamam East Pradeshiya Sabha – Puttur



## செயலாளரின் உள்ளத்திலிருந்து...

## "பூத்துக் குலுங்கட்டும் புதுவையின் எழில்"

"மக்களின் தேவையே எமது சேவை" என்னும் மகுட வாக்கியத்தை மந்திரமாகக் கொண்டு இயங்கும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் பொது நூலகமானது வாசிப்பு மாத்தினை மேம்படுத்தும் நோக்கமாக, பாடசாலை மட்டத்திலும், திறந்த நிலையிலும் போட்டிகளையும் கலந்துரையாடல்களையும், புத்தக ஆக்கத்திற்கான தேடல்களையும் முன்னின்று நடாத்தி வருகிறது. அதுமட்டு மன்றி சிறப்பாக பத்திரிகைகள் வாசிப்பகம், புத்தகம் இரவல் கொடுக்கும் பகுதி, சிறுவர்களுக்கான கற்றல் வசதி, மற்றும் அதிகளவு வாசகர்களை இணைக்கும் திறந்த வாய்ப்பு, இலவசமாக புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கான வசதி, வாசகர்களின் ஆலோசனைகளை வரவேற்கும் பாங்கு, பாரம்பரிய மரபுரிமைகளைப் பேணுதல், கண்காட்சி நடாத்துதல், கையெழுத்துப் பிரதிகளைச் சேகரித்தல், புதிய நூல்களை வரவேற்றல் போன்ற இன்னோரன்ன சேவைகளை நடாத்துதல் மொத்தத்தில் "மக்களின் தேவையே எமது சேவை" என்ற தாற்பரியத்தோடு புத்தூர் பொது நூலகமானது நல்லதோர் வாசகர் சமூகத்தை உருவாக்கியுள்ளது. எதிர்கால சந்ததிக்கும் ஏற்றவாறு நூலக அபிவிருத்திக் குழுவானது நூலகத்தினை மேம்படுத்த ஆவன புரிந்துள்ளது.

இந்நிலையில் இப்பொது நூலகமானது புதுவையின் வாசனையாக வருடந் தோறும் "புதுவை நாதம்" எனும் மலரினை வெளியிட்டுத் தன்னை பெறுமதியாக்கிப் பேறாக்கி வருகிறது. யாவரும் இம்மலரினை உவந்தேற்று ஊக்கமளிக்குமாறு பணிவோடு வேண்டிக்கொள்கின்றேன். வாசிப்பு எமது ஆரோக்கியத்திற்கான சுவாசிப்பாகும். மகிழ்வோடு ஏற்றருள்க.

**இ.பகீரதன்**
**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி

எமது சபையின் கீழ் இயங்கும் புத்தூர் பொது நூலகமானது 2019ஆம் ஆண்டிலிருந்து "புதுவை நாதம்" எனும் சஞ்சிகையினை வெளியிட்டு வருகின்றனர். அந்த வகையில் 2024ஆம் ஆண்டிலும் "புதுவை நாதம்" சஞ்சிகையானது வெளிவர இருக்கின்றமைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

புத்தூர் பொது நூலகமானது கடந்த காலங்களைப் போல் தனது தேசிய வாசிப்பு மாதச் செயற்பாடுகளை இவ்வாண்டும் மேற்கொண்டு மக்களிடையே வாசிப்பு பழக்கத்தை தூண்டுவதுடன், மாணவர்கள் மற்றும் வாசகர்களிடையே ஆக்கத் திறனை மேம்படுத்தும் செயற்பாடுகளை முன்மாதிரியாக செயற்படுத்தி வருகின்றது.

எமது சபையின் பொது நூலகங்களில் ஆயிரக்கணக்கான நூல்கள் இருக்கின்ற போதும் அதனை வாசிக்க வருகின்றவர்களது எண்ணிக்கை விரல் விட்டு எண்ணக் கூடிய நிலையிலிருப்பது துர்ப்பாக்கியமே. இந்த நிலை மாறவேண்டும். எமது முன்னோர்கள் வாசிப்புக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து தங்கள் அறிவை வளர்த்துக் கொண்டார்கள். தற்போது சமுதாயத்திற்கு வாசிப்பின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வு மேற்கொள்ள வேண்டிய காலச் சூழலில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருப்பது வேதனையானது. ஆயினும் குறித்த விழிப்புணர்வு செயற்பாட்டின் ஊடாக முழுமையாக அல்லது பகுதியாகவாவது இச்செயற்பாட்டின் ஊடாக மாற்றம் அடைய வேண்டும். அதன் அங்கமாக வெளிவருகின்ற "புதுவை நாதம்" சஞ்சிகை மக்களை விழிப்படையச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

புத்தூர் பொது நூலகமானது 2023ஆம் ஆண்டு தேசிய நூலக ஆவணமாக்கல் சபையினால் நடாத்தப்பெற்ற தேசிய வாசிப்பு மாதப் போட்டியில் மிகவும் சிறப்பாக செயற்பட்டமைக்காக தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினைப் பெற்று தனது சாதனையைப் பதிவு செய்து கொண்டது. அதனால் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையானது நூலக வரலாற்றில் தனது தடத்தினை பதிவு செய்து கொண்டது. இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருதுக்குக் காரணமாகத் தனது செயற்பாட்டை மேற்கொண்ட நூலகர் திருமதி. காஞ்சனமாலா உதயகுமாரன் அவர்களை இவ்வேளையில் பாராட்டி நினைவு கூருகின்றேன்.

இவ்வேளையில் இவ்வாண்டும் புத்தூர் பொது நூலகமானது தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் தேசிய ரீதியில் விருது பெற வாழ்த்துவதுடன் இந்நூல் வெளிவர உழைத்த நூலகர் திருமதி.ச.பாலரதி மற்றும் ஊழியர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் இம்மலர் தொடர்ந்தும் புதுவையின் நாதமாக ஒலிக்க வேண்டுமென வாழ்த்துவதில் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

**சு.சிவானந்தஜோதி,**

**பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்,**

**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராம ஜெயம்



# வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் பொது நூலகத்தால் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்மொழியப்பட்டு ஒவ்வொன்றாக அவை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அதன் பிரதானமானதும் இறுதியாகவும் நடைபெறும் அங்கமாக நூல் வெளியீடு காணப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு "சிறுவர்களூடாக வாசிக்கும் சமூகத்தை உருவாக்குவோம்" என்ற தொனிப்பொருளில் தேசிய வாசிப்பு மாதம் கொண்டாடப்பட்ட வேளையில் முதன்முதலாக "புதுவைநாதம்" என பெயர் வழங்கப்பட்ட நூல் புத்தூர் பொது நூலகத்தால் வெளியிடப்பட்டது. அவ்வாறே ஒவ்வொரு வருடமும் "புதுவை நாதம்" இதழ் புத்தூர் பொது நூலகத்தால் வெளியிடப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இந்த வருடமும் "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" என்ற தொனிப்பொருளில் தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித் திட்டங்கள் ஒவ்வொன்றாக நடைபெற்று வரும் வேளையில் அதன் இறுதிநாள் நிகழ்வன்று "புதுவைநாதம்" ஐந்தாவது இதழாக வெளிவருகின்றது. சிறந்த கட்டுரைகள், கதைகள், கவிதைகள், மாணவர்களது சிறந்த ஆக்கங்கள் என்பனவற்றை தாங்கிவரும் அந்நூல் இவ்வேளையில் உங்கள் கைகளில் தவளும்.

புத்தூர் பொது நூலக "நூலக அபிவிருத்திக் குழு"வால் வெளியிடப்படும் இந்த நூல் வெளிவருவதற்கு நூலகரின் அயராத உழைப்பு இன்றியமையாததாகும். அந்தவகையில் அவருக்கும் அவருக்கு துணைநின்று இவற்றை எல்லாம் செய்து முடிக்க உதவிய அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ் வடைகின்றேன்.

"உடலுக்கு எப்படி உடற்பயிற்சி அவசியமோ அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பே"

-சிக்மண்ட் ஃப்ராய்ட்

**சு.ஜனார்த்தனன்**
**பொறுப்பதிகாரி,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**உப அலுவலகம்,**
**புத்தூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

## நூலக அபிவிருத்திக்குழு, பொது நூலகம், புத்தூர்.




**அமர்ந்திருப்பவர்கள் (இ-வ) :** திரு.அ.ஜெயக்கிருஷ்ணா (பொது சுகாதாரப் பரிசோதகர், புத்தூர்), திரு.ஜெ.ஸ்ரீபவன் (ஆசிரியர்) திரு.சு.சிவானந்தஜோதி (சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்), திரு.இ.பகீரதன் (செயலாளர்), திரு.சு.ஜனார்த்தனன் (பொறுப்பதிகாரி, உபஅலுவலகம், புத்தூர்), திருமதி.ச.பாலரதி (நூலகர்).

**நிற்பவர்கள் (இ-வ) :** திருமதி.கு.சுபத்திராதேவி (நூலக பரிசாரகர்), திருமதி.சு.வினோதினி (கலாசார உத்தியோகத்தர்) திருமதி.அ.றஜீதா (கலாசார உத்தியோகத்தர்), திருமதி.ச.றட்னேஸ்வரி (ஆசிரியர்) திருமதி.ந.சிவதர்சிகா (நூலக ஊழியர்), திருமதி.S.மதியரசன் (ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நூலகம், புத்தூர்



திருமதி.பாலரதி சதீஸ்வரன்
நூலகர்



திருமதி.கு.சுபத்திராதேவி (நூலக பரிசாரகர்), திருமதி.ச.பாலரதி (நூலகர்), திருமதி.ந.சிவதர்சிகா (நூலக ஊழியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

எமது வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் பொது நூலகத்தின் நூலக குழுவினால் வருடா வருடம் வெளியிடப்பட்டு வரும் புதுவை நாதம் சஞ்சிகையின இதழ் - 05 இனூடாக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி யெய்துகிறேன்.

இம்முறை வாசிப்பு மாதத்திற்கான தொனிப்பொருள் "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" என்பது அமைகிறது. நிலத்தினை உழுது பண்படுத்தி பயிர் செய்து நல்ல விளைச்சலை அறுவடை செய்வது போல் நாமும் வாசிப்பினைத் தொடர்ச்சியாக எமது வாழ்வில் ஓர் அங்கமாகக் கடைப்பிடித்து வருவோமேயானால் ஒரு வெற்றிகரமான மனிதர்களாக உலகை வென்றவர்களாக மாறுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். இன்று உலகத்தில் எத்துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அதுபோல் நாமும் வாசிப்பினூடாக உலகில் பல நல்ல மாற்றத்திற்கு உறுதுணை புரிந்தவர்களாக மாறலாம்.

வாசிப்பினைத் தமது வாழ்வின் ஓர் அங்கமாகக் கொண்ட மக்களே தமது சிறந்த சிந்தனை, சொல், செயல் மூலம் பல நல்ல மாற்றத்திற்கு வித்திட்டிருக் கின்றார்கள். எமது மண்ணிலும் இவ்வாறான உதாரண மனிதர்கள் பலர் வாழ்ந்திருக்கின்றார்கள். இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். வாசிப்பை நேசிப்பதனூடாக நாமும் அவ்வாறு மாற முயற்சிப்போம்.

வழமை போன்று இம்முறையும் புதுவை நாதம் இதழ் 05 ஆக இப் பிரதேசத்தின் மாணவர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் ஆகியோரின் பல நல்ல ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது. அதனை வாசிப்பு அனுபவத்தினூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலிற்கு ஆக்கங்களைத் தந்துதவிய மாணவச் செல்வங்கள், ஆசிரியர்கள், மற்றும் படைப்பாளர்கள் ஆகியோரிற்கும் நூலக செயற்பாட்டில் உறுதுணை புரிந்த அனைவருக்கும், இதழினைக் குறித்த காலப்பகுதியில் அழகுற அச்சிட்டுத்தந்த சுடர்நிலவு பதிப்பகத்தினருக்கும், அனுசரணை மற்றும் உதவி ஒத்தாசைகள் நல்கிய அனைவருக்கும் நூலக அபிவிருத்தி குழு சார்பில் நன்றி கூறிக்கொள்கிறேன்.

எமது நூலக சேவையில் என்றென்றும் இணைந்திருக்குமாறு புதுவை யின் வாசகர்களாகிய உங்களை மிக அன்பாக வேண்டிக்கொள்கிறேன்.

**திருமதி.பாலரதி சதீஸ்வரன்,**

**நூலகர்,**

**பொதுநூலகம், புத்தூர்,**

**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | ரோஜாப் பூ | 1 |
| 2. | மயில் | 1 |
| 3. | கல்வி | 2 |
| 4. | வாசிப்பால் உயர்வோம் | 2 |
| 5. | அம்மா | 3 |
| 6. | சிறுவர் உரிமைகள் | 3 |
| 7. | வாசிப்பு | 4 |
| 8. | மரங்கள் | 5 |
| 9. | வாசிப்பு வாழ்வின் வழிகாட்டி | 5 |
| 10. | நுண்மதி பெருக்கும் நூல்கள் | 6 |
| 11. | நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் தேர் | 7 |
| 12. | வாசிப்பே நம் சுவாசிப்பு | 14 |
| 13. | வலிமை மிகு வலிகாமம் கிழக்கு - ஒரு பார்வை | 16 |
| 14. | நூலகக் கற்றல் வளநிலையங்களும், ஆசிரிய நூலகர்களும் | 51 |
| 15. | பார்த்தீனியம் | 56 |
| 16. | வாசிப்பை நேசிப்போம் | 61 |
| 17. | நூலகமும் சமூகமும் | 62 |
| 18. | வாசித்தல் மொழியறிதல் - நூல் தேடல் | 67 |
| 19. | வாசிப்பினால் உயர்வோம் | 71 |
| 20. | இடைவிலகல் | 72 |
| 21. | உள்ளங்கையில் உலகம் | 74 |
| 22. | சிறார்களுக்கு | 76 |
| 23. | கணிகையாள் | 77 |
| 24. | மேன்மை தரும் வாசிப்பு | 78 |
| 25. | நீர்வேலி கிராமம் - ஒரு நோக்கு | 79 |
| 26. | வழிகாட்டும் வாசிப்பு | 83 |
| 27. | நிர்ணயம் | 85 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. கோப்பாய் வடக்கின் கிராமிய வழிபாடு 86
29. சுக வாழ்விற்கான பிரதான 8 அம்சங்கள் 90
30. பொது அமைப்புக்களின் தலைமைத்துவமும் வகிபாகமும் 92
31. வாழ்விற்கு ஒளியூட்டும் வாசிப்பு 94
32. பங்குகளில் முதலீடு 96
33. மழுங்கடிக்கப்படும் விஷகடி வைத்தியம் மீண்டும் புத்துயிர் பெற வேண்டும் 101
34. கண்ணீரில் மூழ்கி... 104
35. கொறோனா கற்றுத் தந்த பாடம் 105
36. மனம் பதிந்த ஆசிரியர் 107
37. இயற்கையோடு மனிதன் 109
38. விழித்திடு மனமே 110
39. அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு 112
40. ஈழத்துத் தமிழ்ச் சூழலில் நினைவு மலர் வெளியீட்டுப் பாரம்பரியம் - ஒரு பார்வை 115
41. CONTRIBUTION OF LIBRARIES DURING READING MONTH 119



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜாப் பூ



சின்னச் சின்ன ரோஜாப் பூ
சிறிய வெள்ளை ரோஜாப் பூ
வண்ண வண்ண ரோஜாப் பூ
வடிவான ரோஜாப் பூ
கண்ணை சிமிட்டும் ரோஜாப் பூ
காற்றில் ஆடும் ரோஜாப் பூ
தேனீ ரீங்காரம் இடும் ரோஜாப் பூ
தேன் கொடுக்கும் ரோஜாப் பூ


பா.மதுசிகா
தரம் 1
யா/ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்.



# மயில்

த.தஷ்வின்
தரம் 1
யா/சிறுப்பிட்டி இந்து
தமிழ் கலவன் பாடசாலை

மயில் அழகான பறவை.
முருகனின் வாகனமும் மயில்.
ஆண் மயிலுக்குப் பெரிய தோகை உண்டு.
மழை வரப்போவதைக் கண்டால்
மயிலுக்கு மிகுந்த மகிழ்ச்சி.
மயில் தோகை விரித்தாடும்போது
மிகவும் அழகாக இருக்கும்.
காட்டுப் புறங்களில் அதனைக்
கண்டு மகிழலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி



கல்வி எமக்கு வரமாகும்!
என்றுமே எமக்கு உரமாகும்!
சிட்டுக் குருவியை போல நாங்கள்
சிறகடித்து உலகை வலம் வருவோம்
அழியாச் செல்வம் கல்வியாம்
வாழ்வின் இருளைப் போக்கிடுமாம்
கல்வி என்னும் கலங்கரை விளக்கில்
கல்வியின் கரையாக உயர்ந்திடுவோம்.

ச.ஆராதனா
தரம் 2
யா/வாதரவத்தை
விக்கினேஸ்வரா வித்தியாலயம்

## வாசிப்பால் உயர்வோம்

### சிறுகதை

**தரம் 2 மாணவி த.தஸ்மியா அவர்களினால் கூறப்பட்டது.
ஆசிரியர் திரு.க.பரமேஸ்வரன்.**

செல்வபுரம் அழகிய கிராமம். ஆனால் வீதிகள் எல்லாம் மண் வீதிகள் தான். எப்பொழுதும் சிவநேசன் மண் புழுதியில் விளையாடிக் கொண்டிருப்பான். அவனது நண்பர்கள் பாடசாலை சென்று விடுவார்கள். அதன் பின்பு அவன் தனியாக விளையாடிக் கொண்டிருப்பான்.

ஒரு நாள் பாடசாலை நேரம் சிவநேசன் வீதியில் விளையாடிக் கொண்டிருப்பதை தியாகராசா என்ற பெரியவர் கண்டார். அவர் அவனை அவனின் பெற்றோருடன் கதைத்து பாடசாலையில் சேர்த்து விட்டார். அவனுக்கு முதலில் சிரமமாக இருந்தது. அவனது ஆசிரியர் அன்பாக எழுத்துக்களையும் உச்சரிக்கும் முறையையும் கற்றுக் கொடுத்தார். அவன் மெல்ல மெல்ல வாசிக்கத் தொடங்கினான். அவனுக்கு வாசிப்பு மிகவும் விருப்பமான பொழுது போக்கானது. அவன் பல நூல்களை வாசித்தான். அவனது அறிவு பல மடங்காக பெருகியது. பரீட்சைகளில் இலகுவாக சித்தியடைந்தான்.

இன்று அவர் பெரிய அதிகாரி, நிறைய வருமானம் உடையவர். சிவநேசன் தனது வழிகாட்டியான தியாகராசா போல பல சிறார்களுக்கு கல்வி கிடைக்க வழி செய்து கொண்டிருக்கின்றார். எனவே நாமும் வாசிப்போம். எமது இலக்கை அடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா

என்னை இவ் உலகில் மலரச் செய்தபோது
நீ அனுபவித்த துயரம் என்னவோ!
இத்தனை துயரிற்கும் நன்றிக்கடனாக
எதைத்தான் தருவேனோ!
எதுவுமே நான் பட்ட கடனுக்கு
இம்மண்ணில் ஈடாகாதே தாயே!

எளிதில் அமர முடியாத ஆசனம்
தாயின் கருவறை!
அக் கருவறையில் ஈரைந்து மாதம்
சுமந்த என் தாயே!
என்னை நீ சுமந்த போது பட்ட
துன்பங்கள் சொல்லிடங்கா!

க.நிலுக்சிகா
தரம் 3
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த
இந்து ஆரம்ப பாடசாலை

## சிறுவர் உரிமைகள்



1. சிறுவர்கள் நாட்டின் அருஞ் செல்வங்கள்.
2. இன்றைய சிறுவர்கள் நாட்டின் வருங்காலப் பிரசைகள்
3. சிறுவர்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக வளர வேண்டும்.
4. சிறுவர்களுக்குப் பல உரிமைகள் உள்ளன.
5. கல்வி கற்பது சிறுவர்களின் பிறப்புரிமை.
6. சிறுவர்களை யாரும் தண்டித்தல் ஆகாது.
7. சிறுவர்களைக் கல்வி கற்க விடாது வேலைக்கு அமர்த்துவது குற்றமாகும்.
8. ஆண்டுதோறும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி சிறுவர் தினம் கொண்டாடப்படுகின்றது.
9. சிறுவர் உரிமைகள் தொடர்பாக பிரகடனம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டது.
10. அதில் சிறுவர்களுக்குரிய உரிமைகள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

ச.ஆர்த்திகன்
தரம் 4
யா/வாதரவத்தை
விக்கினேஸ்வரா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு



சுவாசிக்க மறந்தாலும் வாசிக்க மறக்காதே
வாசிப்பு ஒன்று தான் மானிடம் வென்றது.
வாசிப்பு இல்லையேல் நாமும் அது இது தான்.
சுவாசித்து வாழ்வதில் பயன் தான் ஏது?
வாசிக்க முடியாத மானிடராய் இருந்தால்...



வாசிப்பே மனிதனைப் பூரணமாக்கும்
வாசகம் கூட வாசித்தால் தான் புரியும்
சாதிக்க நினைத்தால் வாசிப்பைத் தொடரு
வாசிக்க என்றும் நல் நூல்களைத்தேடு.
வாசிக்க வாசிக்க மனிதன் பூரணமாவான்...



எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
ஏற்புடை வாசகம் பொன்னெனத் திகழ
புழுவிலும் கேடாய் புழுதியில் கிடந்தோம்
புத்தகம் தூக்க ஏன் தான் மறந்தோம்
கல்வியே கண்ணென கல்வியைத் தொடர்வோம்.



வாசிக்க வாசிக்க வசந்தங்கள் தோன்றும்
யாசித்து வாழ்கின்ற வாழ்க்கை தான் போகும்
வாசிப்பே வாழ்வின் வழியெனக் கொள்வோம்
வாசிப்பால் உயர்ந்து சிகரங்கள் தொடுவோம்.
வாசிப்பே கல்வியின் அடித்தளம் அன்றோ....

**அ.பவித்திரா**
**தரம் 5 இல் வாசித்தது**
**யா/மெ.மி.த.க.பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரங்கள்



மரங்களை என்றும் அழிக்காதே
மரங்களை என்றும் பாதுகாப்போம்
பூமியில் மரங்கள் வாழ்வதனால் - நாம்
புன்னகையோடு வாழ்ந்திடலாம்
மரங்கள் தருகின்ற உணவால் தான்
மனிதனும் பசிப்பிணி போக்குகிறான்
மரங்களை இனியும் அழித்திடாமல்
மரங்களின் பயன்களைப் பெற்று வாழ்வாய்

**வ.நிகானி**
**தரம் - 6**
**யா/ஸ்ரீ சோமஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை**

## வாசிப்பு வாழ்வின் வழிகாட்டி

**சு.விஷ்ணுகா (தரம் 7)**
**யா/சோமஸ்கந்த கல்லூரி.**

வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணமடைகின்றான். மனிதனை மனிதனாக வாழ வைப்பது வாசிப்பு ஆகும். ஒருவருடைய ஆளுமையை வசீகரிக்கக் கூடியதே வாசிப்பு. வீட்டை அலங்கரிப்பதற்கு புத்தகங்களைவிட அழகானதும், சிறந்ததும், பயனுள்ளதுமான பொருள் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. வாசிப்புப் பழக்கமானது ஒரு வழமான வாழ்க்கையைத் தரக்கூடியதாகும்.

பாடசாலையில் மாணவர்கள் பாடங்களை வாசித்துப் பொருளை புரிந்து கொண்டு பாடங்களுக்குரிய வினாக்களுக்கு விடைகளை வாசித்து அதை மனனம் செய்வது வாசிப்பு என பலர் புரிந்து கொண்டு பாடங்களுக்குரிய வினாக்களுக்கு விடைகளை வாசித்து அதை மனனம் செய்வது வாசிப்பு என பலர் கருதுகின்றனர். அதனால் வாசிப்புப் பின்னணியிலுள்ள கண், மூளை இவற்றின் செயற்பாட்டை புரிந்து கொண்டால் இவற்றை எளிதாக புரிந்து கொள்ளலாம்.

பொதுவாக வாசிப்பு இருவிதமாகச் செயற்படுகின்றது. ஒன்று குறிப்பிட்ட பந்தியை பொருள் புரியும் வகையில் ஆழ்ந்து வாசித்தல். மற்றையது மேலோட்டமாக வாசித்தல். இந்த வாசிப்பு முறைகளை கண்டுபிடிக்காத வாசிப்பாளர்கள் இருக்க இயலாது. அவற்றில் ஆசிரியர்கள் கற்பிக்கும் போது முதலாவதும் முறைகளை, பரீட்சைக்குத் தயாரான பின்பு மாணவர்கள் விடையை கண்டு பிடிப்பதை இரண்டாவது உதாரணமாகக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியான வாசகராவதற்கு எப்படி என நோக்கும் போது வாசிப்பதற்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி சிறு சிறு பந்திகளை சிறுகதைகளை வாசிக்க வேண்டும். இதன் மூலம் வாசிப்பின் ருசியை உணர்ந்து கொள்ள முடியும். தொடர்ச்சியாக வாசிப்பதனால் வாசிப்பின் வேகத்தை அதிகரித்து கொள்ள முடியும்.

வாசிப்பதற்கு நேரம் இல்லை என பலர் கூறுகின்றனர். ஆனால் ஒரு நாளில் பல மணி நேரங்களை வீணாக்குகின்றோம். மருத்துவமனையில் மருத்துவரைச் சந்திக்கும் வரையில் காத்திருத்தல். வங்கி, அஞ்சலகம், பஸ்தரிப்பிடம் போன்ற இடங்களில் ஒரு குறிப்பிட்ட நேரகாலமாக வெறுமையாகப் பொழுதைப் போக்குகின்றோம். இந்த வேளைகளில் ஒரு புத்தகங்களை வாசிப்போமானால் பல பக்கங்களை வாசித்து முடிக்கலாம். வாசிப்பதற்கு நேரம் இல்லை என்பதைவிட இந்த வேளையில் எப்பொழுது வாசிக்க வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். ஜப்பானியர் புகைவண்டி, பேருந்து தரிப்பிடம் போன்ற இடங்களில் கூட வாசிக்கின்றனர்.

வாசிப்பை நேசிக்கும் போது ஓய்வு வேளைகளை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள முடியும். வாசிப்பு அறிஞர்களிடம் பல்வேறு அனுபவங்களை வாசிப்பதன் மூலம் அவர்களுடைய அறிவுறுத்தல்களை வாசிப்பதன் மூலம் எமக்கு கற்றலில் ஆர்வம் கிடைக்கும்.

# நுண்மதி பெருக்கும் நூல்கள்



புத்தகம் ஒன்வொன்றிலும் பல கதை படித்திடும் பொழுதில் தான் புரிந்து கொண்டேன் வாழ்வின் அர்த்தம் தனை பரிவுடன் புத்தகம் எனை பார்க்க பாவலன் ஆகினேன் பாரதமே போற்றிட இதிகாசமாம் இராமாயணத்தில் இராவணன் குணம் கண்டேன். - இலக்கணமும் இசையும் புத்தகத்தின் ஈகையென கொண்டேன். கைக்குள் அடங்கி உனை தாழ்த்தியது கையடக்கத்தொலைபேசி. கைக்குள் அடங்கி எனை உயர்த்தியது கையடக்க நூலே. இருந்த இடத்தில் எல்லாம் அறிந்து கொண்டேன். இதழ்களின் மூலம் விழியோரம் என்றும் ஒரு தேடல் புத்தகங்களோடு மூளைக்கும் சிறகு முளைக்கும் எனை மூவுலகும் இட்டுச் செல்லும் ஓர் நாள் எழுத்துக்களும் உயிர் பெற்று வரும் வாசிப்பை நீ நேசிக்க ஆரம்பித்தால் வெற்றி எனும் வாசல் என்றும் உனக்காய் திறந்திருக்கும். நீ வாசகனாய்ச் சென்றால் நூல்கள் கொண்டு நுண்மதி பெருக்கிடு உன்மதி உனைப் போற்றும். புத்தகங்களைப் புரட்டி புரட்சி செய் - பூமியே பூரித்து நிற்கும் உனைப் பார்த்து - உன்னில் எழும் ஆயிரம் கேள்விகள் - அதற்கு பதில் ஒன்றே அது புத்தகமே...

**தெ.பிரியந்தி, A/L 2026 (Art)**

**J/P. S.S.C,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் தேர்

**கலைமாமணி விஸ்வமதுப்பிரமாச்சார்யா**
**வேலுப்பிள்ளை அம்பிகைபாகன் M.Phil**
**முன்னை நாள் விரிவுரையாளர்,**
**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர் பாடசாலை,**
**தென்மராட்சி.**

இக்கால கட்டத்தில் நயினாதீவு (1957) போன்ற கலைப் போக்குகளிலிருந்து சற்று விலகிய நிலையில் கவர்திறன் மிக்க புதியதோர் உருவ அழகியல் அமைப்பில் உருவாகிய நீர்வேலி வாய்காற்றரவைப் பிள்ளையார் தேர் தமிழக மரபில் அமையும் "சிறுதேர்" ஆகும். இதனை நிர்மாணித்த திருவிடைமருதூர் இரா.கோவிந்தராஜு தேரமைப்புக் கலைஞனான ஸ்தபதியாக அறிமுகமாகியது. இத்தேரின் மூலமே என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தேர் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டு என்று போற்றப்படும் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் (1939), யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேச வரதராஜப்பெருமாள் (1960) தேர்களை நிர்மாணித்த திருவிடைமருதூர் சீ.சுப்பிரமணிய ஸ்தபதியின் பெறாமகனும் பிரதம சீடனும் என்பதும் இவருடைய பயிற்சிக் களங்களாக மேற்கூறிய தேர்களை அமைந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். கோவிந்தராஜு, சிற்பக் கலைஞனாக இருந்து ஸ்தபதியாக உயர்ந்த நிலையில் தேர்க்கலை புதிய பரிணாமம் அடையலாயிற்று எனலாம்.

இது ஓர் பெருந்தேராக அமையாது தமிழக மரபில் "சிறுதேர்" என்று கூறும் வகையில் அமைந்தமைக்குரிய முக்கிய காரணி ஆலயத்தின் பொருளாதார வளமின்மையாகும். ஆலய அறங்காவலரும் பிரதம குருவுமாகிய சு.பிட்சாடணக் குருக்களவர்களின் முயற்சியே இத்தேர்த் திருப்பணியின் கருவாகிய போதிலும் அவரது தலைமையில் அமைக்கப்பெற்ற தேர்த் திருப்பணிச்சபையின் பொருளாளரான நீர்வேலியைச் சேர்ந்த க.வே.கனகரத்தினத்தின் பங்களிப்பே பெருமளவில் இதனை உருவாக்கியதெனலாம். இப்பணிக்குரிய நிதி சேகரிப்பு முறை கூட ஓரளவிற்கு இக்கிராமத்தின் பொருளாதார நிலையையும் அதே வேளையில் கலை, சமய ஈடுபாட்டினையும் பிரதிபலிப்பதாகின்றது. நீர்வேலி அதன் அயற் கிராமங்களின் பொருளாதார வளத்திற்கமைய சிவசாய உற்பத்திப் பொருளாகிய வாழைக்குலை அன்பளிப்பு உட்பட பழைய தேர் விற்றல், சீட்டிழுத்தல், நாடக நிகழ்வுகளின் அடிப்படையில் "மனோகரா", "கோவலன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றை நடாத்திப் பெற்ற இலாபம், தமிழக, இன்னிசைச் செல்வி கே.பி.சுந்தராம்பாளின் இசை நிகழ்வுகள் மூலம் பெறப்பட்ட இலாபம் என்பவற்றின் மூலம் பெறப்பட்ட நிதியே இத்தேரின் மூலதனமாகியது என்று அறியப்படுவது குறிப்பிடத்தகது. கே.பி.சுந்தராம்பாளின் யாழ்ப்பாண வருகை இத்தேரின் நிதி சேகரிப்பு நிகழ்விற்காகவே என்பது குறிப்பிடத்தக்கதே.

அந்த வேளையில் இக்கால கட்டத்தேர் அமைப்பு வரலாற்றில் வடமாகாண அரச அதிபர் "ஸ்ரீகாந்தர்" அவர்களின் பங்களிப்பு நயினாதீவின் (1957) பின்னர் பரவலாக இடம்பெறுகின்றமை அவதானித்தற்குரியதாகும். இத்தேர்த் திருப்பணிச் சபையின் போஷகராக - அமர்ந்ததுடன் கலைஞர்களை ஒழுங்கு செய்வதில் கணிசமான முயற்சிகளையும் எடுத்தமை சிறப்பாக அவதானித்தற்குரியதாகும்.

தேர் நிர்மாணத்தில் நீர்வேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லையா, சின்னத்தம்பி பொன்னையா, சின்னையா நாகலிங்கம் மட்டக்களப்பு சிவக்கொழுந்து (கடைச்சல் வேலை) கந்தையா செல்லத்துரை, செல்லையா விஸ்வலிங்கம், சின்னையா செல்வரத்தினம் உள்ளிட்ட பலரும் பணியாற்றினர். இவர்களில் "செல்லர்" என்று செல்லமாக அழைக்கப்படும் செல்லையா ஆச்சாரியாரின் இல்லத்திலேயே கோபி அவர்கள் நீர்வேலியில் பணிக்காலத்தில் தங்கியிருந்தமை ஓர் சிறப்பம்சமாகும். இவ்வில்லம் நீர்வேலி சுன்னாகம் வீதியில் பிரதான சாலைக்கு அண்மித்திருந்தது.

கவர்திறன் மிக்க வாய்க்காற்றரவைத் தேரில் இடம் பெறும் சிற்பங்களின் உருவ அழகியல் அல்லது பார்விதான - உபபீட அமைப்பு, சிகரம் என்பவை தேர் இலக்கணம் முற்றிலும் பொருந்தாவிடினும் இதனை யாழ்ப்பாணத் தேர்ககலை வரலாற்றில் பெரிதும் முக்கியத்துவமுடையதாக்குகின்றன எனலாம்.

திராவிட எண்கோண வடிவமுடைய இத்தேர் "முகபத்திர" மரபிலமைவது சிறப்பானதோர் புதிய அம்சமாகும். அதே வேளையில் கமலாகர வடிவ தேர்களிலேயே இம்முகபத்திர மரபிலமையும் சிறப்பு இதற்கும் இதனை அடியொற்றிய - இம்மரபினைத் தோற்றுவித்த கோவிந்த ராஜு ஸ்தபதியின் ஏனைய சில வடிவமைப்புகளிற்கும் மட்டுமே உரியதாகும். ஈழத்தில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் முதல் திராவிட முகபத்திர மரபுத் தேர் எது என்பதில் பலருக்கும் தெளிவிருப்பதாகத் தெரியிவில்லை. சிறப்பாக யாழ்ப்பாண மரபுக்கலை வட்டத்தில் சிலருடைய கொள்கைகளில் இதனை முற்றாக அவதானிக்க முடிகிறது. தாமே முதலில் இம்மரபினை ஈழத்திற்கு அறிமுகப்படுத்தியதாக சுயபுகழ் பேசும் ஸ்தபதி ஒருவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈழநாட்டிலே முகபத்திர வேலைகளுடன் அமைக்கப் பெற்றுள்ள திராவிட மரபுத்தேர் தெல்லைப்பழை துர்க்காதேவி தேர் 1978ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப் பட்ட வாய்க்காற்றரவைத் தேர் 1963 ஆம் ஆண்டிலேயே நிர்மாணம் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கதாகின்றது. இவை இரண்டிற்குமிடையே அடிப்படை வேறுபாடுகள் சிலவற்றை அவதானிக்கலாம். நீர்வேலித்தேர் உபபீடத்தின் மேல் தேரின் பிரதம பாகமாகிய விளாயவரி எனப்படும் பண்டிகையில் - பேரூர் மட்டம் - முகபத்திரம் மீட்கப்படாத தொழில்நுட்பக் குறைபாடுடையதாகும். அதே வேளையில் விமானம் முழுவதும் இம்மடக்கை மீட்கப்படுகிறது. தேர் அமைப்பு முறையைப் பொறுத்தவரையில் அதன் தளம் அமையும் மரபே அதன் மரபு என்று கொள்வது இந்துத் தேர்க்கலையின் பொது நடைமுறை. இதற்கமைய யாழ்ப்பாணத்தில் முகபத்திர மரபில் அமையும் முதலாவது தேராக நீர்வேலியைக் கொள்வது எவ்வகையிலும் பொருத்தமுடையதொன்றாகும்.

பார்விதானமும் அதன் மேல் அமையும் ஆதாரமும் நீள்சதுரமாக நாகர முகபத்திர மரபிலமைய, அதன் மேலமையும் உபபீடம் சற்று இறுகிய நாகர முகபத்திர அல்லது பூசாந்தர மரபிலமைவதால் ஆதாரத்தில் நான்கு கோணங்களிலும் ஏற்படும் தளப்பரப்பில் நான்கு சங்கு பூதங்கள் முழந்தாளில் மண்டியிட்ட நிலையில் அமைந்துள்ளன. இவை பார்விதான அமைப்பினை மட்டுமல்லாது நாகர முகபத்திர மடக்கை உபபீடத்தில் அமையும் சிறப்பினையும் பிரதிபலிப்பதாகும். பார்விதானம் முன் பின்னும் இரட்டைப் பஞ்சாங்க மரவு போன்றமைய வலம் - இடம் ஆகிய பக்கங்கள் ஏறத்தாழ ஒரே மட்டமாகவே அமைகின்றன. ஆயின் முன் பின்னாக இரு பக்கங்களிலும் வரும் மடக்கைகள் சற்று மாறுபாடான நிலையில் அமைவதாலே இத்தகைய தோற்றம் பெறப்படுகின்றது என்பதனைச் சற்று நுணுகி நோக்கும் போது புலனாகும். வலம் - இடம் ஆகிய கோணங்களுக்குரிய மடக்கைகள் முன்பின்னதாகக் குறைந்த அளவில் அமைவதும் அதே வேளையில் அவற்றின் வெளி - உள்ளாகச் செல்லும் விலகுபார்கள் நீளமாக அமைவதும் இத்தோற்றத்தை ஏற்படுத்துவதுமாகும்.

முகபத்திர மடக்கை மீட்பின் சிறப்பினை ஆராய்தல் பொருத்தமாகின்றது. பார்விதானத்திலிருந்து உடபீடத்தில் இறுதி உயரும் முகபத்திர மடக்கைகள், தேரின் கோணத்தினை வடிவமைக்கும் அதிஷ்டானத்தில் இறுகிய நிலையில் உருவெடுப்பதும் அதன் மேலமையும் பேரூர் மட்டமாகிய வியாளவரிசை எனப்படும் எழுதகத்தில் இருந்து நராசனம் வரை உள்ள எண்கோணப் பகுதிகளில் வளர்ந்து செல்வதும் இத்தேரின் கவர் திறன் உருத் தோற்றத்தினை வளர்த்தெடுப்பதாகும். கமலாகார வடிவமாகிய எழுதகத்தில் இம்மடக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்கப்படுவது என்பது ஓர் தொழில்நுட்ப சாதனையே எனலாம். இத்தகைய "பொறியியற் சிக்கல்" காரணமாகவே பிற்காலத்தில் இம்மரபு இத்தளப்பகுதியில் மீட்கப்படாது அருகியது என்று குறிப்பிடுதலும் பொருத்தமாகின்றது. இங்கே இம்முறை மிகவும் இலாவகமாகக் கையாளப்பெற்றுள்ளது என்பதிற் சந்தேசமில்லை. இம்மடக்கைகளின் மீட்சிச் சிறப்பு சிறந்த உயிரோட்டமுடையது. எழுதக வீச்சிற்கேற்ப கீழிருந்து மேலாக சமாந்தர நிலையில் இறுகி விரிந்து உயரும் மடக்கை, நராசன மட்டத்தில் உபவர்க்கங்களின் வெளியே முன்தள்ளியும் இறுகி உள்தள்ளியும் மீண்டும் வெளியே முன் தள்ளியும் அமையும் பண்பிற்கேற்ப முன்னைய சமாந்தர நிலையில் முறிவடையாது இறுகி உயர்ந்தும் அதிலிருந்து உயர்ந்து விரிந்து உயரும் பண்பு பிற்காலத்தில் மீண்டும் வேறிடங்களிற் காணமுடியாத சிறப்பம்சம் பொருந்தியதாகும்.

வடிவமைப்பு முறையில் பேரூர் மட்டமாகிய எழுதகம் அல்லது பியாளவரி குறித்துரைக்கத்தக்க அமைவுடையது. பொதுவாக கமலாகரத் தேர்களில் இப்பகுதி "வியாளவர்க்கம்" என்றே வழங்கப்படுதல் மரபாயினும் பெரும்பாலான தேர்களில் இதனை இனங்காண்பது கடினமாகும். இவற்றில் யாளிகளுடன் குதிரைகளும் இடம் பெறுவதே இச்சிலைக் கலைதோற்றுவிக்க இங்கே அத்தகைய நிலைமையேதுமின்றி "வியாளவர்க்கம்" என்ற தளத்தினை முழுமையாக இனங்காண்பது சிறப்பம்சமாகும். பிரதம கோண முறிப்புகளிலும் கோணத்தில் பத்திரப் பிரதேசத்தில் இரு யாளிகளும் இவ்வர்க்கத்தில் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. முன்னைய மரபுகள் பலவற்றிலும் கோண இணைவுகளிற் கீர்த்தி முகம் அமைய இங்கே யாளியே வர்க்க அமைவினையும் பூர்த்தியாகும் வகையில் அமைவது சிறப்புடையதாகும்.

இங்கே இடம் பெறும் கர்ணக்குடம் என்று பொதுவாக வழங்கப்படும் விமான "சிகரம்" இத்தேரின் மற்றுமோர் முக்கிய தனிச் சிறப்பாக அமைகிறது. யாழ்ப்பாண மரபில் அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய மரபில் இவ்வமைப்பு "கர்ணகுடம்" என்ற பெயரில் அமைய ஆலய அமைப்பு முறையுடன் ஒன்றிணையும் வகையில் அல்லது அதனை ஏற்கும் வகையில் சிகரம் அமைவதனை அவதானிக்க முடிகிறது. விமானத்தின் மூன்றாவது தளத்தின் மேல் மாலைக்கட்டு, பத்மம், இடைக்கட்டு, நாகபந்தம், பண்டிகை, மாலைக்கட்டு, கண்ணாடிக்கட்டு, மாலைக்கட்டு, மகாபத்மம் ஆகிய வர்க்கங்களுடன் இச்சிகரம் ஆலய அமைப்பினை ஏற்று அமைகிறது. இதன் பண்டிகை பித்தளைத் தகட்டினால் உருவாக்கப் பெற்றதாகும். இதன் நான்கு பிரதம கோணங்களிலும் நாசித்தலைகள் மனிதத் தலைகளுடன் அமைய அவற்றின் மேல் கீர்த்தி முகங்கள் காணப்படுகின்றன. ஏனைய நான்கு உப கோணங்களில் இந்நாசித் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைவுகள் காணப்படுகின்ற போதிலும் அவற்றினுள் மனிதத் தலைகளோ வெளி மேற்புற கீர்த்தி முகங்களோ அமையவில்லை. இச்சிகர அமைப்பு பிற்காலத்தில் சில முக்கிய தேர்களிலும் காணப்படுவதிலிருந்து இதன் முக்கியத்துவம் எத்தகையது என்பதை அறிய முடியும்.

ஆலய சிகர அமைப்பு முறையினைத் தேர அமைப்பில் ஏற்கும் இந்நடைமுறை பற்றி யாழ்ப்பாணக் கலை மரபில் சில எதிர்ப்புகள் இருக்கின்ற போதிலும் அவையோ அல்லது ஆதரவான கருத்துகளோ எழுத்துருவில் வந்திருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் தற்காலச் சிற்பிகளில் பலரும் இதனை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. பழைய மரபில் அமையும் "கர்ணக்குடம்" முறையையே தொடர்ந்தும் பின்பற்றுவதும் ஒரு சிலர் இப்புதிய மரபினை ஏற்படுத்தும் அவதானத்திற்குரியது. எண்கோணத்தேரின் கவர்ச்சியில் மயங்கியுள்ள யாழ்.மரபுக் கலைஞர்களிற் பலரும் "கர்ணக்குடம்" முறையையே தொடர்ந்தும் பின்பற்றுவதும் ஒரு சிலர் இப்புதிய மரபினை ஏற்பதும் அவதானத்திற்குரியது. ஆயின் "கர்ணக்குடம்" என்ற அமைப்பின் செம்மை சான்ற சொல்லாக அமைவது "சிகரம்" என்பது தான் என்னும் உண்மை பலருக்கும் தெரிவதில்லை. கர்ணக்குட அமைப்பில் பல இடர்பாடுகளை அவதானிக்கலாம். இச்சிக்கல்களிலிருந்து பிற்காலத்திலும் கூட பல ஸ்தபதிகள் விடுபடவில்லை. இந்நிலையில் அவையாவற்றையும் நீக்கும் வகையில் ஆலய சிகர அமைப்பில் தேர்ச் சிகர அமைப்பு முறை தோற்றம் பெறுவது குறிப்பிடத்தக்கதோர் அம்சமே என்பதில் ஐயமேதுமில்லை.

மணி மண்டபத்தில் இடம் பெறும் யாளித் தூண்கள், வேறு மரபுகளிற் காணமுடியாத இம்மரபிற்கேயுரிய - கலைச் செழுமை மிக்கதாகும். இது போன்றே வியாள வர்க்கத்திலுள்ள யாளிகள், சித்தூர் மட்டத்திலுள்ள குதிரை வீரர்கள், யானை யாளி என்பனவும் கலைச் செழுமையுடையதென்பதும் குறிப்பிடத்தக்கது. இரு முகப்புக் குதிரைகளினதும் யாய்ந்து செல்லும் வேகம் தடைப்படும் நிலையில் அவை காண்பிக்கும் அபிநயச் சிறப்பு விதந்துரைக்கக் கூடியது.

பார்விதானத்தில் நட்டுக் கண்களில் விக்கிரக சிற்பங்கள் தாழ்புடைப்பு முறையில் அமைவதும் விமானத்தில் கந்தவர்வர்கள் அமைவதும் இத்தேரினைத் "தேர் இலக்கணம்" பொருந்திய சிறு தேராகக் காட்டுகின்ற போதிலும் நான்கு சில்லுகளுடன் காணப்படுவது ஓர் முக்கிய குறை போலவே தென்படுகின்றது. இருப்பினும் ஆலய வரலாற்றில் சிற்பங்கள் சிலவும் விக்கிரக வரியில் இடம் பெறுவதால் ஏனைய அம்சங்களில் ஓர் முழுமை தெரிவதும் அதன் காரணமாகவே ஓர் சிறப்பு நிலை முக்கியத்துவம் பெறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை யாவற்றையும் உள்ளடக்கிய முறையில் இத்தேரின் உருவம் தேர் இலக்கணம் கூறும் "தாமரைமொட்டு" அல்லது "அக்கினி சுவாலிப்பது" போன்ற தோற்றத்தில் முற்று முழுதாக அமைவது சிறப்புடையது. உபபீடத்தின் மேல் எண்கோணமாக அமையும். இது விரிந்து உயர்ந்து நிமிரும் தளம் அக்கினியின் அடிப்பாகத்தினை நினைவூட்ட அதில் இருந்து மேலகன்று உயர்ந்து பிரஸ்தளத்தில் குவியும் யாளிகளின் வீச்சு அக்கினியில் அகவிப்பினைப் போன்றமைய, கீழிருந்து மேலமையும் உருவ புறத்தோற்ற லளித ஓட்டத்திற்கு ஏற்ப விமானம் குவிந்துயர்ந்து ஓரளவு நெருங்கி அக்கினியின் சுவாலிப்புத் தோற்றத்திலமைய அதன் மேலமையும் சிகரம் மீண்டும் வெளிக் கவர்ந்து உயர்ந்து இரு புறங்களிலும் குவிய, அதிற் கலசம் அமையும் தோற்றம் அக்கினியின் சுடர்விடும் முகம் போன்று காட்சி தரும் இவ்வுயிர்ப்புத் துடிப்புமிக்க தோற்றத்தினை உருவாக்குவதில் எழுதக வியாளவர்க்கத்தின் உயர்வில் விரிவும் பெரிய யாளிகளின் வெளிவீச்சுக் கவிதலும் உயர்வும் விமானத் தளங்களின் மேலெழுந்து கவியும் உயர்வும் சிகரத்தின் புத்தமைப்புத் தோற்றமும் குறிப்பிடத்தக்க லளித ஒழுங்கமைவினைப் பெற்றுள்ளமையே அமைகிறது எனலாம்.

தேர் அழகியல் என்று சிறப்பாகத் "தேர் உருவவியல்" என்று நோக்கும் போது வாய்க்காற்றரவை ஓர் திருப்பு முனையாக யாழ்ப்பாணத் தேர்க்கலை வரலாற்றில் இடம் பெறுகிறது எனலாம். இம்மரபின் விரிவும் உயர்வும் என்று இதே ஸ்தபதி இரா.கோவிந்தராஜுவால் பிற்காலத்தில் நிர்மாணிக்ப்பெற்ற நல்லூர் கைலாசபிள்ளையார் தேரினைக் குறிப்பிடலாம். கைலாசபிள்ளையார் தேரில் யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த "தேர் உருவாம்சம்" அமைகிறது என்பதனை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பதில் ஐயமேதுமில்லை. வாய்க்காற்றரவையின் சில அம்சங்களுடன் இவ்விஸ்தபதியால் நிர்மாணிக்கப் பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி தேரினையும் இம்மரபின் தொடர்ச்சி என்று கொள்வதும் பொருத்தமாகின்றது.

இக்காலகட்டத்தில் தசாம்சம் பொலிந்த தேர் என்று போற்றப்படும் நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் தேரில், மஞ்சவனப்பதி (1939), யாழ்ப்பாணம் வரதராஜப்பெருமாள் (1960) என்னும் வழியோடிய சிற்பக் கலை மரபை இனங் கண்டு கொள்ளலாம். திருவிடை மருதூர் இரா கோவிந்தராஜுவின் இத்தேர்ச் சிற்பங்களில் யாழ்ப்பாணத்தில் சிறப்பிடம் பெறும் சிற்பங்கள் சிலவற்றை அவதானிப்பதில் எதுவித இடர்பாடுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே காணப்படும் சிற்பங்களில் முதலிற் குறிப்பிடத்தக்கவை என்று சிலவற்றைக் கூறுவதாயின் பூதகி வதம், திரிபுராந்தகர், பூதகணங்கள், துவாரபாலகர்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் சித்தூர் மட்டத்தில் இடம் பெறும் கோண இருபுற அலங்காரச் சிற்பங்களாகிய "மகரகட கொடிக்கன்னிகைகள்" சிற்ப வனப்பு மிக்கவையாக விளங்குகின்றன எனலாம்.

தலைசிறந்த சிற்பங்களில் ஒன்றாகிய "பூதகிவதம்" தேரின் வலது பக்கமாகிய தென் திசையில் இடமிருந்து வலமாகப் பத்தாவதாக இடம் பெறுவதாகும். இற்றைவரையில் அமைந்துள்ள "இவ்வடிவில்" தலை சிறந்த சிற்பங்களுள் இதுவும் ஒன்று என்று குறிப்பிடலாம். பீடத்தில் இடது காலைக் கீழே ஊன்றியும் வலது காலைப் பீடத்தில் வைத்தும் அமர்ந்திருக்கும் பூதகி, இடது பக்கமாகச் சரியும் நிலையிற் காணப்படுகிறாள். அவளின் முன்னும் பீடத்தின் வலது பக்க முன்னுமாக நிற்கும் குழந்தைக் கண்ணன் முன்னே பூதகியின் மார்பு நோக்கிப் பாய்ந்து சரிந்த நிலையில் முலையிலிருந்து பால் குடிப்பதன் மூலம் அவளது உயிரையே உறிஞ்சி எடுக்கிறான். அவனது இடது கால் முன்னோக்கி எடுத்து வைக்கப்பட்ட நிலையிலும் வலது கால் மிகவும் பின்நோக்கியதாக உடலின் வேகப் பாய்ச்சலைக் காட்டும் நிலையிலும் அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இடது கரம் அவளின் வலது முலையைப் பிடிப்பதைக் காட்டும் வகையிலும் வலது கரம் இடுப்பிலும் அமைகின்றன. அவன் பிறந்த மேனியனாக சிறு குழந்தையாகவே இங்கு காணப்படுகின்றான். பூதகியின் முகத்தில், உயிரே பறிபோய்விட, பிரேத களையே தெரிகின்றது. வாய் மூடிய நிலையில் தொண்டை நரம்புகள் இரு பக்கமாக விரிந்து தெரிய, கரம், மார்பு, நெஞ்சு, வயிறு ஆகியயாவற்றிலும் எலும்புக் கூட்டுடன் சிறிதளவு சதை காணப்படும் தோற்றமே அவளில் தெரிகின்றது. மாவிட்டபுரத்தில் (1957) இடம் பெறும் "பூதகி வதம்" சிற்பத்தில், பூதகியின் மடியிற் கண்ணன் சிறு குழந்தையாக, பால் குடியாக அமைய, இங்கே பால் குடியாயினும் நடை பயின்று பாய்ந்து உயிர் கொள்ள வந்தவளின் உயிர் கொள்ள வேகம் சிற்பவனப்பு மிக்க நிலையை இதற்கு அளிக்கின்றது எனலாம். சிற்பச் செதுக்கல் முறையாகிய "புடைப்பு முறையில்" இச்சிற்பம் உட்படப் பெரும்பாலானவை சற்றுக் குறைந்த நிலையில் அரைப்புடைப்பாகவே அமைந்துள்ளன எனலாம்.

மேற்குக் கோணத்தில் இடம்பெறும் திரிபுராந்தக வடிவம் சிற்பம்சம் பொருந்தியதுடன் சற்று மாறுபாடான தன்மையுடையதுமாகும். சிவன் திரிபுராந்தக நிலையில் சக்தி, விநாயகர், முருகன் ஆகியோருடன் கூடியதாக இச்சிற்பம் அமைகின்றது. இடது காலை ஊன்றியும் வலது காலைத் தேரில் எடுத்து நீட்டி மடித்து ஊன்றியும் திரிபங்க நிலையில் சிவன் காணப்படுகின்றார். இவரின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடதுபக்கம் நிற்கும் தேவி திரிபங்கமாகவும் இடுப்பில் சிறு குழந்தை முருகனை ஏந்தியும் அமைய இவர்களிருவருக்கும் இடையே சக்தியின் இடுப்புயரம் உடையவராக விநாயகர் காணப்படுகின்றார். இடது பக்கத்தில் இடது கரத்தால் தொடைகளுடன் சேர்த்தணைக்கப் பெறும் மேரு என்னும் வில், ஏறக்குறைய சிவனுயரமளவிற்கு அமைவதாகும். சிற்பத்தின் வலது மேல் மூலையில் முப்புரங்கள் சிறியதாக அமைந்து எரியும் நிலையிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

சித்தூர் மட்ட முன் பக்கத்தில் இடமிருந்து வலமாக ஏழாவது சிற்பத்தின் வலபு புறம் அமைந்துள்ள சிறு தூண் மேற் பகுதியில் அதன் பரப்பில் - சிறு விநாயகர் சிற்பம் ஒன்று இடம் பெறுகின்றது. தூண் சதுரப் பகுதியில் ஓரங்குல விட்டமுடைய சிறு புடைப்பினுள் தாழ்புடைப்புச் சிற்பமாக அமையும் விநாயகர், தலையிலிருந்து பாதம் வரையிலான முழுத் தோற்றத்துடன் அமைவது, சிற்பியின் "சிற்ப நுண் திறனை எடுத்துக் காட்டுவதாக மட்டுமல்லாது, பிறவநேக மரபுகளில் காண முடியாத இம்மரபிற்கே உரிய சிறப்பம்சமாகவும் அமைகின்றது எனலாம்.

---

# வாசிப்பே நம் சுவாசிப்பு



வாசகர் தம் வாழ்வில் வாசிப்பு
கையெழுத்திலும் அச்செழுத்திலும் உள்ளதை
கண்களால் பார்த்து வாயால் உச்சரித்து
பொருளுணர்வதே வாசிப்பு.

சிந்திக்க வைக்கும் புத்தக வாசிப்பு
சிதறாத அறிவின் ஆணமே
நன்மைகள் ஆயிரம் வாழ்வினில் கிட்டிட
அறியாமை இருளுக்கே ஒளியூட்டி
அடிமை வாழ்வினால் அக இருள் அகற்றிடும் அரிய பொக்கிஷம் வாசிப்பு.

சீல வாழ்வின் ஓரங்கம் வாசிப்பு
கற்றவனும் மற்றவனும் கைதேர்ந்திடும் வாசிப்பு
கள்ளங்கபடமில்லா களங்கமில்லா வாசிப்பு
காலமெல்லாம் காத்திடும் கவிஞர் உலகத்தில்
மூளையிலும் மூவுலகிலும் முன்னிற்கும் வாசிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் பூரிப்பும் உலகத்தில் எழிமையும் ஊட்டியே
காலி மனங்களை மின்மினி போல் நிரப்பிடும்
உன்னதமான வாசிப்பின் திறனறிந்து மற்றும் உயர்திறன் கருதி
புத்தகம் வாசித்தல் பாரினில் உயர்ந்திடும்
பலம் மிக்கச் சாதனமாம்.

எப்பொழுதும் வாசித்தல் எக்காலமும் தேவை
எம்மவர் மத்தியில் எக்கணமும் தேவை
வாசி பல் நூல்களை வாழ்வை வளமாக்கும்
கண்டதையும் வாசி கருத்துப் பல பெற்றிடு
வாசிப்புப் பழக்கம் வாழ்க்கையை நேசிக்கும்.



பி.ஹஸ்மிகா
தரம் - 8
யா/வாதரவத்தை
விக்னேஸ்வரா வித்தியாலயம்.

வாழும் வரலாறு படைக்கும் வார்த்தைச் சிற்பம் வாசிப்பு
வாசிப்போர் இல்லா வையகம் ஞானப் போரில் மண்டியிடும்.
புத்தகச் சுவடிகளை மறந்துவிட்டது நம் புதிய சமுதாயம்
இணைய உலகுக்குள் ஈர்ப்புக் கொண்டு இலாவகமாய் சிக்கித்தவிக்கிறது.
இதனால் தான் என்னவோ சமூகச் சீர்கேடுகளும்
சந்தையாய் மலிந்து கிடக்கின்றன.



ஆன்மாவைக் கூர்தீட்டும் அறிவை மெருகேற்றும்
அனுபவங்களை அடுக்கடுக்காய் அணிதிரட்டி அறிவுரைகளை
அள்ளித்தரும் வாசிப்பின் சுவையறிந்து நூல்களின் திறனறிந்து
வாசித்தல் ஞானப் பேறு காற்றுள்ளவரை வாசிப்போம்
அதையே நித்தமும் நேசிப்போம்.
நல்ல சமுதாயம் சமுத்திரமாய் பாய்ந்திட
வாசிப்பையே வாழ்வாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமை மிகு வலிகாமம் கிழக்கு - ஒரு பார்வை


**திருமதி.பாலரதி சதீஸ்வரன்**
நூலகர்,
பொது நூலகம், புத்தூர்.
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.

**திருமதி.சிவமதி கருணாகரன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
உப அலுவலகம், புத்தூர்.
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.


எழில் பொங்கும் இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்கைத் திருநாடானது, 09 மாகாணங்களையும், 25 மாவட்டங்களையும், 22 தேர்தல் தொகுதிகளையும், 309 உள்ளூராட்சி சபைகளையும், தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது. அந்த வகையில், வடக்கின் மகுடமாக மிளிர்கின்ற, செழுமைமிகு மண்ணாய் விளங்குகின்ற, கற்றவர்களும், புகழ் பெற்றவர்களும் நிறைந்து வாழும் பகுதியே "யாழ்ப்பாண மாவட்டம்" ஆகும். இம் மாவட்டமானது நீர்வளம் சூழ்ந்த பிரதேசமாக மட்டுமன்றி, நல்ல நிலவளம் அமைந்த பிரதேசமாகவும், ஆங்காங்கே நீர் நிலைகள் செறிந்த பிரதேசமாகவும் விளங்குகின்றது. இவ் யாழ்ப்பாண மாவட்டமானது, 15 பிரதேச செயலகங்கள், 17 உள்ளூராட்சி சபைகள், 11 தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளடங்கும் கிளிநொச்சி தேர்தல் தொகுதியானது, தனி மாவட்டமாக பிரிக்கப்பட்டுள்ளது. ஏனைய 10 தேர்தல் தொகுதிகளும் யாழ்ப்பாண மாவட்டத்தினுள் அடங்குகின்றன.

| | **பிரதேச செயலகப் பிரிவுகள்** | | **கிராம சேவகர் பிரிவு எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | நெடுந்தீவு | - | 06 |
| 2. | தென் தீவகற்பம் (வேலணை) | - | 30 |
| 3. | வட தீவகற்பம் (ஊர்காவற்துறை) | - | 15 |
| 4. | காரைநகர் | - | 09 |
| 5. | யாழ்ப்பாணம் | - | 28 |
| 6. | நல்லூர் | - | 40 |
| 7. | வலிகாமம் தென்மேற்கு (சண்டிலிப்பாய்) | - | 28 |
| 8. | வலிகாமம் மேற்கு (சங்கானை) | - | 30 |
| 9. | வலிகாமம் தெற்கு (உடுவில்) | - | 25 |
| 10. | வலிகாமம் வடக்கு (தெல்லிப்பளை) | - | 45 |
| 11. | வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) | - | 31 |
| 12. | தென்மராட்சி (சாவகச்சேரி) | - | 60 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) - 35
14. வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) - 35
15. வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) - 18

**உள்ளூராட்சி சபைகள்**

| தொ. இல | உள்ளூராட்சி சபைகளின் விபரம் | உப அலுவலகங்களின் எண்ணிக்கை | உப அலுவலகங்களின் விபரம் |
|---|---|---|---|
| 1 | மாநகர சபை, யாழ்ப்பாணம் | - | - |
| 2 | நகரசபை, வல்வெட்டித்துறை | - | - |
| 3 | நகரசபை, பருத்தித்துறை | - | - |
| 4 | நகரசபை, சாவகச்சேரி | - | - |
| 5 | பிரதேச சபை, வேலணை | 05 | வேலணை, நயினாதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, மண்டைதீவு. |
| 6 | பிரதேச சபை, வலிகாமம் மேற்கு, சுழிபுரம் | 04 | சுழிபுரம், அராலி, சங்கானை, வட்டுக்கோட்டை. |
| 7 | பிரதேச சபை, வலிகாமம் தென்மேற்கு,மானிப்பாய் | 04 | மானிப்பாய் நகரம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு நகரம், பண்டத்தரிப்பு கிராமம். |
| 8 | பிரதேச சபை, வலிகாமம் தெற்கு, சுன்னாகம் | 03 | சுன்னாகம், ஏழாலை, உடுவில் |
| 9 | பிரதேச சபை, வலிகாமம் கிழக்கு, புத்தூர் | 05 | புத்தூர், அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய். |
| 10 | பிரதேச சபை, வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை | 04 | தெல்லிப்பளை, காங்கேசன்துறை, மல்லாகம், மயிலிட்டி. |
| 11 | பிரதேச சபை, நல்லூர் | 02 | நல்லூர், கொக்குவில். |
| 12 | பிரதேச சபை, பருத்தித்துறை | 03 | புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 13 | பிரதேச சபை, வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி | 03 | நெல்லியடி, உடுப்பிட்டி, கட்டைவேலி. |
| 14 | பிரதேச சபை, காரைநகர் | 02 | காரைநகர் வடக்கு, காரைநகர் தெற்கு. |
| 15 | பிரதேச சபை, ஊர்காவற்துறை | 04 | ஊர்காவற்துறை, எழுவை தீவு, அனலை தீவு, நாராந்தனை. |
| 16 | பிரதேச சபை, சாவகச்சேரி | 06 | சரசாலை, வரணி, மிருசுவில், கச்சாய், கைதடி, நாவற்குழி |
| 17 | பிரதேச சபை, நெடுந்தீவு | - | |

| தேர்தல் தொகுதிகள் | மாவட்டம் |
|---|---|
| 1. ஊர்காவற்துறை<br>2. வட்டுக்கோட்டை<br>3. காங்கேசன்துறை<br>4. மானிப்பாய<br>5. கோப்பாய்<br>6. உடுப்பிட்டி<br>7. பருத்தித்துறை<br>8. சாவகச்சேரி<br>9. நல்லூர்<br>10. யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 11. கிளிநொச்சி | கிளிநொச்சி |

வலிகாமம் பகுதி பற்றி நோக்குகையில், இதன் வடக்கு, மேற்குப் பகுதிகளில், பாக்குத் தொடுகடலும், தெற்கே யாழ்ப்பாணக் கடல் நீரேரியும், கிழக்கே தொண்டமானாற்றுக் கடல் நீரேரியும், எல்லைகளாக அமைந்துள்ளன. இவ்வலிகாமம் பகுதியானது, நிர்வாக அடிப்படையில், வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு, யாழ்ப்பாணம், நல்லூர் என ஏழு பிரதேச செயலகப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் என்ற சொல்லானது, வல் - வலிமை, கமம், வலிய கமம் என்பது "வலிகாமம்" எனப் புணர்ந்துள்ளது எனலாம். இப்பிரதேசமானது, செம்மண்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிமண், மணல்மண், நரைமண் என நால்வகை மண்ணையும் கொண்டுள்ளது. கடினமான மண்ணாலான இப்பகுதியின் நிலம், மிகுந்த பாடுபட்டு, பண்படுத்தி, நீர் பாய்ச்சி கமம் செய்ய வேண்டிய பகுதியாகும். இதனாலேயே இப்பகுதி வலிந்து கமம் செய்யும் பிரதேசம் என்பதால் "வலியகமம் " என்பது "வலிகாமம்" ஆனது. செம்மண் தரையின் கீழ் வெள்ளைக் கற்பாறையே (சுண்ணக்கல்) அமைந்திருக் கின்றது. இந்தக் கற்பாறையைக் கஸ்ரப்பட்டு உடைத்து, கல்லை வெளியில் எடுத்து, நிலத்தைப் பண்படுத்தியே விவசாயம் செய்யப்படுகிறது. இந்த வலிகாமம் என்ற பிரதேச வரிசையில் நாம் எடுத்துக் கொண்ட பிரதேசமாக, வலிகாமம் கிழக்குப் பற்றி பார்ப்போம்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் மையப் பகுதியில் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு அமையப் பெற்றுள்ளது. இதன் எல்லைகளாக,

வடக்கு : வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலாளர் பிரிவு

கிழக்கு : தென்மராட்சி (சாவகச்சேரி) பிரதேச செயலாளர் பிரிவு

தெற்கு : நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு

மேற்கு : வலிகாமம் தெற்கு (உடுவில்) மற்றும் வலிகாமம் வடக்கு (தெல்லிப்பளை) பிரதேச செயலாளர் பிரிவுகளையும் கொண்டமைந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் 102.2 சதுர கிலோ மீற்றர் பரப்பினைக் (10% நிலப்பகுதியை) கொண்டு யாழ்.மாவட்டத்தின், கூடிய சனத்தொகையினைக் கொண்ட, பிரதேச செயலாளர் பிரிவாகவும், 31 கிராம சேவையாளர் பிரிவுகளையும், 110 கிராமங்களையும் கொண்டமைந்துள்ளது. 2024ஆம் ஆண்டு நவம்பர் மாத தரவின்படி, 25219 குடும்பங்களையும், 77036 அங்கத்தவர்களையும், கொண்ட பிரிவாக திகழ்கின்றது. இதன் உள்ளூராட்சி மன்றமாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பற்றி நோக்குகையில், இதன் பிரதேச சபை எல்லைகளாக,

வடக்கு : வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை (கரவெட்டி)

கிழக்கு : தென்மராட்சி பிரதேச சபை

தெற்கு : நல்லூர் பிரதேச சபை

மேற்கு : வலிகாமம் தெற்கு பிரதேச சபை, மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

உள்ளூராட்சி மன்றங்களானவை, இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முற்பட்ட காலப் பகுதியில் உள்ளூராட்சி அமைப்பு வழியே சுகாதார சங்கமாய், சிறுநகர் சுகாதார சபையாய், பட்டின சபையாய், தரமுயர்த்தப்பட்டு இன்று பிரதேச சபை என அழைக்கப்பட்டு வருகின்றது. உள்ளூராட்சி நிர்வாக அமைப்பானது, "கம்சபா" என்ற புராதன அமைப்பின் மூலம், மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையில் இருந்துள்ளதாக கூறப்படுகிறது. 1856ஆம் ஆண்டில் பிரித்தானியரால் பிறப்பிக்கப்பட்ட நீர்ப்பாசனச் சட்டத்தில், "கம்சபா" பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையே தற்கால உள்ளூராட்சி அமைப்பின் ஆரம்பம் என கருதப்படுகின்றது. 1865ஆம் ஆண்டு பிரிட்டன் அரசினால் கொண்டு வரப்பட்ட சட்டம் மாநகர சபை, அமைப்புக்கள் உருவாக வழிவகுத்தது. 1920ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டமே ஜனநாயக முறையில் அமைந்த உள்ளூராட்சி அமைப்புக்கு வழிவகுத்தது எனலாம்.

1948ஆம் ஆண்டளவில் நடைமுறையில் இருந்த உள்ளூராட்சி அமைப்பு முறையில், மாநகர சபை, நகர சபை, கிராம சபை என இருந்துள்ளன. நகர சபைக்கும், கிராம சபைக்கும் இடையில், பட்டின சபை, என்ற அமைப்பு உருவாகியது. 1981ஆம் ஆண்டளவில், பட்டின சபை, கிராம சபை என்பன ஒழிக்கப்பட்டு, மாவட்ட அபிவிருத்திச் சபை, அமைப்பு உருவாக்கப்பட்டதுடன், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைக்கான பிரதிநிதிகள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

1987ஆம் ஆண்டு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. தற்போதைய, உள்ளூராட்சி நிர்வாக அமைப்பு முறையில், மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள், என மூன்று வகையான அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில், இலங்கையில் மாநகர சபைகள் - 14, நகர சபைகள் - 37, பிரதேச சபைகள் - 258, ஒட்டு மொத்தமாக, 309 உள்ளூராட்சி மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மாநகர சபை - 01, நகர சபைகள் - 03, பிரதேச சபைகள் - 13உம் சேர 17 உள்ளூராட்சி சபைகள் செயற்பட்டு வருகின்றன.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது, உள்ளூராட்சியை நெறிப்படுத்தும் வகையில், 1931ஆம் ஆண்டு டொனமூர் திட்டத்தின்படி உருவாக்கப்பட்ட, நீர்வேலி, உரும்பிராய், ஊரெழு ஆகிய கிராமங்களை சேர்த்து, நீர்வேலி கிராமச் சங்கமும், கோப்பாய்க்கு, கோப்பாய் கிராம சங்கமும், சிறுப்பிட்டி, புத்தூர், அச்செழு கிராமங்களுக்கு புத்தூர் கிராம சங்கமும், அச்சுவேலி கிராமத்துக்கு அச்சுவேலி கிராம சங்கமும், என்ற நிர்வாக அமைப்புக்கள் இயங்கி வந்தன.

இப் பிரதேச சபையானது, ஆரம்ப காலங்களில் நீர்வேலிக் கிராம சபையின் ஆளுகையில் இருந்து வந்த உரும்பிராய் - ஊரெழுப் பிரதேசமானது, 1970ஆம் ஆண்டளவில், நீர்வேலி கிராம சபையிலிருந்து, பிரிக்கப்பட்டு பட்டின சபை உருவாக்கப்பட்டது, அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய் என்ற நான்கு கிராம சபைகளையும், உள்ளடக்கியதாக இருந்தது. 1982ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச் சபையாக மாற்றம் பெற்று அதன் பின்னர் ஒன்றிணைக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையாக இன்று உயர்ந்து நிற்கின்றது. ஆரம்ப காலத்திலிருந்த உரும்பிராய் ஊரெழு பட்டின சபையும், அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய் கிராம சபைகளும், உப அலுவலகங்கள் ஆக்கப்பட்டு, ஓர் தலைமை அலுவலக நிர்வாகத்தின் கீழ் இயங்கத் தொடங்கியது. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது ஆரம்பத்தில் நீர்வேலியில் ஒரு சின்னஞ் சிறிய கட்டடத்தில் (தற்போதைய நீர்வேலி உப அலுவலகம்) அமைந்திருந்தது. பின்னர் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் புத்தூர்ச் சந்தியின் பிரதான வீதிக்கு மேற்குப் பக்கமாக, புத்தூர் கிராம சபை செயற்பட்ட காலப் பகுதியில், இதனை புத்தூர் கிராமக் கோட்டு வளவு எனவும் அழைக்கப்பட்டது. இங்கு கிராம நீதிமன்றமும் செயற்பட்டது. இந்தக் காணியினை புத்தூரைச் சேர்ந்த, பரிஸ்டா இராமநாதன் அவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டதாக அறிய முடிகிறது. நீர்வேலியிலிருந்து, தலைமை அலுவலகமானது, நியாப் (NEEARP) திட்டத்தின் அனுசரணையில், பிரதேச சபைக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட, மாடிக் கட்டடத்தில், 14.06.2006ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றது. இந்நிலையில் குறித்த கட்டடமானது, காலவோட்ட தேவைகளின் நிமித்தம் புனர் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, புதுப் பொலிவுடன் செயற்பட்டு வருகின்றது.

தலைமை அலுவலகம் அமைந்துள்ள பகுதியில், முன் இருந்த பழைய கட்டடத்தில் புத்தூர் உப அலுவலகமானது செயற்பட்டு வந்தது. பின்னர் புத்தூர் - சுன்னாகம் வீதியில் புதிய கட்டடத்தில் 03.03.2020 முதல் இயங்கத் தொடங்கியது எனலாம். இவ்வாதனத்தில்இ ஆயுள்வேத வைத்தியசாலை, புத்தூர் பொது நூலகமும் அமைந்துள்ளதால், சேவை பெற வருவோர் பொது நூலகத்தைப் பயன்படுத்துவதனை காணக் கூடியதாக உள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையாக ஒருங்கிணைக்கப்பட்ட நிர்வாக அலகாக இருக்கும் பிரதேசம், அச்சுவேலி கிராம சபை, புத்தூர் கிராம சபை, நீர்வேலி கிராம சபை, கோப்பாய் கிராம சபை, உரும்பிராய் பட்டின சபை, என்ற ஐந்து பிரிவுகளையும் உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட நிர்வாக அலகாகும். கிராம சபை, பட்டின சபை, என்ற உள்ளூராட்சி அமைப்புக்கள் தனித்தனிச் சபையாக செயற்பட்ட காலப் பகுதியில், அச்சுவேலி கிராம சபையானது - 14 வட்டாரங்களையும், புத்தூர் கிராம சபையானது - 17 வட்டாரங்களையும், நீர்வேலி கிராம சபையானது - 08 வட்டாரங்களையும், கோப்பாய் கிராம சபையானது - 15 வட்டாரங்களையும், உரும்பிராய் பட்டின சபையானது - 08 வட்டாரங்களையும், கொண்டு 62 வட்டார அலகாக இருந்தது.

இவ் 62 வட்டார அலகிற்குப் பதிலாக தற்போது அச்சுவேலி உப அலுவலகமானது, - 04 வட்டாரங்களையும், புத்தூர் உப அலுவலகமானது - 06 வட்டாரங்களையும், நீர்வேலி உப அலுவலகமானது 02 வட்டாரங்களையும், கோப்பாய் உப அலுவலகமானது - 05 வட்டாரங்களையும், உரும்பிராய் உப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகமானது - 05 வட்டாரங்களையும் கொண்டு, 62 வட்டார அலகிற்குப் பதிலாக 22 தேர்தல் வட்டார அலகினைக் கொண்டும், 22 மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டதுடன், விகிதாசாரப்படி, 16 மக்கள் பிரதிநிதிகளையும் கொண்டு மொத்தமாக 38 மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பிரதேச சபையாகவும், யாழ்.மாவட்டத்தின், கோப்பாய் தேர்தல் தொகுதியை உள்ளடக்கிய பிரதேச சபையாகவும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை விளங்குகின்றது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது, பஞ்ச பாண்டவர் போல அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் என்ற 05 உப அலுவலகங்களையும், தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது. அச்சுவேலி உப அலுவலகமானது 16212 ஆதனங்களையும், நீர்வேலி உப அலுவலகமானது 4630 ஆதனங்களையும், கோப்பாய் உப அலுவலகமானது 14463 ஆதனங்களையும், உரும்பிராய் உப அலுவலகமானது 8241 ஆதனங்களையும், கொண்டுள்ளது. 1995ஆம் ஆண்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலையின் போது புத்தூர் உப அலுவலக ஆவணங்களுடன், ஆதனப் பதிவேடுகளும், அழிவடைந்துள்ளமை யால், ஆதனங்களின் மொத்த விபரம் பற்றி குறிப்பிட்டுக் கூற முடியவில்லை.

இப் பிரதேசத்தின் சிறுவர் முதல் பெரியவர் வரை உடல் உள ஆரோக்கியம் பேணும் வகையில், இவ் உப அலுவலகங்களின் கீழ், அச்சுவேலி பொது நூலகம், புத்தூர் பொது நூலகம், நீர்வேலி பொது நூலகம், கோப்பாய் பொது நூலகம், உரும்பிராய் பொது நூலகம், என 05 பொது நூலகங்களையும், அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, உரும்பிராய் ஆகிய உப அலுவலகங்களின் கீழ் 04 ஆயுர்வேத வைத்திய சேவை நிலையங்கள் இயங்கி வருகின்றன. கோப்பாய் ஆயுர்வேத வைத்திய சேவை நிலையமானது ஆரம்ப காலத்தில் இயங்கிய நிலையில், சேவை பெறுபவர்களின் எண்ணிக்கை நலிவடைந்தமையால் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் புத்தூர் உப அலுவலகத்தின் கீழ் அரிச்சுவடி முன்பள்ளியும், அச்சுவேலி உப அலுவலகத்தின் கீழ் கஜமுகன் முன்பள்ளியும், கோப்பாய் உப அலுவலகத்தின் கீழ் சிகரம் முன்பள்ளியும் என சபைக்கான 03 முன்பள்ளிகளும் இலவசமாகவே இயங்கி வருகின்றன. இம் மாணவர்களின் நலன் பேணி அவர்களுக்கான சீருடை, கற்றல் உபகரணங்கள், சத்துணவு, என்பவற்றை வழங்கி வருவதுடன், அவர்களை கல்விச் சுற்றுலாவிற்கும் அழைத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப் பிரதேச சபையானது, தனது உப அலுவலகங்களின் ஊடாக, திண்ம, திரவக் கழிவு அகற்றல், பொதுச் சுகாதாரம் பேணல், வரி அறவிடுதல், உரிமைப் பத்திரங்களை வழங்கல், உள்ளூராட்சி அதிகாரங்களுக்கு அமைய ஒப்பந்தங் களைச் செய்தல், உப விதிகளை உருவாக்கல், பொதுச் சொத்துக்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதீனப்படுத்தல், உள்ளூராட்சி அமைப்பில் எல்லை வரையறை செய்யப்பட்ட வீதிகள், ஒழுங்கைகள், வாய்க்கால்களை, பராமரித்தல், திருத்துதல், வீதி விளக்கு பொருத்துதல், உள்ளூராட்சி அதிகாரத்திற்கு உட்பட்ட, சொத்துக்களை பராமரித்தல், செலவுகளை கணிப்பீடு செய்தல். நூலக சேவை வழங்கல், சுதேச வைத்தியசாலைகள், மருந்தகங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆளுகைக்குட்பட்ட பொதுச் சந்தைகள், மயானங்களைப் பராமரித்தல், குடிநீர் விநியோகம், பிரதேசத்திற்குட்பட்ட கட்டுமாணப் பணிகளுக்கான அனுமதி வழங்கல், மற்றும் நிலை பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் நோக்கில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து வழங்கல், சுயதொழிலை மேம்படுத்தும் வகையில், மாற்றுத் திறனாளிகளுக்கான பொருட்கள் வழங்கல், முதியோருக்கான சக்கரநாற்காலி, கட்டில், மெத்தை போன்ற பல்வேறுபட்ட பணிகளை, அதாவது "கருவறை முதல் கல்லறை வரையான சேவைகளை" ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்தில் நீண்ட காலமாக உள்ளூராட்சி தேர்தல் நடைபெறாத காரணத்தினால் சபையின் செயலாளரே நிர்வாகத்தின் தலைவராகவும் கொண்டு, இப்பிரதேச சபையானது, பொது மக்களுக்கான சேவையை சிறப்பாக ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி உப அலுவலகங்கள் ஐந்திற்கும், தனித்தனி பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டு, நிர்வாக நடைமுறைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு, அவர்களின் ஊடாகவும் பிரதேசத்திற்கான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதேச சபைக்கென முதற் தடவையாக, நடாத்தப்பட்ட தேர்தலில், திரு.பூ.குணசிங்கம், என்பவர் வெற்றி பெற்று 1996ஆம் ஆண்டு தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இச்சபையின் தவிசாளர்கள் வரிசையில்,

1. திரு.பூ.குணசிங்கம் - 1996 - 2001
2. திரு.அ.உதயகுமார் - 2011 - 2013
3. திரு.வ.க.துரைசிங்கம் - 2013 - 2015
4. திரு.தியாகராஜா நிரோஷ் - 2018 - 2023

இச்சபையில் கடமையாற்றிய செயலாளர்கள் வரிசையில்,

1. திரு.செ.குகதாசன் - 1996 - 2002
2. திரு.க.வெங்கடாசலம் - 2002 - 2003
3. திரு.இ.இராசதுரை - 2003 - 2005
4. திரு.த.நடராசா - 2005 - 2009
5. திருமதி.ஜெயந்தா சோமராஜ் - 2009 - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. திரு.ந.குமணன் - 2014 - 2015

7. திரு.யுகராஜா ஜெலீபன் - 2016 - 2022

8. திரு.இராமலிங்கம் பகீரதன் - 2022 தொடக்கம் இன்று வரை

இப்பிரதேசம் பற்றி நோக்குகையில் பெருமளவு மக்கள் விவசாயிகளாகவும், கல்வியில் உயர்ந்த பிரதேசமாகவும், தொழில் ரீதியாக கணிசமானோர், அரசாங்க உத்தியோகத்தர்களாகவும், தனியார் துறையில் கடமை புரிவோராகவும் உள்ளனர். இப்பிரதேசத்தின் கிழக்கு எல்லையானது, மகத்துவம் மிக்க செல்வமான உப்பு, இயற்கையாக விளையும் "உப்பாறு கொஞ்சும்" பிரதேசமாகவும், "ஏர்முனைக்கு நேர்முனை இங்கே எதுவுமேயில்லை" எனப் பறை சாற்றி நிற்கும் வகையில் நெல் வயல்களைக் கொண்டதாகவும், அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி நிலத்தின் நீர்த் தன்மையை என்றும் பேணும் வகையில் தாழை மரங்கள் தோப்புக்களாக நிற்கும் சிறப்பும் இங்குண்டு. யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆயுர்வேத வைத்தியத்திற்கு தேவையான தாளங்காயைத் தேடி பலர் இங்கு வருவதும் சிறப்பாகும்.

இப்பிரதேசத்தின நிலவளத்தினைப் பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்ப காலத்தில், விவசாயிகள் துலா மிதித்து நீர் பாய்ச்சி விவசாயம் செய்தமை அறிய முடிகிறது. இதற்குச் சான்றாக உரும்பிராய், பலாலி வீதியில், கற்பகப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் தபால் நிலையம் இயங்குகின்ற கட்டடத்தின் முகப்பில் துலா மிதித்து நீர் பாய்ச்சும் ஓவியம் காணப்படுகின்றது. இக் கட்டடமானது ஆரம்பத்தில் நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடமாகும். இவ் ஓவியமானது இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் முன்னோரால் அமைக்கப்பட்டதாகும்.

மேலும் நெல், வாழை, வெங்காயம், மிளகாய், கோவா, லீக்ஸ், பீற்றூட், கரட், கறணை, மரவள்ளி, இராசவள்ளி, மோதகவள்ளி, திராட்சை புகையிலை, என மரக்கறிப் பயிர்களும், உப உணவுப் பயிர்களும், மிகப் பெரிய அளவில் செய்கை பண்ணப்பட்டு குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு மட்டுமன்றி, தென்னிலங்கைக்கும், உலக நாட்டிற்கும் சந்தைப்படுத்தப்படுகின்றது. இவ் விவசாயத்தை, மேம்படுத்தும் முகமாக, புத்தூர் கமநல சேவை நிலையம், உரும்பிராய் கமநல சேவை நிலையம், நீர்வேலி ஐக்கிய வாழைக்குலை சங்கமும் விளங்குகின்றது.

மனித வாழ்க்கைக்கு உடலுறுதி மிகவும் முக்கியமானது. அதுமட்டுமன்றி மனோதிடம். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்வியை சமமாகப் பேணும் மனப்பாங்கு என்பன இன்றியமையாததாகும். இவற்றைக் கற்றுக் கொடுக்கும் இடங்கள் விளையாட்டு மைதானங்களாகும். அந்த வகையில், இப் பிரதேசத்தின் கிழக்கெல்லை சமதரையான முற்ற வெளியாகவுள்ளதால் நீர்வேலி, ஆவரங்கால் பகுதிகளில் சவாரித்திடல் அமைக்கப்பட்டு, காலத்துக்குக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெற்று வருவது இப்பிரதேசத்திற்கு கிடைத்த பெரும் வளம் என்று கூறலாம். இவ் மாட்டுவண்டிச் சவாரியைக் காண யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கிராமங்களிலிருந்தும் பெருந்தொகையான இரசிகர்கள் கூட்டம் முண்டியடித்து வரும். மாடுகளின் வேகத்தை கூட்டுவதற்காக ஆசனப் பலகையிலிருந்து சாரதி ஊசி பொருந்திய துவரந்தடியினால் மாடுகளின் பின் தொடைப் பகுதியில் குத்துவதும், அவை வெருண்டோடுவதும் சுவாரஸ்யமான நிகழ்வுகளாகும். இதனிடையே வண்டிச் சில்லு கழன்றோடுவதும், சாரதி மற்றும் உதவியாளர்கள், தரவையில் விழுந்து உருளுவதும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். இவை வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வுகள் என்றால் மிகையாகாது. மாட்டு வண்டிச் சவாரி மட்டுமன்றி கிட்டி அடி, கிளித்தட்டு, மாங்கொட்டை போடுதல் என்பன பண்டிகைக் காலங்களான, தீபாவளி வருடப் பிறப்பினை முன்னிட்டு கொண்டாடப்பட்ட விளையாட்டுகள் என அறிய முடிகிறது.


இப் பிரதேசத்தின் நீர் வளத்தினை மேலும் எடுத்தியம்பும் வகையில், அதிசயமான, அற்புதமான இடங்களைப் பார்க்க வேண்டுமென நாடுவோர் புத்தூர் பிரதேசத்திற்குட்பட்ட நிலாவரைக் கிணற்றையும், உரும்பிராய் பிதேசத்திற்குட் பட்ட ஊரெழு பொக்கணைக் கிணற்றையும் பார்ப்பதற்காகச் செல்வர். வீடுகள் தோறும் கிணறுகள் இருக்கும் போது இக்கிணறுகளில் மட்டும் என்னதான் விசேடம் இருக்கிறது? என்பது அறியாதாரின் கேள்வியாக இருக்கும்.

கிணறுகள் எல்லாம் மனித எத்தனத்தில் தோண்டப்படுவனவாக இருக்கை யில், இங்கு குறிப்பிடப்பட்டவை மட்டும் தானாகவே தோன்றின என்பது ஊர் மக்களின் நம்பிக்கையாகவுள்ளது. வீட்டில் உள்ள சாதாரண கிணறுகள் ஒன்றரை தொடக்கம் இரண்டரை மீற்றர் விட்டமுடையனவாக இருக்கின்றன. நிலாவரைக் கிணறு ஏறத்தாழ பத்து மீற்றர் (10m) நீளத்தையும் அதே அளவு அகலத்தையும் உடையதாக, சதுர வடிவானதாக இருக்கிறது. இதன் ஆழமும் மிகக் கூடுதலாக உள்ளது. ஏனைய கிணறுகள் வற்றும் இயல்புடையவை. நிலாவரைக் கிணறோ என்றும் வற்றாத நீர்வளமாக உள்ளது. நிலாவரைக் கிணறு தரையில் இருந்து ஏழு மீற்றர் (7m) ஆழத்தில் நீர் மட்டத்தைக் கொண்டுள்ளன.

ஊரெழு கிராமம் வற்றாத "பொக்கணை" நீர் ஊற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நீர் ஊற்று மாரி காலங்களில் நீரை வெளியே தள்ளி வெள்ளத்தை ஏற்படுத்தும். பின்பு அவ்வளவு நீரையும் உறிஞ்சி உள்வாங்கும் தன்மை உடையது. இக் கிணறு தரையில் இருந்து ஒன்றரை மீற்றர் (1½m) ஆழத்தில் நீர் மட்டத்தைக் கொண்டுள்ளது. மேலும் இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி கௌரவ.டி.எஸ்.சேனநாயக்கா காலத்தில், காற்றாடி பொருத்தி இந்நீருற்றில் இருந்து நீரை எடுத்ததாக அறிய முடிகிறது. இதற்குச் சான்றாக இங்கு பாரிய தொட்டியுடன், வயல்நிலங்களும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிலாவரைக் கிணறு
**Nilavarai Bottomless well**



அக்கரை கடற்கரை
**Akkarai Beach**



பொக்கணை நீரூற்று
**Pokkanai (Urelu) Bottomless well**



குதியடிக் குளம்
**Kuthiyadi Kulam**

இக்கிணறுகளின் தோற்றம் குறித்துப் பல்வேறு கர்ண பரம்பரைக் கதைகள் நம்மிடையே உள்ளன. இராமாயண காலத்தில் இலங்கைக்கு வந்த வானரப் படைகளுக்குத் தண்ணீர்த்தாகம் ஏற்பட்டதால் இராமன் தனது வில்லினால் குத்தி நீர் எடுத்த இடமே நிலாவரைக் கிணறு என்றும், வானரப் படையினர் நீர் அருந்திய இடத்தில் தானும் நீர் அருந்த விரும்பாத இராமன் ஊரெழுவில் தோண்டி நீர் அருந்திய இடமே பொக்கணைக் கிணறு என்றும் கூறப்படுகிறது. சாதாரணமாக மனிதர்களால் இத்தகைய கிணறுகளைத் தோண்டுவது சாத்தியமில்லையாதலால் இத்தகைய கர்ண பரம்பரைக் கதைகள் உலாவுவது தவிர்க்க முடியாததே. இது எவ்வளவிற்கு உண்மையானதென்பதும் நீண்ட ஆய்வுக்குரியதே.

இக் கிணறுகள் எப்படி உருவாகின என்பதற்கு அறிவியலாளர் கூறும் விளக்கத்தை நோக்குவோம். யாழ்ப்பாணக் குடாநாடு மயோசீன் காலச் சுண்ணாம்புக் கற்களால் ஆனது. நீர உட்புக விடும் தன்மை இதற்கு உண்டு. பெய்கின்ற மழைநீர் உட்கசிந்து வன்மையான பாறை நீராகத் தேங்கியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைநீர் வளியினூடாகப் பெய்யும் போது அதனுடன் காபனீரொட்சைட்டு (CO) கலக்கிறது. அம்மழைநீர் காபோனிக் அமிலமாக (I,CO) மாறுகிறது. இங்குள்ள மயோசீன் சுண்ணக் கற்கள் கல்சியம் காபனேற் (CaCO) என்ற இராசயனப் பதார்த்தத்தை உடையனவாகும். கல்சியம் காபனேற்றைக் காபோனிக் அமிலம் கரைத்துவிடக் கூடியது. இதன் காரணமாகச் சுண்ணப் பாறைகளைக் கரைத்து நீர் உட்செல்கிறது. பாறைகள் கரையும் போது சில இடங்களில் தரையின் கீழ், பெரிய பள்ளங்கள் உருவாகிவிடுகின்றன. அத்தகைய பள்ளங்கள் பெரும் நீர்க்குகைளாகவும் விளங்கக் கூடும். இவற்றுள் பெருமளவு நீர் தேங்கி நிற்கிறது. அவையே வற்றாக் கிணறுகள் ஆகின்றன. எது எவ்வாறெனினும் எங்கள் பிரதேச வற்றாத நீர் வளமாக, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக, இக் கிணறுகள் விளங்குகின்றது.

மேலும் கண்ணைக் கவரும் இடங்களில் அச்சுவேலி பிரதேசத்தில் அமைந்துள்ள அக்கரை சுற்றுலா மையம், விளங்குகின்றது. சுற்றுலாப் பயணிகள் மட்டுமன்றி இங்கு சிறுவர் பூங்கா இருப்பதால் நாளாந்தம் பொழுது போக்கிற்காக வருகை தருவோரும் உள்ளனர். இதன் மூலமும் சபைக்கான வருமானம் ஈட்டப்படுகின்றது. மேலும் இங்கு அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை, மாவட்ட சுதேச சித்த வைத்திய நிலையம், சுதேச சித்த மருந்து உற்பத்தி நிலையம், சிறுவர் நன்னடத்தை சான்று பெற்ற பாடசாலை, கைத்தொழில்பேட்டை (தேங்காண் எண்ணெய் உற்பத்தி, காகிதாதிகள் உற்பத்தி, ஆணி உற்பத்தி, கால்நடைத் தீவணம், கோழி முட்டை உற்பத்தியும் குஞ்சும், பேக்கறி) குறிப்பிடத்தக்கது. மாவட்ட சுதேச சித்த வைத்திய நிலையத்திற்கு வெளி இடங்களிலிருந்து மட்டுமன்றி, வெளிநாடுகளிலிருந்தும் வைத்தியம் செய்யப் பலர் வருகின்றனர் என அறிய முடிகிறது. மேலும் புத்தூர் மத்திய மருந்தகம், கோப்பாய் பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை என்பனவும் அமைந்துள்ளன. நீர்வேலியில் கண்ணாடித் தொழிற்சாலை, கைத்தறி நெசவு ஆலை இருந்து நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அழிவடைந்துள்ளது.

இப் பிரதேசத்தின் கல்வி நிர்வாக அமைப்பில், பெருமைக்குரிய பாடசாலைகள், கோட்டக் கல்வி அலுவலகம், மற்றும் ஆசிரியர் பயிற்சி நெறிகளை வழங்குவதற்கான யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பன கோப்பாயில் அமைந்திருப்பதும் இதன் தனிச் சிறப்பாகும்.

மேலும் நுண்நிதி நிறுவனங்களான வங்கிகள், கைத்தறி நெசவு மையம், பனம் பொருள் உற்பத்தி நிலையம், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் என்ற வகையில், அச்சுவேலி, நீர்வேலி ஆகியவற்றின் கீழ் இயங்கும் சங்கக் கிளைகள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள், மற்றும் சிறுப்பிட்டி, இருபாலை தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் என்பனவும் அமைந்துள்ளன. இவ் எரிபொருள் நிரப்பு நிலையங்களானவை, நாட்டில் நிலவிய பொருளாதார தடைகளின் போது பொது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு மட்டுமன்றி அரச, தனியார் துறைகளில் கடமை புரிபவர்களுக்குத் தேவையான எரிபொருட்களை வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப் பிரதேசத்தின் எல்லைப் பகுதிகளைப் பொறுத்த வரையில், வண்ணாத்திப்பாலம், கைதடி நாவற்குழிப்பாலம், தொண்டமானாற்று பாலம், அண்மைக் காலத்தில் சறுக்கும் பாலம் எனப் பெயர் பெற்ற, வல்லைப்பாலம், என்பனவும் எல்லயையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**கிராம சேவையாளர் பிரிவுகளும், இலக்கமும் :**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொ. இல | கிராமசேவையாளர் பிரிவு | இல |
|---|---|---|
| 01 | இருபாலை தெற்கு | J/257 |
| 02 | இருபாலை கிழக்கு | J/258 |
| 03 | கல்வியங்காடு | J/259 |
| 04 | கோப்பாய் தெற்கு | J/260 |
| 05 | கோப்பாய் மத்தி | J/261 |
| 06 | கோப்பாய் வடக்கு | J/262 |
| 07 | உரும்பிராய் மேற்கு | J/263 |
| 08 | உரும்பிராய் வடக்கு | J/264 |
| 09 | உரும்பிராய் தெற்கு | J/265 |
| 10 | உரும்பிராய் கிழக்கு | J/266 |
| 11 | ஊரெழு | J/267 |
| 12 | நீர்வேலி தெற்கு | J/268 |
| 13 | நீர்வேலி வடக்கு | J/269 |
| 14 | நீர்வேலி மேற்கு | J/270 |
| 15 | சிறுப்பிட்டி கிழக்கு | J/271 |
| 16 | சிறுப்பிட்டி மேற்கு | J/272 |
| 17 | புத்தூர் மேற்கு | J/273 |
| 18 | புத்தூர் வடக்கு | J/274 |
| 19 | நவக்கிரி | J/275 |
| 20 | ஆவரங்கால் கிழக்கு | J/276 |
| 21 | ஆவரங்கால் மேற்கு | J/277 |
| 22 | புத்தூர் கிழக்கு | J/278 |
| 23 | அச்செழு | J/279 |
| 24 | வாதரவத்தை | J/280 |
| 25 | பத்தைமேனி | J/281 |
| 26 | தம்பாலை, கதிரிப்பாய் | J/282 |
| 27 | இடைக்காடு | J/283 |
| 28 | வளலாய் | J/284 |
| 29 | அச்சுவேலி வடக்கு | J/285 |
| 30 | அச்சுவேலி தெற்கு | J/286 |
| 31 | அச்சுவேலி மேற்கு | J/287 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டார இலக்கங்களும், வட்டாரங்களும்




| வட்டார இல. | வட்டாரம் | வட்டார இல. | வட்டாரம் |
|---|---|---|---|
| 01 | வளலாய் | 12 | உரும்பிராய் வடக்கு |
| 02 | பத்தமேனி | 13 | உரும்பிராய் கிழக்கு |
| 03 | அச்சுவேலி மேற்கு | 14 | நீர்வேலி |
| 04 | அச்சுவேலி தெற்கு | 15 | நீர்வேலி வடக்கு |
| 05 | ஆவரங்கால் | 16 | கோப்பாய் வடக்கு |
| 06 | வாதரவத்தை | 17 | உரும்பிராய் தெற்கு |
| 07 | புத்தூர் கிழக்கு | 18 | உரும்பிராய் மேற்கு |
| 08 | புத்தூர் மேற்கு | 19 | கோப்பாய் மத்தி |
| 09 | சிறுப்பிட்டி | 20 | கோப்பாய் தெற்கு |
| 10 | அச்செழு | 21 | கல்வியங்காடு |
| 11 | ஊரெழு | 22 | இருபாலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபைக்குரிய வாகனங்கள்

| | வாகன விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | லான்ட் மாஸ்ரர் | 01 குபேட்டா |
| 02 | முச்சக்கர மோட்டார் வண்டி | 01 பஜாஜ் |
| 03 | மோட்டார் சைக்கிள் | 01 (சிடி 200 கொண்டா) |
| 04 | நான்கு சில்லு உழவு இயந்திரம் | 08 |
| 05 | மோட்டார் லொறி (பிக்கப்) | 01 |
| 06 | Gully Bowser | 01 |
| 07 | Double Cap | 01 |
| 08 | கன்ரர் | 01 |
| 09 | Water Bowser | 03 |
| 10 | உழவு இயந்திரப் பெட்டி | 08 |

## சேவைகள்

### ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள வீதிகளின் நீளம்

| வீதி வகை | எண்ணிக்கையும் நீளமும் (கி.மீ) |
|---|---|
| தார் | 526 எண் (231.74 கி.மீ) |
| மண் | 555 எண் (125.80 கி.மீ) |
| கொங்கிறீற் | 25 எண் (4.90 கி.மீ) |
| கார்ப்பற் | 7 எண் (5.88 கி.மீ) |
| கால்வாய்கள் | 56 எண் ( 7694 மீற்றர்) |
| ஏனைய திணைக்களங்கள் அதிகார சபையினால் பேணப்படும் வீதிகள் | 70 கி.மீ |

### பிரதேச சபைக்கு சொந்தமானவை

| இல | நிறுவனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஆயுர்வேத வைத்தியசாலைகள்<br>பிரதான வைத்தியசாலைகள் - 02<br>கிளை வைத்தியசாலைகள் - 02 | 04 |
| 02 | நூலகங்கள் | 05 |
| 03 | பொதுச் சந்தைகள் | 05 |
| 04 | கடைத் தொகுதிகள் | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 05 | இறைச்சிக் கடைகள் | 12 |
| 06 | கொல்களங்கள் | 01 |
| 07 | மயானங்கள் | 38 |
| 08 | பொதுக் கிணறுகள் (வெட்டு) | 48 |
| 09 | பொதுக் குழாய்க் கிணறுகள் | 06 |
| 10 | பொது மலசலகூடங்கள் | 05 |
| 11 | முன்பள்ளிகள் | 03 |
| 12 | சுற்றுலா மையங்கள் | 03 |
| 13 | வீதி விளக்குகள் | 1516 |

**ஏனைய சேவை வழங்கும் அரச நிறுவனங்கள்/ சமூக அமைப்புக்கள்**

| இல | நிறுவனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கர்ப்பிணி தாய்மார், குழந்தைகள் சிகிச்சை நிலையங்கள் | 13 |
| 02 | சனசமூக நிலையங்கள் | 132 |
| 03 | அரசினர் வைத்தியசாலை | 02 |
| 04 | அரச மருந்தகங்கள் | 04 |
| 05 | விளையாட்டு மைதானங்கள், பூந்தோட்டங்கள் | இல்லை |
| 06 | பாடசாலைகள் | 38 |
| 07 | வலயக்கல்வி அலுவலகம் | 01 |
| 08 | பிரதேசத்தில் இயங்கும் தனியார் முன்பள்ளிகள் | 75 |
| 09 | தொலைபேசி கோபுரங்கள் | 20 |
| 10 | திருமண மண்டபங்கள் | 09 |
| 11 | திரையரங்கு | 01 |
| 12 | பொது மண்டபங்கள் | 04 |
| 13 | பேருந்து நிலையங்கள் (தொடங்கும் இடம்) | 01 |
| 14 | பேருந்து தரிப்பிடங்கள் | 52 |
| 15 | விளையாட்டுக் கழகங்கள் | 59 |
| 16 | கிராம அபிவிருத்திச் சங்கங்கள் | 31 |
| 17 | மகளீர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் | 30 |
| 18 | பொலிஸ் நிலையங்கள் | 02 |
| 19 | தபாலகங்கள் 05 (பிரதான) | 10 (உப) |
| 20 | பாலர் பகல் பராமரிப்பு விடுதிகள் | 02 |
| 21 | முதியோர் இல்லங்கள் | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வங்கிகள்**

| இல | வங்கிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | இலங்கை வங்கி | 04 |
| 02 | மக்கள் வங்கி | 04 |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி | 01 |
| 04 | ஹற்றன் நசுஷனல் வங்கி | 01 |
| 05 | வர்த்தக வங்கி | 01 |
| 06 | கிராமிய வங்கி | 05 |
| 07 | சமுர்த்தி வங்கி | 03 |

## ஆளணி - 2024

| பதவிப் பெயர் | நடப்பு வருடத்தில் அங்கீகரித்த தொகை - 2023 ஆரம்பம் | நடப்பு வருடத்தில் மேலதிகமாக அங்கீகரித்த தொகை | வரவு செலவு திட்ட வருடத்திற்கு அங்கீகரித்த தொகை -2024 |
|---|---|---|---|
| **நாடளாவிய சேவைப்பகுதி** | | | |
| ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் | 2 | - | 2 |
| **அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகள்** | | | |
| செயலாளர் (மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அதி சிறப்பு) | 1 | - | 1 |
| உள்ளூராட்சி உதவியாளர் | 1 | - | 1 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 10 | - | 10 |
| மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 28 | - | 28 |
| நூலகர் | 5 | - | 5 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 5 | - | 5 |
| வருமான பரிசோதகர் | 5 | - | 5 |
| பாலர் பாடசாலை ஆசிரியர் | 4 | - | 4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| **அட்டவணைப்படுத்தப்படாத பதவிகள்** | | | |
| வேலை/ வெளிக்கள மேற்பார்வையாளர் | 1 | - | 1 |
| சந்தை மேற்பார்வையாளர் | 1 | - | 1 |
| காரியாலய காரிய சகாயர் | 8 | - | 8 |
| காவலாளி | 5 | - | 5 |
| சாரதி | 4 | - | 4 |
| மின் இணைப்பாளர் | 1 | - | 1 |
| வேலை வெளிக்கள தொழிலாளி | 15 | - | 15 |
| ஆயுர்வேத மருந்தாளர் | 2 | - | 2 |
| நூலக பரிசாரகர் | 5 | - | 5 |
| நூலக பரிசாரகர் (தனிப்பட்டது) | 1 | - | 1 |
| சுகாதார மேற்பார்வையாளர் | 1 | - | 1 |
| சுகாதார தொழிலாளி | 22 | - | 22 |
| சுகாதார தொழிலாளி (தனிப்பட்டது) | 6 | - | 6 |
| மொத்தம் | 133 | - | 133 |

**உள்ளூராட்சி நிறுவனமொன்றின் ஆதன முகாமைத்துவம்**

உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டியதும், அதற்குரியதும் அதன் மூலம் உபயோகப்படுத்துகின்ற சகல விதமான ஆதனங்களுமாகும். அதாவது சொத்துக்கள், நிதி, மற்றும் ஆளனி என்பனவாகும். குறிப்பாக ஆதன முகாமைத்துவத்திற்குள் உள்ளடங்குவது "சொத்து" தொடர்பான முகாமைத்துவம் ஆகும்.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தினால் உபயோகப்படுத்தும், அசையா சொத்து, அசையும் சொத்து என இரு வகையாகப் பிரிக்கலாம். இதில் அசையா சொத்துக்கள் எனும் போது, காணி, கட்டிடங்கள், வேறு நிரந்தர நிர்மாணங்களும், அமைப்புக்களும் ஆகும். இங்கு காணி பற்றி நோக்குகையில், உள்ளூராட்சி நிறுவனத்திற்குரிய அலுவலகங்கள் அமைந்துள்ளதும், வேறு கட்டிடங்கள் அமைந்துள்ளதும், நிறுவனத்திற்குரிய வெற்றுக்காணி மற்றும் திறந்த வெளிகள், பாதைகள் மற்றும் அவைகளின் பாதுகாக்கப்பட்ட காணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடங்கள் எனும் போது பிரதான அலுவலகம், உப அலுவலகம், நகர/பிரதேச மண்டபம், உத்தியோகபூர்வ வாசஸ்த்தலம், வாடகை வீடு, பொருட்கள் களஞ்சியம், கராஜ்கள், டிப்போ, வேலைத்தளம், நூலகங்கள், சன சமூக மண்டபம், சன சமூக நிலையங்கள், முன்பள்ளிகள், சுகாதார நிலையங்கள், தாய்சேய் நிலையங்கள், மருந்துசாலைகள், பொதுச் சந்தைகள், கிழமை/நாள் சந்தை, கடைகள், பொது மலசலகூடம், மயானங்கள், விளையாட்டு அரங்குகள், தீயணைக்கும் சேவை நிலையங்கள் என்பவற்றை குறிப்பிடலாம்.

வேறு நிரந்தர நிர்மாணங்கள் அமைப்புக்களாக, மதகுகளும், பாலங்களும். பாதசாரி, காண்கள் மற்றும் வடிகால் அமைப்புக்கள், மலசல வடிகால் தொகுதிகள், சுற்று வட்டங்கள், பாதுகாப்பு கட்டுகளும், சுவர்களும், நீர்த்தடாகங்கள், நீரத் தாங்கிகள், நீர்க்குழாய்கள், நீர்வழங்கல் தொகுதிகள், தெருவிளக்கு தூண்களும், தெரு விளக்குகளுமாகும்.

அசையும் சொத்துக்கள் பற்றி நோக்குகையில் அலுவலகப் பொருட்கள், துறைகள் சார்ந்த பொருட்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இதில் அலுவலகப் பொருட்கள் வரிசையில், அலுவலக உபகரணங்கள் எனும் போது, புகைப்பட பிரதி இயந்திரம், கணனித் தொகுதி, தட்டெழுத்து இயந்திரம், அச்சு இயந்திரம், புத்தகம் கட்டும் இயந்திரம், போன்றவையும், அலுவலகத் தளபாடங்கள் என்ற ரீதியில், அலுமாரி, கெபினெட், புத்தக ராக்கை, மேசை, கதிரைகள் போன்றவையும், சுகாதார சிகிச்சைகளுக்கான பொருட்களாக, கட்டில், நிறை அளவிடும் துலாம், இரசாயன கூட உபகரணங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

துறை சார்ந்த பொருட்கள் எனும் போது, வாகனம், இயந்திரங்கள், துறைகளில் பயன்படுத்தும் இயந்திரங்கள், ஆயுதங்கள் ஆகும். வாகனம் என்ற வகையில், மோட்டார் வாகனம், தீயணைக்கும் வண்டிகள், குப்பைகள் அகற்றும் இயந்திரம், பவுசர்கள், கலிபவுசர், அம்புலன்ஸ் வண்டிகள், போன்றனவும், இயந்திரங்கள் என்ற வகையில், பெக்கோ இயந்திரம், கொங்கிரீட் கலவை இயந்திரம், மண்வெட்டும் இயந்திரம், தண்ணீர் பாய்ச்சும் இயந்திரம், மரக்கிளை வெட்டும் இயந்திரம், துறைகளில் பயன்படுத்தும் இயந்திங்களாக, விளையாட்டு மைதானங்களில் பொருத்தப் பட்டுள்ள உபகரணங்கள், பூங்காக்களில். பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள், ஆயுதங்கள், விளையாட்டுப் பொருட்களைக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டிட விண்ணப்ப அனுமதிப்பத்திரம் பெறுதல் தொடர்பான தகவல்கள்

- விண்ணப்பம் குறித்த உள்ளூராட்சி சபையில் பதிவு செய்யப்பட்ட பட வரைஞரால் (100 சதுர மீற்றருக்கு உட்பட்டதாயின் விண்ணப்பதாரியினால் பூர்த்தி செய்யப்படலாம்) பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்ட விதிகளுக்கு அமைவாக வரையப்பட்ட கட்டிட வரைபடத்தின் மூன்று பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (கோரப்படும் பட்சத்தில் மேலதிக பிரதிகள்)

  (பதிவு செய்துள்ள படவரைஞர் விபரத்தினை தலைமை அலுவலகம் மற்றும் உபஅலுவலகங்களில் பார்வையிடலாம்)

- கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட பின்னரே கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

- தவறும் பட்சத்தில் அனுமதியற்ற/அனுமதிக்கு முன்னரான கட்டடமாக கருதப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- கட்டிடம் அமையவுள்ள ஆதனத்திற்கு தனியான ஆதன இலக்கம் இருத்தல் வேண்டும்.

- தனியான ஆதன இலக்கம் இல்லாத சந்தர்ப்பத்தில் உபஅலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, காணி உபபிரிவிடுகை செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதுடன், ஆதன இடாப்பில் பெயர் மாற்றம் செய்வதனூடாக தனியான ஆதன இலக்கத்தினை பெற்றுக் கொள்ள முடியும்.

- 500 *Sq.m* ற்கு மேற்பட்ட குடியிருப்பு மற்றும் 200*Sq.m* ற்கு மேற்பட்ட வர்த்தகம் சார்ந்த கட்டடம் ஆயின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பூர்வாங்க திட்டமிடல் அனுமதி பெறப்படல் வேண்டும்.

  (தேவைப்படும் பட்சத்தில் மாற்றப்படலாம்.)

- 2020ஆம் ஆண்டிற்கு பின்னர் (2021 முதல் பிரிவிடல் செய்யப்பட்ட Sub Division சகல ஆதனங்களுக்கும் நில அளவைப்பட அனுமதி மற்றும் அதற்கான COC பெறப்பட வேண்டும்.

- 2020ஆம் ஆண்டிற்கு பின்னர் (2021 முதல்) யாதேனும் ஆதனங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு அவ் ஆதனத்தில் கட்டடம் அமையுமாயின் ஆதன ஒருங்கிணைப்பிற்கான (Amalgamation) அனுமதி பெறப்படல் வேண்டும்.

- ஆதன உறுதி மற்றும் சபையின் ஆதன இடாப்பிலுள்ள ஆதன உரிமை யாளரின் விபரம் என்பன ஒரே நபரை குறிப்பதாக இருத்தல் வேண்டும்.

- குறித்த ஆதனத்திற்கான ஆதன வரி முழுமையாகச் செலுத்தப்பட்டு பிரதி இணைக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விண்ணப்பதாரி ஆதன உடமையாளராக அல்லாத சந்தர்ப்பத்தில், அவருக்கு ஆதன உரிமையாளரால் வழங்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட தத்துவ அதிகாரத்தின் (Power of Attorney) உறுதிப்படுத்தப்பட்ட பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
- நிர்வாக சபைகள் / பொது அமைப்புகள் சார்பில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது இந்நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கென பொதுவான பிரதிநிதி நியமிக்கப்பட்டு நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- நில அளவைப்படம், ஆதன உறுதி என்பவற்றின் மூலப்பிரதி காண்பிக்கப் படுவதுடன், நிழற் பிரதியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- ஆதன உறுதிக்கும் நில அளவைப்படத்திற்கும் இடையே விஸ்தீரண வேறுபாடு இருக்கக்கூடாது. இருப்பின் வேறுபாட்டிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்ட ரீதியான ஆவணம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- ஏற்கனவே ஆதனத்தில் யாதேனும் கட்டடம் இருக்குமாயின் புதிதாக அமைய வுள்ள கட்டிடத்தின் வரைபடத்தில் ஏற்கனவே ஆதனத்தில் அமைந்துள்ள கட்டிடத்தின் அமைப்பு காட்டப்படல் வேண்டும் என்பதுடன், புதிதாக அமையவுள்ள கட்டிடத்தை வேறுபடுத்திக் காட்டுவதற்கு ஏதுவாக புதிதாக அமையவுள்ள கட்டிடம் சிவப்பு நிறம் வேறுபடுத்தப்பட்டு காட்டப்படல் வேண்டும். மற்றும் ஏற்கனவே உள்ள கட்டடம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் விதிமுறைக்குட்படுத்தப்படல் வேண்டும்.
- அபிவிருத்தி தொடர்பில் யாதேனும் திணைக்களங்களின் சிபார்சு (RDA, RDD போன்றவை மற்றும் நிபுணத்துவம் சார் வல்லுநர்களது அறிக்கை / ஒப்புதல் பட்டய பொறியியலாளர், தீயணைப்பு அறிக்கை போன்றன) தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அதனைப் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- வரைபடத்தில் மழைநீர் சேகரிப்பு விடயம் உள்ளடக்கப்படல் வேண்டும்.
- சமையலறை, குளியலறை என்பவற்றிலிருந்து வரும் கழிவு பொது வடிகாலுக்கோ ஆதனத்துக்கு வெளியிலோ செல்லாதவாறு வரைபடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், கழிவு நீர் செல்வதற்கு ஆதனத்தில் போதிய இடவசதியற்ற சந்தர்ப்பத்தில் கழிவு நீர் தொட்டிக்கான அமைப் பினையும் வரைபடத்தில் காண்பித்தல் வேண்டும்.
- அனுமதிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் கட்டட வேலைகள் பூர்த்தியடையாத சந்தர்ப்பத்தில் உரிய முறையில் விண்ணப்பித்து கால நீடிப்பினை பெற்றுக் கட்டட வேலைகளைத் தொடர முடியும்.
- கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் உரிய முறையில் விண்ணப் பித்து, குடிபுகு அமைவுச்சான்றிதழ் பெற்ற பின்னரே கட்டடத்தினைப் பாவனைக்கு உட்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை எல்லைக்குள் இயங்கும் முன்பள்ளிகளின் விபரம்

| இல. | முன்பள்ளி | முகவரி |
|---|---|---|
| 01. | கணேசா முன்பள்ளி | கற்பகப்பிள்ளையார் வீதி, உரும்பிராய் வடக்கு |
| 02. | இலக்குமி முன்பள்ளி | உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் |
| 03. | உரும்பிராய் கிட்ஸ் பாக் | முருகன் வீதி, உரும்பிராய் |
| 04. | சின்ன மருதா முன்பள்ளி | யோகபுரம், உரும்பிராய் தெற்கு |
| 05. | கிராம முன்.சங்க முன்பள்ளி | ஞானவைரவர் கோவிலடி, உரும்பிராய் தெற்கு |
| 06. | உதயசூரியன் முன்பள்ளி | செல்வபுரம், உரும்பிராய் தெற்கு. |
| 07. | கனிமொழி முன்பள்ளி | அன்னாங்கை வீதி, உரும்பிராய் மேற்கு. |
| 08. | செல்லப்பா முன்பள்ளி | செல்லப்பா வீதி, உரும்பிராய் கிழக்கு. |
| 09. | சென்.மைக்கல் முன்பள்ளி | உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். |
| 10. | காந்திஜீ முன்பள்ளி | உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். |
| 11. | முத்தமிழ் முன்பள்ளி | பொக்கணை வீதி, ஊரெழு மேற்கு. |
| 12. | வளர்பிறை முன்பள்ளி | ஊரெழு கிழக்கு. |
| 13. | பாரதிதாசன் முன்பள்ளி | ஊரெழு கிழக்கு. |
| 14. | கலைவாணி முன்பள்ளி | ஊரெழு கிழக்கு, சுன்னாகம். |
| 15. | சிவசக்தி முன்பள்ளி | ஊரெழு கிழக்கு, ஆனந்தகானம். |
| 16. | பாரதி முன்பள்ளி | ஊரெழு மேற்கு, சுன்னாகம் |
| 17. | கஜமுகன் முன்பள்ளி | பிள்ளையார் கோவிலடி, அச்சுவேலி தெற்கு. |
| 18. | ஸ்ரீவிக்னேஸ்வரா முன்பள்ளி | அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. |
| 19. | தந்தை செல்வா முன்பள்ளி | செல்வநாயகபுரம், அச்சுவேலி மேற்கு. |
| 20. | மழலைகள் கல்விப்பூங்கா | தோப்பு, அச்சுவேலி மேற்கு. |
| 21. | வாணி முன்பள்ளி | நவக்கிரி மேற்கு, புத்தூர். |
| 22. | குழந்தை யேசு முன்பள்ளி | லங்கா மாதா மடம், அச்சுவேலி. |
| 23. | இந்து இளைஞர் முன்பள்ளி | நவக்கிரி, புத்தூர். |
| 24. | சரஸ்வதி முன்பள்ளி | நவக்கிரி மேற்கு, புத்தூர். |
| 25. | விநாயகர் முன்பள்ளி | பத்தமேனி விநாயகர் கோவிலடி, அச்சுவேலி. |
| 26. | கதிரொளி முன்பள்ளி | அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. |
| 27. | தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி | பிரதான வீதி, அச்சுவேலி. |
| 28. | புவனேஸ்வரி அம்பாள் முன்பள்ளி | பாடசாலை வீதி, கிழக்கு இடைக்காடு. |
| 29. | பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் | நீர்வேலி தெற்கு. |
| 30. | காமாட்சி அம்பாள் முன்பள்ளி | நீர்வேலி வடக்கு, நீர்வேலி. |
| 31. | சிவசக்தி முன்பள்ளி | நீர்வேலி வடக்கு, நீர்வேலி. |
| 32. | சிகரம் முன்பள்ளி | கோண்டாவில் வீதி, இருபாலை. |
| 33. | சரஸ்வதி முன்பள்ளி | விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு. |
| 34. | கற்பகப்பிள்ளையார் முன்பள்ளி | கற்பகப்பிள்ளையார் வீதி அருகில், இருபாலை. |
| 35. | மருதம் கிட்ஸ் | டச்சு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். |
| 36. | ஞானபாஸ்கரோதயா முன்பள்ளி | விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு. |
| 37. | ராசன் முன்பள்ளி | இராச வீதி, கோப்பாய் மத்தி, கோப்பாய். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 38. | வெள்ளெருவப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளி | பிள்ளையார் கோவிலடி, கோப்பாய் மத்தி. |
| 39. | புனித மரியாள் முன்பள்ளி | கோப்பாய் மத்தி, கோப்பாய். |
| 40. | பாரதி கலாமன்ற முன்பள்ளி | இருபாலை கிழக்கு. |
| 41. | மக்கள் நலன் காக்கும் பிரிவு முன்பள்ளி | பலாலி வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். |
| 42. | வானவில் கிட்ஸ் | பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 43. | சமூகசேவா சங்க பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் | கோப்பாய் வடக்கு. |
| 44. | வசந்தநிலா முன்பள்ளி | VH லேண், இருபாலை கிழக்கு. |
| 45. | ஆவரங்கால் சர்வோதய முன்பள்ளி | சர்வோதயா வீதி, ஆவரங்கால் மேற்கு. |
| 46. | விவேகானந்தா முன்பள்ளி | இந்து இளைஞர் வீதி, ஆவரங்கால் மேற்கு. |
| 47. | ஆவரங்கால் மத்தி முன்பள்ளி | சிவன்கோவில் வீதி, ஆவரங்கால் மேற்கு. |
| 48. | கலையகம் முன்பள்ளி | ஆவரங்கால் கிழக்கு, மணற்பகுதி, புத்தூர். |
| 49. | அரிச்சுவடி முன்பள்ளி | ஆவரங்கால் மேற்கு, ஆவரங்கால். |
| 50. | கலைமதி - I முன்பள்ளி | கலைமதி வீதி, புத்தூர் மேற்கு. |
| 51. | விடிவெள்ளி முன்பள்ளி | சிவன் கோவிலடி, புத்தூர் மேற்கு. |
| 52. | வளர்மதி முன்பள்ளி | மருதடி, புத்தூர் வடக்கு. |
| 53. | உதயநிலா முன்பள்ளி | புத்தூர் வடக்கு. |
| 54. | கலைமதி - II முன்பள்ளி | கலைமதி, புத்தூர் மேற்கு. |
| 55. | புதுவை முன்பள்ளி | ஏரந்தனை, புத்தூர் வடக்கு. |
| 56. | ஸ்ரீசுப்பிரமணியர் முன்பள்ளி | கதிரிப்பாய், அச்சுவேலி. |
| 57. | வளலாய் மழலைகள் முன்பள்ளி | வளலாய் கிழக்கு, அச்சுவேலி. |
| 58. | ஸ்ரீ விக்னேஸ்வரா முன்பள்ளி | வீரவாணி, வாதரவத்தை, புத்தூர். |
| 59. | ஞானவாணி முன்பள்ளி | வீரவாணி, வாதரவத்தை, புத்தூர். |
| 60. | சரஸ்வதி முன்பள்ளி | சரஸ்வதி வீதி, புத்தூர் கிழக்கு. |
| 61. | குருநாதர் முன்பள்ளி | குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர். |
| 62. | மதி முன்பள்ளி | குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர். |
| 63. | மகாத்மாஜி முன்பள்ளி | ஈஸ்வரன் கோவிலடி, புத்தூர் கிழக்கு. |
| 64. | மகாத்மா காந்தி முன்பள்ளி | விக்னேஸ்வரா வீதி, புத்தூர். |
| 65. | கலைமகள் முன்பள்ளி | சிறுப்பிட்டி கிழக்கு, பன்னாலை. |
| 66. | ஜனசக்தி முன்பள்ளி | சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. |
| 67. | கலைஒளி முன்பள்ளி | சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. |
| 68. | மலர்மதி முன்பள்ளி | கொலனி, அச்செழு. |
| 69. | கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளி | அச்செழு, மத்தி. |
| 70. | ஒளிநிலா முன்பள்ளி | வேவிபுரம், அச்செழு. |
| 71. | வளர்மதி முன்பள்ளி | பூலசிட்டி, அச்செழு. |
| 72. | ஸ்ரீகணேசா முன்பள்ளி | நீர்வேலி மத்தி, நீர்வேலி. |
| 73. | விக்னேஸ்வரா முன்பள்ளி | புத்தூர் கிழக்கு. |
| 74. | இமானுவேல் முன்பள்ளி | பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு. |
| 75. | பகவான் முன்பள்ளி | நீர்வேலி வடக்கு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை நிர்வாகத்திற்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் விபரம்

| இல. | சனசமூக நிலையம் | முகவரி |
|---|---|---|
| 1. | கணேசா சனசமூகநிலையம் | கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உரும்பிராய் உபஅலுவலகம் உரும்பிராய் வடக்கு. |
| 2. | பாரதிதாசன் சனசமூகநிலையம் | உரும்பிராய் கிழக்கு. |
| 3. | சரஸ்வதி சனசமூக நிலையம் | உரும்பிராய் வடக்கு |
| 4. | நவசக்தி சனசமூக நிலையம் | உரும்பிராய் வடக்கு |
| 5. | வளர்பிறை சனசமூக நிலையம் | ஊரெழு கிழக்கு, உரும்பிராய் |
| 6. | செல்லப்பா சனசமூக நிலையம் | உரும்பிராய் கிழக்கு. |
| 7. | ஞானவைரவர் கோவிலடி சனசமூக நிலையம் | உரும்பிராய் தெற்கு |
| 8. | காந்திஜீ சனசமூக நிலையம் | உரும்பிராய் கிழக்கு |
| 9. | கலைவாணி சனசமூகநிலையம் | கரந்தன் நீர்வேலி, உரும்பிராய் உப அலுவலகம் |
| 10. | பாரதி சனசமூகநிலையம் | ஊரெழு மேற்கு, உரும்பிராய் உப அலுவலகம் |
| 11. | முத்தமிழ் சனசமூக நிலையம் | ஊரெழு மேற்கு, உரும்பிராய் உப அலுவலகம் |
| 12. | ஸ்ரீ வைத்தீஸ்வரா சனசமூக நிலையம் | உரும்பிராய் மேற்கு |
| 13. | அண்ணா சனசமூக நிலையம் | உரும்பிராய் தெற்கு |
| 14. | உதயசூரியன் சனசமூக நிலையம் | உரும்பிராய் தெற்கு |
| 15. | சென்மைக்கல் சனசமூக நிலையம் | உரும்பிராய் கிழக்கு |
| 16. | இளைஞர் சனசமூகநிலையம் | உரும்பிராய் மேற்கு |
| 17. | சர்வசக்தி சனசமூக நிலையம் | ஊரெழு கிழக்கு, உரும்பிராய் உபஅலுவலகம் |
| 18. | சரஸ்வதி சனசமூக நிலையம் | ஊரெழு மேற்கு, உரும்பிராய் உப அலுவலகம் |
| 19. | கோப்பாய் வடக்கு சனசமூக நிலையம் | கந்தசுவாமி கோயிலடி, கோப்பாய் வடக்கு |
| 20. | வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூகநிலையம் | கோப்பாய் மத்தி, கோப்பாய். |
| 21. | கலைவாணி சனசமூக நிலையம் | புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரம், இருபாலை தெற்கு, கோப்பாய் உப அலுவலகம். |
| 22. | முழுமதி சனசமூக நிலையம் | கோப்பாய் தெற்கு |
| 23. | பாரதி கலாமன்றம் சனசமூகநிலையம் | இருபாலை கிழக்கு, கோப்பாய் |
| 24. | ஸ்ரீ விக்னேஸ்வரா சனசமூக நிலையம் | வி.எச் லேன், கல்வியங்காடு, இருபாலை கிழக்கு, கோப்பாய் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 25. | ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் | முனிகோயிலடி, இருபாலை கிழக்கு, கோப்பாய் உபஅலுவலகம். |
| 26. | ஞானபாஸ்கரோதயா சனசமூக நிலையம் | கல்வியங்காடு, கோப்பாய் தெற்கு. |
| 27. | சிறிசபாபதி நாவலர் சனசமூக நிலையம் | கோப்பாய் வடக்கு |
| 28. | உதயதாரகை சனசமூக நிலையம் | கோப்பாய் தெற்கு |
| 29. | கதிர்ஒளி சனசமூக நிலையம் | கோப்பாய் தெற்கு, இருபாலை மடத்தடி. |
| 30. | ஞானஒளி சனசமூக நிலையம் | இருபாலை தெற்கு, கோப்பாய். |
| 31. | வள்ளியம்மன் சனசமூக நிலையம் | கோப்பாய் மத்தி |
| 32. | இராசன் சனசமூக நிலையம் | கோப்பாய் மத்தி |
| 33. | வன்னியசிங்கம் சனசமூக நிலையம் | அரசடி வீதி, இருபாலை கிழக்கு, கோப்பாய் உபஅலுவலகம் |
| 34. | கண்ணகி அம்மன் கோவிலடி சனசமூக நிலையம் | கோப்பாய் வடக்கு |
| 35. | சூரியோதயா சனசமூக நிலையம் | கோப்பாய் தெற்கு |
| 36. | அம்பிகை சனசமூக நிலையம் | கோப்பாய் மத்தி |
| 37. | அன்னை இந்திரா சனசமூக நிலையம் | V.H வீதி, இருபாலை கிழக்கு, கோப்பாய் உபஅலுவலகம். |
| 38. | ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் சனசமூக நிலையம் | நீர்வேலி தெற்கு |
| 39. | ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம் | நீர்வேலி வடக்கு |
| 40. | இளைஞர் சனசமூக நிலையம் | நீர்வேலி மத்தி |
| 41. | ஸ்ரீமுருகன் மாதர் சனசமூக நிலையம் | நீர்வேலி தெற்கு |
| 42. | ஸ்ரீ சுவர்ணா சனசமூக நிலையம் | நீர்வேலி மேற்கு |
| 43. | ஸ்ரீ சுப்பிரமணியம் சனசமூக நிலையம் | நீர்வேலி தெற்கு |
| 44. | ஸ்ரீ பரமேஸ்வரி சனசமூக நிலையம் | நீர்வேலி தெற்கு |
| 45. | காமாட்சியம்பாள் சனசமூக நிலையம் | நீர்வேலி வடக்கு |
| 46. | வீரபத்திரர் சனசமூகநிலையம் | நீர்வேலி தெற்கு |
| 47. | சென்மேரிஸ் சனசமூக நிலையம் | நீர்வேலி வடக்கு. |
| 48. | ஐங்கரன் சனசமூக நிலையம் | சடையகாடு, நீர்வேலி வடக்கு |
| 49. | புதுவையூர் சனசமூக நிலையம் | ஏரந்தனை புத்தூர் வடக்கு, புத்தூர் |
| 50. | குருநாதர் சனசமூக நிலையம் | புத்தூர் கிழக்கு |
| 51. | கலைமகள் சனசமூகநிலையம் | சிறுப்பிட்டி கிழக்கு, புத்தூர் உப அலுவலகம். |
| 52. | ஞானவாணி சனசமூகநிலையம் | வீரவாணி, வாதரவத்தை புத்தூர் |
| 53. | விவேகானந்தா சனசமூகநிலையம் | ஆவரங்கால் மேற்கு, புத்தூர் |
| 54. | கலைமதி சனசமூகநிலையம் | புத்தூர் மேற்கு, புத்தூர் |
| 55. | சிறிகுமாரகுருபரன் சனசமூகநிலையம் | புத்தூர் கிழக்கு |
| 56. | லிங்கன் மத்திய சனசமூகநிலையம் | ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் |
| 57. | கணேஸ்வரன் சனசமூகநிலையம் | பெரிய பொக்கணை, வாதரவத்தை, புத்தூர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 58. | கண்ணகை அம்மன் சனசமூகநிலையம் | புத்தூர் கிழக்கு, ஊறணி. |
| 59. | மத்திய சனசமூகநிலையம் | வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர். |
| 60. | கலையகம் சனசமூகநிலையம் | ஆவரங்கால் மணற்பகுதி, புத்தூர். |
| 61. | வினோபாஜி சனசமூகநிலையம் | போயிட்டி நீர்வேலி, புத்தூர் உபஅலுவலகம். |
| 62. | கலைவாணி சனசமூகநிலையம் | சிறுப்பிட்டி வடக்கு, புத்தூர், உபஅலுவலகம். |
| 63. | கலைவாணி சனசமூகநிலையம் | காளியானை, புத்தூர் கிழக்கு, புத்தூர் உபஅலுவலகம். |
| 64. | ஸ்ரீ விக்கினேஸ்வரா சனசமூகநிலையம் | வாதரவத்தை, புத்தூர், புத்தூர். உபஅலுவலகம். |
| 65. | மகாத்மாஜி சனசமூகநிலையம் | புத்தூர் கிழக்கு, புத்தூர் உபஅலுவலகம். |
| 66. | சோமஸ்கந்தன் சனசமூகநிலையம் | சிவன்கோயிலடி, புத்தூர் மேற்கு, புத்தூர், உபஅலுவலகம். |
| 67. | கலைஒளி சனசமூகநிலையம் | சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி, புத்தூர். உப அலுவலகம். |
| 68. | வளர்மதி சனசமூகநிலையம் | புத்தூர் மேற்கு, புத்தூர் உபஅலுவலகம். |
| 69. | ஒளிநிலா சனசமூகநிலையம் | வேவிபுரம், அச்செழு, நீர்வேலி, புத்தூர். உபஅலுவலகம். |
| 70. | மத்திய சனசமூகநிலையம் | அச்செழு மத்தி, நீர்வேலி, புத்தூர். உபஅலுவலகம். |
| 71. | சிறுப்பிட்டி சனசமூகநிலையம் | சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி புத்தூர் உபஅலுவலகம். |
| 72. | தனிப்பனையடி சனசமூகநிலையம் | அச்செழு, புத்தூர் உபஅலுவலகம். |
| 73. | வளர்மதி சனசமூகநிலையம் | யூலன் வீதி, பூலசிட்டி அச்செழு, நீர்வேலி புத்தூர் உபஅலுவலகம். |
| 74. | சரஸ்வதி சனசமூகநிலையம் | நவக்கிரி புத்தூர், புத்தூர் உபஅலுவலகம். |
| 75. | தமிழ்மதி சனசமூகநிலையம் | புத்தூர் வடக்கு, புத்தூர் உபஅலுவலகம். |
| 76. | சிவகுரு சனசமூகநிலையம் | ஆவரங்கால் மேற்கு, புத்தூர், புத்தூர் உப அலுவலகம். |
| 77. | சிறிவிக்கினேஸ்வரா சனசமூகநிலையம் | அச்செழு தெற்கு. |
| 78. | கலாநிதி சனசமூகநிலையம் | நாவலம்பதி அச்சுவேலி தெற்கு. |
| 79. | நாவலர் சனசமூகநிலையம் | அச்சுவேலி தெற்கு. |
| 80. | கதிரொளி அறிவகம் சனசமூக நிலையம் | அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. |
| 81. | கலைமகள் சனசமூகநிலையம் | தோப்பு அச்சுவேலி மேற்கு. |
| 82. | விநாயகர் சனசமூகநிலையம் | பத்தைமேனி அச்சுவேலி உபஅலுவலகம் |
| 83. | இளங்கதிர் சனசமூகநிலையம் | பத்தைமேனி அச்சுவேலி உபஅலுவலகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 84. | மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம் | இடைக்காடு, அச்சுவேலி, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 85. | வளலாய் சனசமூகநிலையம் | வளலாய் கிழக்கு, அச்சுவேலி. அச்சுவேலி உபஅலுவலகம் |
| 86. | சிவசக்தி சனசமூகநிலையம் | அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 87. | நவோதயா சனசமூகநிலையம் | அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 88. | சிறிசுப்பிரமணியர் சனசமூகநிலையம் | கதிரிப்பாய் அச்சுவேலி, அச்சுவேலி உப அலுவலகம். |
| 89. | தந்தை செல்வா சனசமூகநிலையம் | அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 90. | ஸ்ரீகணேசா சனசமூகநிலையம் | காளிகோயில் வீதி, அச்சுவேலி |
| 91. | அன்னை இந்திராகாந்தி சனசமூக நிலையம் | பத்தைமேனி அச்சுவேலி, அச்சுவேலி உபஅலுவலகம் |
| 92. | முரசொளி சனசமூகநிலையம் | வளலாய் கிழக்கு, அச்சுவேலி |
| 93. | சிறிமுருகன் சனசமூகநிலையம் | தம்பாலை அச்சுவேலி, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 94. | கலைக்கதிர் சனசமூகநிலையம் | வளலாய் கிழக்கு, அச்சுவேலி. |
| 95. | தவத்திரு தனிநாயகம் அடிகளார் சனசமூகநிலையம் | பத்தைமேனி அச்சுவேலி, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 96. | நாமகள் சனசமூகநிலையம் | கைத்தொழிற்பேட்டைவீதி, அச்சுவேலி மேற்கு |
| 97. | பாரதி சனசமூகநிலையம் | வளலாய் மேற்கு, அச்சுவேலி அச்சுவேலி, உபஅலுவலகம். |
| 98. | மகாத்மாகாந்தி சனசமூகநிலையம் | புத்தூர் கிழக்கு, புத்தூர் உப அலுவலகம். |
| 99. | சரஸ்வதி சனசமூகநிலையம் | சரஸ்வதி வீதி, புத்தூர், கிழக்கு, புத்தூர் உபஅலுவலகம். |
| 100. | சர்வோதயா சனசமூகநிலையம் | ஆவரங்கால் மேற்கு, புத்தூர், புத்தூர் உப அலுவலகம். |
| 101. | ஜனசக்தி சனசமூகநிலையம் | சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. |
| 102. | வளர்மதி சனசமூகநிலையம் | அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 103. | கலைமகள் சனசமூகநிலையம் | நெல்லியம்பதி அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 104. | கலைவாணி சனசமூக நிலையம் | ஊரெழு கிழக்கு, உரும்பிராய் உப அலுவலகம். |
| 105. | கலைமகள் சனசமூகநிலையம் | இடைக்காடு அச்சுவேலி, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 106. | ஸ்ரீகாளிஅம்பாள் சனசமூகநிலையம் | கோப்பாய் மத்தி, கோப்பாய் உபஅலுவலகம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 107. | எல்லாளன் சனசமூகநிலையம் | நவக்கிரி புத்தூர், புத்தூர் உப அலுவலகம். |
| 108. | சிவசக்தி சனசமூகநிலையம் | நீர்வேலி வடக்கு, பன்னாலை |
| 109. | உதயநிலா சனசமூகநிலையம் | புத்தூர் வடக்கு, புத்தூர் உபஅலுவலகம். |
| 110. | கலைமணி சனசமூகநிலையம் | கலைமணி வீதி, கட்டப்பிராய் கோப்பாய், கோப்பாய், உபஅலுவலகம். |
| 111. | சரஸ்வதி சனசமூகநிலையம் | கோப்பாய் தெற்கு, கோப்பாய் உபஅலுவலகம். |
| 112. | இளம்தென்றல் சனசமூகநிலையம் | கதிரிப்பாய், அச்சுவேலி, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 113. | திருக்குமரன் சனசமூக நிலையம் | உரும்பிராய் மேற்கு |
| 114. | காந்தி சனசமூகநிலையம் | கோப்பாய் வடக்கு, கோப்பாய் உப அலுவலகம். |
| 115. | ஸ்ரீ விநாயகர் சனசமூகநிலையம் | நீர்வேலி வடக்கு |
| 116. | ராதை சனசமூகநிலையம் | நீர்வேலி வடக்கு |
| 117. | சரஸ்வதி சனசமூகநிலையம் | ஆவரங்கால் மேற்கு, புத்தூர் உபஅலுவலகம். |
| 118. | பாரதி சனசமூகநிலையம் | மந்திரிமலை புத்தூர், புத்தூர் உபஅலுவலகம். |
| 119. | பூமகள் சனசமூகநிலையம் | சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர் உபஅலுவலகம். |
| 120. | அறிவொளி சனசமூகநிலையம் | புத்தூர் கிழக்கு, புத்தூர் உபஅலுவலகம். |
| 121. | மத்திய சனசமூகநிலையம் | புத்தூர் கிழக்கு, புத்தூர் உபஅலுவலகம். |
| 122. | தோப்பு சனசமூகநிலையம் | அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 123. | மத்திய சனசமூகநிலையம் | அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 124. | விஸ்ணு சனசமூகநிலையம் | அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 125. | சித்திவிநாயகர் சனசமூகநிலையம் | அச்செழு, புத்தூர் உபஅலுவலகம். |
| 126. | வருணன் சனசமூகநிலையம் | தோப்பு அச்சுவேலி உபஅலுவலகம். |
| 127. | வாலிபர் சங்க சனசமூகநிலையம் | கோப்பாய் தெற்கு, கோப்பாய். கோப்பாய் உபஅலுவலகம். |
| 128. | ஞானவைரவர் சனசமூகநிலையம் | பத்தைமேனி, அச்சுவேலி உபஅலுவலகம் |
| 129. | அன்னை தெரேசா சனசமூகநிலையம் | அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி உபஅலுவலகம். |
| 130. | மலர்மதி சனசமூகநிலையம் | அச்செழு கொலனி, நீர்வேலி புத்தூர் உபஅலுவலகம். |
| 131. | ஔவையார் சனசமூகநிலையம் | நவக்கிரி புத்தூர், புத்தூர் உப அலுவலகம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை நிர்வாகத்திற்கு உட்பட்ட
## 37 மயானங்களின் விபரம் - 2024

| இல. | மயானத்தின் பெயர் | முகவரி | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|---|---|
| 01. | செம்மணி இந்து மயானம் | | J/258 |
| 02. | கந்தன்காடு இந்து மயானம் | கோப்பாய் மத்தி, கோப்பாய். | J/261 |
| 03. | பொக்கணை இந்து மயானம் | ஊரெழு, உரும்பிராய் | J/267 |
| 04. | சீயாக்காடு இந்து மயானம் | நீர்வேலி வடக்கு | J/269 |
| 05. | வளலாய் இந்து மயானம் | வளலாய், அச்சுவேலி. | J/284 |
| 06. | நிலாவரை இந்து மயானம் | சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர். | J/272 |
| 07. | நொச்சிக்காடு இந்து மயானம் | இருபாலை, கோப்பாய். | J/260 |
| 08. | கிந்துசிட்டி மயானம் | புத்தூர் வடக்கு | J/274 |
| 09. | செக்கடி இந்து மயானம் | இருபாலை கோப்பாய். | J/257 |
| 10. | தந்திராய் இந்து மயானம் | நீர்வேலி தெற்கு | J/268 |
| 11. | பன்னாலை மயானம் | நீர்வேலி வடக்கு | J/269 |
| 12. | காளையன் புலம் இந்து மயானம் | சிறுப்பிட்டி, புத்தூர். | J/268 |
| 13. | கவுடுது மயானம் | ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். | J/276 |
| 14. | கரதடி மயானம் | ஆவரங்கால் மேற்கு, புத்தூர். | J/277 |
| 15. | தச்சன் பிட்டி இந்து மயானம், சொக்கத்திடல் | புத்தூர் கிழக்கு | J/278 |
| 16. | அந்திரானை பொது மயானம் | புத்தூர் கிழக்கு | J/278 |
| 17. | சிறுப்பிட்டி இந்துன் மயானம் | சிறுப்பிட்டி கிழக்கு, புத்தூர். | J/271 |
| 18. | அச்செழு மயானம் | அச்செழு வடக்கு, புத்தூர். | J/279 |
| 19. | வாதரவத்தை மயானம் | வாதரவத்தை, புத்தூர். | J/280 |
| 20. | பத்தைமேனி மயானம் | பத்தைமேனி, அச்சுவேலி. | J/281 |
| 21. | தம்பாலை மயானம் | தம்பாலை கதிரிப்பாய், அச்சுவேலி. | J/282 |
| 22. | கதிரிப்பாய் மயானம் | கதிரிப்பாய், அச்சுவேலி. | J/282 |
| 23. | அச்சுவேலி வல்லை இந்து மயானம் | அச்சுவேலி வடக்கு. | J/285 |
| 24. | முழங்கன் இந்து மயானம் | அச்சுவேலி தெற்கு. | J/286 |
| 25. | சாமித்திடல் இந்து மயானம் | இடைக்காடு, அச்சுவேலி. | J/282 |
| 26. | தோப்பு இந்து மயானம் | அச்சுவேலி மேற்கு. | |
| 27. | இருளன் இந்து மயானம் | உரும்பிராய் வடக்கு. | J/264 |
| 28. | வேம்பன் மயானம் | உரும்பிராய் தெற்கு. | J/265 |
| 29. | இளங்காடு இந்து மயானம் | உரும்பிராய் தெற்கு. | J/265 |
| 30. | சென்மைக்கல் சேமக்காலை | உரும்பிராய் வடக்கு. | J/264 |
| 31. | கலைவாணி | உரும்பிராய் தெற்கு. | J/265 |
| 32. | சிறுப்பிட்டி, கூழாவடி மயானம் | சிறுப்பிட்டி மேற்கு. | J/272 |
| 33. | புத்தகலட்டி மயானம் | சிறுப்பிட்டி மேற்கு. | J/272 |
| 34. | ஆவரங்கால் சுடலை | ஆவரங்கால் கிழக்கு. | J/276 |
| 35. | மந்திரிமலை சுடலை | புத்தூர் வடக்கு. | J/274 |
| 36. | இராசவீதி இடுகாடு | கோப்பாய் தெற்கு. | J/260 |
| 37. | இடைக்காடு மயானம் | இடைக்காடு. | J/283 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் தொடர்பான பெயர்களின் விளக்கம்

**அச்சுவேலி**

அச்சன் + வேலி = அச்சுவேலி. மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் ஒருங்கே அமைந்ததனால், அச்சன் + வேலி = அச்சுவேலி எனப்படுகிறது. அச்சு என்பது அழகு, வேலி என்பது ஊர். அழகான ஊர். அச்சு என்பது மத்தி என்றும் கருதப்படுவதால், ஏழு கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் அச்சுப் போன்றது என்பதும் ஏற்புடையதாகும்.

**பத்தமேனி**

பத்தமேனியானது, சாதாரண தோட்டங்கள் மற்றும் பற்றைகள் நிறைந்த குடியிருப்பு என்ற வகையில் "பத்தமேனி" என வழங்கப்படலாயிற்று. மேலும் வல்லிபுரக் கோயிலுக்குச் செல்லும் அடியார்கள் தங்கிச் செல்லும் இடம் என்பதால் "தலம்பத்தை" என அழைக்கப்பட்டு வந்தது. பத்தைகள் நிறைந்த இடம் என்பதால் பத்தமேனி என அழைக்கப்படுகின்றது.

**தம்பாலை**

தம்பாலையானது, வல்லைப் பாலம் அமைப்பதற்கு முன் தம்பாலை ஊடாக குடாக் கடல் நீரேரியைக் கடந்து வடமராட்சிக்குச் சென்றதாகவும், அந்த வகையில் பயணம் செய்வோரிடம் வரி அறவிடுவதற்கு "நம்பன்கடவை" என்ற மையம் அமைக்கப்பட்டு வரி அறவிடப்பட்டதாகவும், இதுவே "தம்பாலை" என மருவியதாகவும் அறிய முடிகின்றது.

**வளலாய்**

வளலாயானது பலாலி இராணுவத் தளத்துக்குக் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள செய்கைக்குப் பயன்படுத்தும் குளங்கள் ஆங்காங்கே அமைந்ததும். செம்மணப் பரப்பை கொண்டதுமான வளமான பிரதேசமாகும். மேலும் சோழர் ஆட்சிக் காலத்தில் "வளவன்" என்ற சிற்றரசனின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருந்ததாலும் "வளலாய்" எனப் பெயர் பெற்றதாக அறிய முடிகின்றது.

**தோப்பு**

தோப்பானது, தென்னை மரங்கள், மாமரங்கள். பலாமரங்கள், வாழை மரங்கள் என்பன தோப்புகளாக நாட்டப்பட்டதால் நவக்கிரிப் பகுதியில் "தோப்பு" என ஒரு குறிச்சியும் அழைக்கப்படுகின்றது.

**இடைக்காடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்காடானது, வளலாய்க்கும் தம்பாலைக்கும் இடைப்பட்ட பகுதியே "இடைக்காடு" என்னும் பகுதியாகும். இப்பகுதி சிறு பற்றைகள் நிறைந்து காடாக இருந்ததாலும் மேற்குறிப்பிட்ட இரு பகுதிக்கும் இடையில் அமைந்ததாலும் "இடைக்காடு" எனப் பெயர் பெற்றது. செய்மண் பிரதேசமான இப்பகுதி விவசாயச் செய்கைக்கு மிகவும் பெயர் பெற்ற பகுதியாக விளங்குகின்றது. கற்பாதைகள், கள்ளி, கற்றாளை, நாகதாளி போன்ற முட்செடிகள் நிறைந்த காடு போன்ற அமைப்பு கொண்டதால் இடைக்காடு என அழைக்கப்படுவதாகவும் அறிய முடிகின்றது.

**கதிரிப்பாய்**

கதிரிப்பாயானது, விவசாய நிலமும், விவசாயிகளும் நிறைந்த பகுதியாகிய டுப்பகுதியில் விவசாயிகள் உற்பத்தி செய்த குரக்கன், சாமை. மிளகாய், நெல் என்பனவற்றின் கதிர்களை கதிர்ப்பாய் (பனை ஓலையால் இளைத்த பாய்) கொண்டு வெயிலில் காய வைத்தனர். இதனால் கதிர்ப்பாயைச் கூடுதலாகப் பாவித்த பகுதி "கதிர்ப்பாய்" என வழங்கப்படலாயிற்று. விவசாயச் செய்கைக்குப் பெயர் பெற்ற இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

**புத்தூர்**

புத்தூரானது, புத்துகள் நிறைந்து காணப்பட்டதும், பின்னர் அவை திருத்தப்பட்டு விவசாயம் செய்யப்பட்டதாலும், புத்து + ஊர் = புத்தூர் என அழைக்கப்பட்டதாகவும், புதுமை நிறைந்த வற்றாத "நிலாவரை" இப்பிரதேசத்தில் அமைந்துள்ளதால், புதுமை நிறைந்த ஊர் புத்தூர் எனப்படுகிறது.

**வாதரவத்தை**

வாதரவத்தையானது, "வாதுமை" என்னும் நீர்த்தன்மையைப் பாதுகாக்கும் ஒருவகை மரம் இப்பகுதியில் அடர்ந்து ஏராளமாக நின்றதாகவும், இந்த வாதுமை மரங்களை வெட்டிப் பாலித்து வள்ளம் (வத்தை கட்டித் தொண்டமான் ஆற்றின் ஊடாக உப்பேற்றிச் சென்றதாகவும் இதனால் இப்பகுதி "வாதுருவத்தை" என அழைக்கப்பட்டதாகவும், நாளடைவில் திரிபடைந்து "வாதாலத்தை" எனவும் அழைக்கப்படுகின்றது. மேலும் இப்பகுதி தாழ்ந்த நிலப்பகுதி என்பதால் வத்தை என்பதாகவும் வாதுரமரம் நின்ற தாழ்ந்த நிலப்பகுதி என்பதால் வாதரவத்தை எனவும் அழைக்கப்படுகின்றது.

**ஆவரங்கால்**

ஆவரங்காலானது ஆவரை + கால் = ஆவரங்கால் இப்பகுதியில் மாடுகள் கூடுதலாக விவசாயத் தேவைக்கு வளர்க்கப்பட்டதாகவும், நீர்நிலைகள் புல்வெளிகளின் மத்தியில் (குளம், குட்டை) நிறையவுள்ள இப்பகுதியில் மாடுகள் தாகசாந்தி செய்து விட்டு உரோஞ்சும் ஆவுரோஞ்சிக்கற்கள் பல நாட்டப்பட்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவும் இதனால் ஆவுரோஞ்சிக் கற்கள் கூடுதலாக நின்ற பகுதி என்பதால் “ஆவரங்கால்” என அழைக்கப்பட்டதாகவும், (ஆ- பசு, வரம் - நீர், கால் - வாய்க்கால்) (ஆ - பசு, வரங்கு - உடம்பைத் தேய்த்தல்) பசு இனங்கள் நீர் அருந்த வாய்க்கால் அமைக்கப்பட்ட இடம் என்பதால் ஆவரங்கால் என வழங்கப்படு கின்றது. இன்னும் ஆவரங்காலை “சிவதலம் ஆவரங்கால்” எனவும் அழைப்பர். யாழ்ப்பாண தீபகற்பத்தில் மிகப் பழமையான புராதனம் மிக்க சிவன் ஆலயம் இங்கு அமைந்துள்ளதாலும் இவ் ஆலயத்தின் மூலஸ்தானத்தின் நேரெதிரே கிழக்குப் பக்கமாக “சிவன் நடனமிடும் மயானம்” அமைந்துள்ளதாலும் எங்குமில்லாத அமைவிடச் சிறப்பு இங்கே காணப்படுவதாலும் திருக்கடவூர் சிவதலத்தின் சிறப்புக் கொண்டதால் “அவரங்கால் சிவதலம்” என சிறப்பாக அழைக்கப்படுகின்றது.

**சிறுப்பிட்டி**

சிறுப்பிட்டியானது, பீடு - தரிசு நிலம் இலங்கைப் பேச்சு வழக்கில் மடு என்றும் பிட்டி என்றும் கூறுவதற்கு ஒப்பாக மேட்டு நிலமாகவும், தரிசு நிலமாகவும் அமைந்த சிறிய நிலப்பகுதி என்பதால் "சிறுப்பிட்டி" என அழைக்கப்படுகின்றது.

**அச்செழு**

அச்சு என்பது மத்தி, அழகு, உறுதி, நேர்வரம்பு (எல்லை) என்றும் கருதப்படுகின்றது. போயிட்டி, பூலசிட்டி, வேவியா, யூலநூர், சடையகாடு, கொலணி, கொக்கிருந்த பதி ஆகிய ஏழு சிற்றூர்களுக்கு மத்தியாக அமைந்த விவசாயம் செய்யும் அழகிய ஊர் என்பதாலும் இதன் எல்லைகள் நேர்வரம்பாக அமைந்ததாலும் “அச்செழு” என அழைக்கப்படுகின்றது.

**நீர்வேலி**

வலிகாமம் கிழக்குப் பகுதியில் பல பாகங்களிலிலுமிருந்து பாய்ந்து வரும் மழைநீரைத் நன்னுள் அடக்கி, அதனைத் தனது கிழக்கெல்லையாக அமைத்துக் கொண்டதால் நீர் + வேலி = நீர்வேலி என்றும் பெயர் பெறுவதாக “ஊர்ப் பெயர் உட்பொருள் விளக்கம்” என்னும் நூலில் திரு இ.நமசிவாயம்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இன்னும் இக்கிராமத்தின் எல்லைகள் எல்லாம் நீர்நிலைகள் அமைந்துள்ளமையாலும் இப்பெயர் அமைவதாகக் கொள்ளப்படுகின்றது.

**கோப்பாய்**

சங்கிலியன் என்ற அரசன் கோட்டை கட்டியிருந்த இடம் என்பதால், கோ - அரசன், பாய் - இருக்கை. இதனால் இப்பகுதி கோப்பாய் என அழைக்கப்படுவதாக அறிய முடிகிறது. இன்றும் அன்றைய கோட்டை கட்டியமைத்ததற்கான சான்றுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு காணப்படுவதாகவும், கோட்டை அமைந்திருந்த இடம் கோட்டை வாய்க்கால் என அழைக்கப்படுவதாகவும் அறியக் கிடக்கின்றது. இவற்றுக்கு ஆதாரமாக குதியடிக்குளம் அமைந்துள்ளது.

**கல்வியங்காடு**

இப்பகுதியில் அக்காலத்தில் கள்ளி மரங்கள் கூட்டமாக நின்றதாகவும், அதனால் அந்த இடம் "கள்ளியங்காடு" என அழைக்கப்பட்டதாகவும், அந்த இடத்தில் வியாபார நடவடிக்கைகள் நடைபெற்றதால் "கள்ளி அங்காடி (கள்ளியங்காடி)" என அழைக்கப்பட்டு வந்ததாகவும், இன்று அந்தப் பிரதேசம் "கல்வியாளர்கள்" நிரம்பியுள்ளதால் அவர்களை மையமாக வைத்து "கல்வியங்காடு" என அழைக்கப்பட்டு வருவதாகவும் அறியக் கிடக்கின்றது. (காடு - வளம், மிகுதி, நெருக்கம், சிற்றூர் எனப் பல கருத்துக்கள் உண்டு) கள்ளி + அம் + காடு = அழகிய கிராமம் என்னும் அழைக்கப்படுகின்றது.

**கட்டைப்பிராய்**

அக்காலத்தில் மக்கள் தமது பிரயாணங்களைக் கால்நடையாகவே செய்து வந்ததாகவும். வீதியோரங்களில் நிழல் மரங்கள் நாட்டப்பட்டு அந்த மரநிழல்களில் பிரயாணிகள் தங்கிச் செல்வதாகவும் அறியக் கிடக்கின்றது. அந்த வகையில் நிழலுக்காக நாட்டப்பட்ட "பராய்" மரங்கள். இப்பகுதியில் கட்டையாக (உயரம் குறைந்து) காணப்பட்டதால் இப்பகுதி கட்டைப்பராய் என அழைக்கப்படுகின்றது.

**இருபாலை**

முன் கூறியது போல பிரயாணிகளின் வசதி கருதி நிழல்தரு மரங்கள் நாட்டப்பட்டதாகவும், இப்பகுதியில் இரண்டு பாலைமரங்கள் அருகருகே நின்றதால் இப்பகுதி "இருபாலை" என அழைக்கப்படுகின்றது

**உரும்பிராய்**

முன்னொரு காலத்தில் வழிப்போக்கர்களின் நலன்கருதி தெருவோரங் களில் ஆல், அரசு. பராய், பாலை என்னும் நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டதாகவும், அந்த வகையில் யாழ்ப்பாணம் பலாலி வீதியில் 25வது மரம் நாட்டப்பட்ட பகுதி உரும்பிராய் பகுதியாகும். அக்காலத்தில் எழுத்து இலக்கத்தின் படி 2 - என்பது "உ" என்றும் 5 - என்பது "ரு" என்றும் எழுதப்பட்டது. "உரு"என்பது 25 ஆகும். இந்த வகையில் நாட்டப்பட்ட பராய் மரம் 25ம் பராய் மரமாகும். எனவே 25வது பராய் மரம் நாட்டப்பட்ட பகுதி உரும்பராய் ஆகிற்று, நாளடைவில் "உரும்பிராய்" என மருவிற்று பராய் மரத்தைப் பிராய் என்றும் அழைப்பதுண்டு. எனவே உரும்பராய் "உரும்பிராய்" என அறிய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறும்பராய் - உரும்பராய் ஆயிற்று. மேலும் ஊர் + அம் + பிராய் அழகிய பராய் மரங்கள் நின்றதால் "உரும்பிராய்" என அழைக்கப்படுவதாக அறியக் கிடக்கின்றது.

**ஊரெழு**

பொக்கனை, கரந்தன் போன்ற ஏழு சிறு கிராமக் குறிச்சிகளுக்கு தலைக் கிராமமாக அமைந்ததால் "ஊரெழு" என அழைக்கப்படலாயிற்று. பொக்கனை என்பது ஆழமான நீரநிலை என்பது பொருள். இதுவும் இப்பிரதேசத்துக்குச் சிறப்பான அம்சமாகும். இந்த நீர்நிலையிலிருந்த சில காலங்களில் நீர் மேலெழுவதாகவும் எழுச்சி பெற்ற கிராமம் என்பதாலும் "ஊரெழு" என அழைக்கப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள் :**


1. விதைத்ததில் விளைந்தது - வலி. கிழக்கு வலம் பாகம் 1-மா.ஞானலிங்கம்
2. புள்ளி விபரத் திரட்டு 2023 - வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம், கோப்பாய்
3. செம்புலம் 1 - வலி.கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவை, பிரதேச செயலகம், கோப்பாய்
4. செம்புலம் 2 - வலி.கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவை, பிரதேச செயலகம், கோப்பாய்
5. செம்புலம் 3 - வலி.கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவை, பிரதேச செயலகம், கோப்பாய்
6. வளம் மிகுந்தது வலிகாமம் கிழக்கு - த.பரராசசிங்கம்
7. உள்ளூராட்சி மறுசீரமைப்பு
8. பாதீடு - வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
9. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உத்தியோகத்தர், உறுப்பினர்கள் குறிப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கலைத்திட்ட மறுசீரமைப்பில் பாடசாலை நூலகக் கற்றல் வளநிலையங்களும், ஆசிரிய நூலகர்களும்

**திருமதி. றட்னேஸ்வரி சாந்தலிங்கம்**
**(B.A (Hons), Dip. in LIS,(Merit), M.Ed.)**
ஆசிரியர் (யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி, புத்தூர்.)

## 1. அறிமுகம்

பாடசாலைகள் சமூகத்தில் முக்கியமான அங்கமாகத் தொழிற்படுகின்றன. மாணவரிடையேயான பல்வகைப்பட்ட ஆற்றல்களும், திறன்களும் பாடசாலை யினூடாக விருத்தி சய்யப்படல் வேண்டும். இத்தகைய நிலையில் கலைத்திட்டச் செயற்பாடுகளைச் செழுமைப்படுத்தி மாணவரின் முழுமையான கல்வி விருத்திக்குரிய பொருத்தமான நூல்களை வழங்குதல் பாடசாலை நூலக கற்றல் வளநிலையங்களின் பிரதான இலக்குகளாகும்.

நூலகங்கள் கலைத்திட்ட மறுசீரமைப்புகள் நிகழும்போது அபிவிருத்தி யடைகின்றன. கலைத்திட்டக் குறிக்கோள்களில் அறிவினை மேம்படுத்துதல், பல்வேறு வகையான திறன்களை வளர்த்தல், கற்பவர்களின் ஆளுமையை வளர்த்தல், அதன் வினையாற்றலை உறுதிப்படுத்தல், தொழில்நுட்ப விஞ்ஞானப் புத்தாக்கத் திறன்களை வளர்த்தல், தனி மனித மற்றும் சமூக விழுமிய பற்றுறுதியை வளர்த்தல் போன்றவற்றுடன் தத்துவ வளர்ச்சி, சிந்தனைக் கிளர்ச்சி, பிரயோக ஆற்றல், மாற்றங்களைத் தூண்டல் போன்றவற்றை ஏற்படுத்துவது நூலகப் பயன்பாடே. அதற்குச் சிறந்த களம் அமைத்துக் கொடுப்பவர்கள் அதனை நிர்வகிக்கும் ஆசிரிய நூலகர்களே.

## 2. பாடசாலை நூலகக் கற்றல் வளநிலையங்கள்

பாடசாலை நூலகம் என்றஎண்ணக்கருவானது இன்று நூலகமும் கற்றல் வளநிலையமும் Library and Learning Resource Center (LLRC) எனமாறியுள்ளது. பாடசாலைச் சமூகத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் இடைவேளை நேரத்தினை அர்த்தமுள்ளதாகப் பயன்படுத்துவதற்கும் தேவையான தகவல் களையும், அறிவினையும் வழங்குகின்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கிய ஒரு அலகையே நூலகமும் கற்றல் வளநிலையமும் எனப்படுகின்றது. (பாடசாலை நூலகமற்றும் கற்றல் வளநிலையத்திற்கான அறிவுரைப்பு வழிகாட்டி, பக்.1).

பாடசாலை நூலகக் கற்றல் வளநிலையம் என்பது பல்வேறு வகையான அறிவுசார் விடயங்களை சேமித்து வைப்பதோடு பாடசாலையின் பண்பாட்டுச் சின்னமாகவும், சிந்தனைக் கிளறல் செய்யும் இடமாகவும் விளங்குகின்றது. மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமையின் ஆத்மீக, ஒழுக்க, சமூக, கலாசார அம்சங்களின் விருத்திக்கும் மிக அவசியமானது. இது ஒருதேசத்தின் பொருளாதார மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்கின்றது.

நூலகத் தொழிற்பாடு கலைத்திட்டச் செயற்பாடுகளோடு ஒன்றிணைக்கப் படுவதுடன் கற்றல் கற்பித்தலோடு தொடர்புடைய காட்சித் தொகுப்புக்களான ஒளிப்படங்கள், வரைபடங்கள், காட்டுருக்கள், படச்சுருள்கள், படவழுக்கிகள், தேசப்படங்கள், போன்ற கற்பித்தலியற் சாதனங்களும், பாடசாலை நூலகங் களிலே வைக்கப்பட வேண்டியுள்ளதால் கலைத்திட்ட அபிவிருத்திக்குரிய நூலக முறைமை அறிவுசார் கட்புல, செவிப்புல சாதனங்களின் தொகுப்பாக விளங்க வேண்டியுள்ளது.

1998ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற கல்வி மறுசீரமைப்பு செயற்பாடுகளின் பயனாக பாடசாலை அபிவிருத்தி அலகானது கல்வி அமைச்சின் கீழ் பொதுக்கல்விச் செயற்றிட்டமொன்றின் GEP2) மூலம் உருவாக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக உலக வங்கியின் அனுசரணையுடன் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 4000 பாடசாலை நூலகங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இவற்றுள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 568 பாடசாலைகளும் உள்ளடங்குகின்றன. அத்துடன் சேவையிலிருக்கும் ஆசிரியர்களிலிருந்து விசேடமாகத் தெரிவுசெய்யப் பட்டவர்கள், பாடசாலைகளில் ஆசிரிய நூலகர்களாக நியமிக்கப்பட்டு, அவர்களுக் கான கல்வி சார் தகைமைகளை வழங்கும் நோக்குடன் தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகமானது (NILIS) ஸ்தாபிக்கப்பட்டது. (கல்பனா, ச)

2007இன் கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக தேர்ச்சி மையக் கலைத்திட்டம்,மாணவர் மையக் கலைத்திட்டம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டது. இச் சீர்திருத்தமானது 5E மாதிரியில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும், அதனை முழுமைப்படுத்துவதற்கான காரணி என்ற வகையில் பாடசாலை நூலகத்தைத் தரமுள்ள நூலகக் கற்றல் வள நிலையமாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. அத்துடன் வாரத்தில் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு நூலகப்பாடம் கட்டாய பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

இன்று மாணவர்களிடையே வளர்த்தெடுக்க வேண்டிய அறிவுத்திறன், சிந்தனைத்திறன், தொடர்பாடல் திறன், தொழினுட்பத் திறன், ஊடகத்திறன், கணித அறிதிறன், செயலாக்கத் திறன் போன்ற முக்கிய திறன்களின் வரிசையில் அண்மைக்காலங்களில் மிக முக்கியமாக அதிகம் பேசப்படுகின்ற பதமாக தகவல் அறிதிறன் காணப்படுகின்றது. இது தேவையான தகவலைக் கண்டறிதல், மீளப்பெறல், பகுப்பாய்வு செய்தல், பயன்படுத்தல் முதலிய திறன்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியாக அமைகின்றது. இந்நிலையில் மாணவர்களின் தகவலறி திறன் மேம்பாட்டில் கல்விக் கொள்கை முக்கிய பங்கு வகிக்கின்றது. அதற்குக் களம் அமைப்பதில் பாடசாலை நூலகக் கற்றல் வளநிலையங்களுக்கு மகத்தான பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீகாந்தலட்சுமி, 2017)

### 3. ஆசிரிய நூலகர்கள்

ஆசிரிய நூலகர் பதவியானது கல்வித் துறையில் மிக முக்கியமான வகிபாகத்தைக் கொண்டது. இலங்கையில் ஆசிரிய நூலகர் 1990 களில் முதன் முதலாகத் தோன்றியது. அந்த நேரத்தில் இலங்கையின் கல்வியமைச்சு கலைத்திட்ட மைய மற்றும் பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட கல்விச் சீர்திருத்தங்களை உருவாக்கத் தீர்மானித்திருந்தது. அத்துடன் சமூகத்திற்கும், பாடசாலைக்கும் வாசிப்பைத் தூண்டும் முகமாக கல்வியமைச்சும், உலக வங்கியும் இணைந்து பல இடங்களில் கல்வியையும் அதனுடன் இணைந்து பாடசாலை நூலகத்தையும் அபிவிருத்தி செய்தது. அதனை நிர்வகிப்பதற்கென ஆசிரிய நூலகர் பதவியையும் வழங்கியது.

அங்கீகரிக்கப்பட்ட கற்பித்தல் தகுதியும், நூலகவியல் தகுதியும் கொண்ட ஒருவரே தகுதி வாய்ந்த ஆசிரிய நூலகர் என வரைவிலக்கணப்படுத்தப் படுகின்றது. (அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி, பக்கம் 262)

ஆசிரிய நூலகராக நிரந்தர நியமனம் பெற்றுள்ள அல்லது கடமைப் பட்டியலில் நூலகப் பதவியின் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரிய சேவையில் உள்ளோர் "ஆசிரிய நூலகர்" என அழைக்கப்படுகின்றார். (பாடசாலை நூலக மற்றும் கற்றல் வள நிலையத்திற்கான அறிவுரைப்பு வழிகாட்டி, பக்.6).

பாரபட்சமற்ற நூல் தெரிவு, தன்னலமற்ற சேவை, பல்தரப்பட்ட வாசகனது தகவல் தேவைகளையும் நினைவில் இருத்திக் கொள்ளக் கூடிய பல்பரிமாண நினைவாற்றல், வாசகர்களது குணநலன்களின் அடிப்படையில் எல்லோரையும் கருத்தில் கொள்ளக் கூடியவகையிலான அனுதாப மனப்பாங்கு, பல்தரப்பட்ட வாசகனது சுபாவங்களையும் எதிர்கொள்வதற்கான சாமர்த்தியம், வாசகனது அறிவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உதவக்கூடிய புலமைத்துவம், கடும் உழைப்பு ஆகிய ஒழுக்கசீலம் உடையவராக நூலகர் கருதப்படுகின்றார். சமூக, அறிவியல், தகவல் தொழினுட்பம், தொடர்பாடல், உளவியல், அச்சிடுதல் தொழினுட்பம், பகுப்பாக்கம், பட்டியலாக்கம், ஆவணவாக்கம், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் நூலகருக்கு தேர்ச்சி முக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இக்கற்றல் வளநிலையத்தை முகாமை செய்வதற்கு வசதியாக 2005 ஆம் ஆண்டு கல்வியமைச்சினால் 3000 பட்டதாரிகள் ஆசிரிய நியமனத்தின் போது ஆசிரிய நூலகர்களாக பாடசாலைக் கல்விமுறைமைக்குள் உள்வாங்கப்பட்டனர். அவர்களுக்கான கடமைக்கூறுகள் பற்றித் தெளிவான விளக்கம் இல்லாத நிலையில் மதிப்பிற்குரிய திரு. ப.விக்னேஸ்வரன் (முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்) அவர்களால் 10.04.2006 திகதியிடப்பட்ட சுற்றுநிருபம் வெளியிடப்பட்டு அவர்களது கடமைகள் உறுதிப்படுத்தப்பட்டன.. பின்னர் 2015 இல் வெளியிடப்பட்ட பாடசாலை நூலக மற்றும் கற்றல் வளநிலையத்திற்கான அறிவுரைப்பு வழிகாட்டியில் விரிவான கடமைப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலைகள் தோறும் பாடசாலை நூலகக் கற்றல் வளநிலையம் என்ற புதிய பெயருடன் பாடசாலை நூலகங்களை உருவாக்கும் பணி, இருக்கும் நூலகங்களைப் புது மெருகூட்டும் முயற்சிகள், கூடுதலான வரை பாடசாலை நூலகத்துக்கு பட்டதாரி ஆசிரியர் ஒருவரை ஆசிரிய நூலகர் என்ற பெயருடன் நியமிக்கும் முயற்சிகள் ஒக்டோபர் மாதத்துக்கான தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தி அந்த நாட்களில் பொதுசன நூலகம் பாடசாலை நூலகம் என்ற வேறுபாடுமின்றி கருத்தரங்குகள், கண்காட்சிகள் போட்டிகள் என்று நடாத்துதல், ஆசிரிய நூலகர்களுக்குப் பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குபடுத்தல் என வாசிப்பை மேம்படுத்துவதற்கான பலவித முயற்சிகளில் இறங்கியிருக்கின்றது.

தற்போது இலங்கை நூலகச் சங்கத்தினால் நூலகவியல் வகுப்புக்கள் ஒழுங்காக நடாத்தப்பட்டு வருவதனால் நூலகவியற் கல்விநெறியில் இரண்டாம் ஆண்டு(இடைநிலை) பரீட்சையில் சித்தியடைந்தவரையாவது நூலகராகப் பெறும் வாய்ப்புப் பாடசாலை நூலகங்களுக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் பல்கலைக்கழக மட்டத்திலும் நூலகவியல் துறையில் வகுப்புக்கள் நடத்தப்பட்டு டிப்ளோமா பட்டம் வழங்கப்பட்டு வருகின்றமையும் பாடசாலை நூலகங்களுக்குப் பயிற்றப்பட்ட தகுதி வாய்ந்த நூலகர்களை நியமிக்கும் வாய்ப்பினை உருவாக்கயுள்ளதெனலாம்.

## 4. நிறைவுரை

கலைத்திட்ட மறுசீரமைப்பிற்கேற்ப பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையங்களும், அதனை நிர்வகிக்கும் ஆசிரிய நூலகர்களும் முக்கிய பங்குதாரர்களாக உள்ளனர். இவற்றின் அபிவிருத்தியில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோரும் சேர்ந்து அக்கறை காட்டுவதன் மூலம் தமது பிள்ளைகள் தரமான நூலக சேவையைப் பெற்று அறிவை விருத்தி செய்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. மாணவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை வகுப்பறைகளில் மட்டுமன்றி நூலகங்களிலும் வளர்க்கப்படுகின்றன. எனவே, மாணவர்களின் ஆளுமையை வளர்த்தெடுக்கத்தக்கதான கல்வி, கலை, கலாசாரம், சிந்தனை, மென்திறன்கள், நவீனத்துவம் அனைத்தையும் பெறத்தக்க ஒரு அறிவியற் சூழல் கொண்டதாகப் பாடசாலை நூலககற்றல் வளநிலையம் திட்டமிடப்படல் வேண்டும் என்பதன் உண்மை உணரப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. விமலாம்பிகை பாலசுந்தரம், கல்வி நிறுவன நூலகங்கள், 2009, குமரன் புத்தக இல்லம் ,கொழும்பு - சென்னை, பக்கம் 1 -21.
2. கல்பனா சந்திரசேகர், "புதிய கல்வி மறுசீரமைப்பின் அடிப்படையிலான மாணவர் ஆளுமை விருத்தியும், வலுவூட்டல் 8 கோட்பாடும்" பக்கம் 2 - 9.
3. அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி, நூலக தகவல் அறிவியல் ஆய்வுக்கோவை. பக்கம் 262.
4. கலாநிதி சபா. ஜெயராசா "கலைத்திட்ட அபிவிருத்தியும் பாடசாலை நூலகங்களும்" நூலகவியல் ,நூலகவியல், காலண்டிதழ் தொகுதி 1 - 7 (செப்டம்பர் 1985 - ஏப்ரல் 2007), 2013,குமரன் புத்தக இல்லம் - கொழும்பு - சென்னை. பக்கம் 338 - 340.
5. பாடசாலை நூலக மற்றும் கற்றல் வளநிலையத்திற்கான அறிவுரைப்பு வழிகாட்டி, பாடசாலை நூலக அபிவிருத்திப் பிரிவு, கல்விச் சேவைகள் அமைச்சு.
6. ஸ்ரீகாந்தலட்சுமி, "சுய கற்றலுக்கு வாய்ப்பளிக்கும் நூலகங்களில் மையம் கொள்ள வேண்டிய இலங்கையின் கல்வித் துறை: பின்லாந்தின் கல்விமுறை தரும் புதியசிந்தனை" karuththurn.blogspot.com. 11.05.2017



அறிவு என்னும் துறைமுகத்தை அடையக்
கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளமை
சிறந்த புத்தகங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிப்புத் தாவரங்களின் வரிசையில் பார்த்தீனியம் பற்றிய பார்வை

திருமதி.கருணாகரன் சிவமதி
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வலி.கிழக்கு பிரதேச சபை,
உப அலுவலகம், புத்தூர்.

சுற்றாடலைப் பேணிப் பாதுகாத்தலானது உலகெங்கும் மிகுந்த கரிசனையுடன் உணரப்பட்டு வரும் விடயமாகும். கடந்த காலத்தில் அபிவிருத்தித் திட்டங்களில், பெரும்பான்மையானவை சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தைக் கருத்தில் எடுக்காது மேற்கொள்ளப்பட்டதுடன், அவற்றால் ஏற்பட்ட எதிர் விளைவுகளை மனித குலம் இன்னும் அனுபவித்து வருகின்றது.

"ஆக்கிரமிப்பாளர்" என்ற சொல்லானது இலங்கைத் தீபகத்திற்கு மிகவும் பரிச்சயமானது. ஆதி முதல் காலத்திற்குக் காலம் பல்வேறு வடிவங்களில் நம் நாட்டிற்கு ஏற்பட்ட ஆக்கிரமிப்புக்களின் தாக்கங்கள் மத்தியில், அண்மைக் காலத்தில் சுற்றாடல் ரீதியில் மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாக ஆக்கிரமிப்புத் தாவரங்கள் இனங்காணப்பட்டுள்ளன. ஒரு சூழல் தொகுதியின் உயிர்ப் பல்வகைமையையும் சுற்றாடல் சமநிலையையும் பேணும் உள்ளூர்த் தாவர இனங்களின் இருப்பிற்கு ஊறு விளைவிக்கும் விதத்தில், பரம்பலடையும் தாவரங்களே "ஆக்கிரமிப்புத் தாவரங்கள்" எனப்படுகின்றன. இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள ஆக்கிரமிப்புத் தாவரங்கள் என்ற வகையில், வெள்ளைமரம் (Alstonia macrophylla), வெல் ஆத்தா (Annona glabra), கட்டகலு போவிற்றியா (Clidemia hirta), கல்கொரக (Clusia rosea), பொடிசிஞ்ஞோ மரங் (Chromolaena odorat), கெகில்ல (Dicranopteris linea), ஜபன் தபர (Eichhornia Crassipes), கந்தபான (Lantana Camar), மதுவெல் (Mikania Cardat), யோத நிதிக்கும்பா (Mimosa piara), கனிதன (Panicum manimum), அந்தரத்தாமரை (Pistia stratioe), சல்வீனியா (Salvinia molesta), மஹோகனி (Swietiena macrophylla), தியபர (Wormia suffruticosa), பார்த்தீனியம் (Parthenium hysterophorus) போன்றவற்றினைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

மேற்சொல்லப்பட்ட ஆக்கிரமிப்புத் தாவரங்களில் ஒன்றான பார்த்தீனியம் (Parthenium hysterophorus) பற்றிப் பார்ப்போம். பார்த்தீனியம் என்ற சொல்லானது "லத்தீன்" வார்த்தையிலிருந்து தோன்றியது எனலாம். இது ஒரு குறுஞ் செடியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றினை கரட்புல், மல்லிக்கிழங்கு, கசப்புச்செடி எனவும் அழைக்கின்றனர். இவை செடிகளின் நட்சத்திரக் குடும்பமான "ஆச்டெரேசியே" வகைப் பூந்தாவரமாகும். பார்த்தீனியம் அர்சென்டேடம், பார்த்தீனியம் இங்கானம் மற்றும் பார்த்தீனியம் இச்டெரோபோரசு ஆகியன இக்குடும்பத்தில் நன்கு அறியப்பட்ட சிற்றினமாகும். இவற்றின் தாய்நிலம் மெச்சிக்கோ வளைகுடாப் பகுதியாகும். (வடஅமெரிக்கா) இவற்றினை படையெடுக்கும் இனத்தாவரங்கள் எனவும் கோயம்புத்தூர் செடி எனவும் காங்கிரஸ் களை எனவும், கேரட் களை எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்வாறு அமெரிக்காவில் தோன்றிய இப்பார்த்தீனியச் செடியானது, உலகெங்கும் பரவி, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, ஆசியாக் கண்டங்களில் பெரும் தாக்கத்தை உண்டாக்கியுள்ளதுடன் மண்ணின் சத்தையும் அழிக்கின்றது.

இப்பார்த்தீனிய பாம்பானது எவ்வாறு பரம்பலடைந்தது என நோக்கு கையில், இந்தியாவில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடிய போது அமெரிக்கா விலிருந்து 1954 ஆம் ஆண்டளவில் இந்தியா கோதுமை மா போன்ற உணவுப் பொருட்களை மும்பைத் துறைமுகத்தின் ஊடாக இறக்குமதி செய்த போது இந்தியாவிற்குள் வந்தடைந்தது என நம்பப்படுகின்றது. இவ்வாறு இந்தியாவை வந்தடைந்த பார்த்தீனியமானது நாட்டிற்குள் எப்படி வந்தடைந்தது எனப் பார்ப்போம்.

இலங்கையில் யுத்த காலங்களில், இந்தியாவிலிருந்து 1980களின் பிற்பகுதியில் இலங்கைக்குள் நுழைந்த ஒரு அந்நிய இனமாகும். குறிப்பாக இந்தியப் படைகள் இலங்கைக்கு வந்தபோது அவர்களது இராணுவத் தளபாடங்களுடனும், தமது உணவுக்காக எடுத்து வந்த தானியங்களுடனும் பல செம்மறி ஆடுகளுடனும், அல்லது விதைகள் அதன் உடலில் ஒட்டியிருந்தோ அல்லது அவற்றின் மலத்தின் சமிபாடடையாத உணவாகவோ இருந்து இலங்கைக்குள் ஊடுருவியிருக்கலாம் என ஆய்வாளர்கள் கருத்து தெரிவித் துள்ளனர். இந்தியப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் மனிதர் களுக்கும், விவசாய நிலங்களுக்கும், கால்நடை மற்றும் விலங்குகளுக்கும் ஊறு விளைவிக்க, வடக்கு கிழக்கில் இந்தியப்படையினரால் பரப்பப்பட்டதாக குற்றச் சாட்டு இருந்தது. அது மட்டுமன்றி ஆக்கிரமிப்பு இனமான இப்பார்த்தீனியம், இந்தியா, இலங்கை மட்டுமன்றி அவுஸ்திரேலியா மற்றும் ஆபிரிக்காவின் பகுதிகளிலும் காணப்படுகின்றது. இந்தியாவிலும் இலங்கையிலும் இது உள்ளூர் வழக்கில் காங்கிரஸ் களை என காங்கிரஸ் கட்சியின் அரசியல் செயற்பாட்டை உவமிப்பதனால் அறியப்படுகிறது. இது ஒவ்வாமையைத் தூண்டும் ஒன்றாக வுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தீனியமானது மிகச் சிறிய விதைகளை கொண்டு எளிதில் காற்றின் மூலமும், பண்ணைக் கருவிகள் மூலமும், வாகனங்கள், கால்நடைகள் மற்றும் நீரின் மூலமாகவும் பரவக் கூடியது. 2அ உயரம் வரை வளரக் கூடியதுடன், 6 முதல் 8 வாரங்களுக்குள் பூக்கும் தன்மை உடைய ஒரு நச்சுக்களைச் செடியாகும். இவை தன்னுடைய வாழ்நாளில் 624 மகரந்தச் சேர்க்கையையும் மற்றும் 10000 - 15000 வரையிலான விதைகளையும் உற்பத்தி செய்யும் திறன் உடையது. இக்களைச் செடியானது அனைத்து சூழலிலும் வளரக்கூடியது. குறிப்பாக காரநிலை வகை மண்களிலும், களிமண் நிலங்களிலும் நன்கு வளரும் தன்மை உடையது. செப்ரெம்பர் முதல் கார்த்திகை மாதம் வரை இதற்கு ஏற்ற காலமாகும். இச்செடியின் இலைகள் பல பிரிவுகளாகப் பிரிந்து பார்ப்பதற்கு நெருக்கமாக முளைத்து விரைவிலேயே நெடுநெடுவென வளர்ந்து சடைத்து ஒரு பச்சைக் கம்பளம் போல நிலத்தை மூடி விடும். இது 20 ஆண்டுகள் உறக்கத்தில் இருந்து முளைக்கக் கூடியது.

இதற்கு எடுத்துக் காட்டாக வவுனியா மாவட்டத்தில் மட்டும் 200ாய இனால் பாதிக்கப்பட்டு பல பின் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதுடன், களையினைக் கட்டுப்படுத்தக் முடியாத நிலையும் ஏற்பட்டது எனலாம். அது மட்டுமன்றி எமது யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகள் இச்செடியின் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியுள்ளது. குறிப்பாக வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்குப் பகுதிகளில் உள்ள பிரதேசங்களான, மருதனார்மடம், கொக்குவில், சுன்னாகம், தெல்லிப்பளை, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, புத்தூர், நவக்கிரி, ஆவரங்கால், இராசவீதி, அச்சுவேலி, வளலாய் போன்ற இடங்களில் களைகளாய் விளைநிலங்கள் மற்றும் சாலையோரங்களில் செழித்துக் காணப்படுகின்றன.

பார்த்தீனியமானது பார்த்தீனின் (Parthenin) அம்புரோசின் (Ambrosin) ஹைமெனின் (Hymenin) ரெற்றாநியூறின் (Tetraneurin) போன்ற நச்சு இரசாயனங்களைச் சுரக்கின்றது. ஒரு பச்சைப் புற்றுநோய் போலப் பரவும். இவற்றின் மூர்க்கத்தனமான வளர்ச்சியினால் விளைநிலங்களில் பயிர்கள் தலையெடுக்க முடிவதில்லை. அத்துடன் சுதேசியச் செடி, கொடி இனங்களும் அழிந்து வருகின்றன. இதனால் எமது உயிர்ப்பல்வகைமை (Biodiversity) பெரிதும் பாதிப்படைகின்றது. ஆரோக்கியம் என்பது கருவறை முதல் கல்லறை வரை பங்களிப்புச் செய்கின்றது. சுத்தமான வளியை நாம் சுவாசிக்க வேண்டும். நாம் சுத்தமான வளியைச் சுவாசிக்க வேண்டுமென்றால் நாம் எமது சுற்றுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலை ஒழுங்காக வைத்திருக்கு வேண்டும். இப்பார்த்தீனியத்தால் சுற்றுப் புறத்தில் ஏற்படும் பாதிப்புகள் பற்றி நோக்குகையில் தேசிய நெடுஞ்சாலைகள், அழகின்மையையும், ஏற்படுத்துகின்றது. இச்செடிகளை அழிப்பது கட்டாயமாகும். இவை விளை நிலங்களையும் வளிமண்டலத்தையும் பெரிதும் மாசுபடுத்துகின்றது. பயிர்களுக்குப் பாயும் நீரையும் பங்கு போடுகின்றது.

பார்த்தீனியம் வெளியிடும் மகரந்தம் மற்றும் வித்துக்களின் மூலம் விலங்குகள், மனிதர்களுக்கு சுவாசக கோளாறுகளையும் ஒவ்வாமையினையும் ஏற்படுத்துகின்றன. இவை எமது உடலில் படும் போது ஒரு விதமான அரிப்பு காணப்படுவதுடன் சொறி, கரப்பான் போன்ற சரும நோய்களும் உருவாகின்றது. கண் எரிச்சல், கண்ணைச்சுற்றி வீக்கம், கண் செந்நிறமாக மாறுதல், தோல் திட்டுத் திட்டாக மாறுதல் இவற்றை உண்ணும் கால்நடைகள் அதிகளவில் உமிழ்நீர் சுரக்கின்றது. அத்துடன் கால்நடைகளின் பால் ஒரு விதமான கசப்புத் தன்மை யையும் மறைமுகமான நச்சுத் தன்மையையும் கொண்டிருக்கும். பார்த்தீனியம் இச்செடரோபோரசு ஆனது ஆஸ்துமா என்ற ஈழநோயையும், குருதிச் செவ்வனு நலிவு (ஈசிபோபீலியா) எனப்படும் நோயையும் உண்டாக்குகின்றது.

இவற்றை முறைப்படி அழிப்பதாயின் கைகளில் உறையணிந்து கொண்டு, இத்தாவரம் பூக்கும் முன்னரே, வேரோடு களைந்து பள்ளத்தில் இட்டுச் சமையல் கல் உப்பு கலந்த சோப்பு நீர்க் கரைசல் தெளித்து எரித்து விடலாம். க்கும் சமையத்திற்கு முன்னர் நிலங்களை உழுது, நிலத்தில் மட்கச் செய்வதும் சாலச் சிறந்ததாகும். இவ்விடங்களில் ஆவாரம்பூச் செடிகளை நாட்டி வளர்ப்பதன் மூலம் மட்டுமே இக்களைகளை நாம் அழிக்க முடியும். மேலும் இவைகளைத் தழைச்சத்தாக இடுவதன் மூலம் இவற்றின் பூக்கள் ஊடாக இவை வளர்ந்து பரவுவதைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும். மாற்றுப் பயிர்களாக வளரக் கூடிய சோளம், மக்காச்சோளம், கம்பு போன்ற பயிர்களை வளர்ப்பதன் மூலமும், பயிற்சுழற்சி முறையில் சாமந்தி பயிரிடுவதன் மூலமும், பார்த்தீனிய களையின் தாக்கத்தை வெகுவாக குறைக்கும். இரசாயன முறைப்படி பார்க்கையில், கிளைபோசேட் 10ml உடன், 20g அம்மோனியம் சல்பேட் 2ml சோப் திரவத்தை ஒரு லீட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். அல்லது மெட்ரிபூசின் 3g - ஒரு லீட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். பார்த்தீனியம் முளைப்பதற்கு முன் ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ அட்ரசின் என்ற களைக் கொல்லியை தெளிப்பதன் ஊடாக கட்டுப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எந்தவொரு தழையும் மக்க வைத்தால் அது உரமாக மாறிவிடும். அதன் அடிப்படையில் இச்செடியானது அதிக சத்துகளுடன் கூடிய இயற்கை உரமே. அது மட்டுமன்றி இதன் மூலம் தயாரிக்கப்படும் உரம் கம்போஸ்ட் உரம் சாதாரண தொழு உரத்தைவிட இரண்டு மடங்கு சத்துக்கள் அதிகம் உள்ளது. மண்புழு உரம் இடுவதன் மூலம் கிடைக்கும் சத்துக்களுக்கு சமமான சத்துடையது பார்த்தீனியம் மூலம் தயாரிக்கப்படும் உரம். அது மட்டுமன்றி பயிர்களுக்குத் தேவையான தழை, மணி, சாம்பல், கல்சியம், மக்னீசியம் போன்ற ஐந்து வகையான சத்துக்களும், அதிக அளவில் இவ்உரத்தின் மூலம் கிடைக்கின்றது என ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது. மக்கிய பார்த்தீனிய உரமானது மனிதர்கள், கால்நடைகள் மற்றும் சுற்றுப் புறச் சூழலுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படுத்தாது.

பார்த்தீனியம், அர்சென்டேடம் அமெரிக்க நாடுகளில் மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக வட அமெரிக்காவைச் சேர்ந்த சிகரில்லா அபச்சி மக்கள் பயன்படுத்துகின்றனர். மேலும் இரண்டாம் உலகப் போரின் போது பார்த்தீனியத்தின் ஒரு வகையானது இறப்பர் உற்பத்தியில் இறப்பருக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டது எனலாம்.

பார்த்தீனியத்தை அழிக்கத் தவறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். 1999 ஆம் ஆண்டி 35 ஆம் இலக்க, தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் படி, பார்த்தீனியம் விளைநிலங்களில் அல்லது வீட்டு வளவுகளில் காணப்படின் அதனை அழிப்பது உரிமையாளர்களின் கடமை ஆகும். அழிக்கத் தவறின் குற்றமிழைத்தவராகக் கருதப்பட்டு, ஆறு மாதங்கள் வரை சிறைவாசமும், ரூ.100000 வரை தண்டப்பணமும் அறவிடப்படும்.

பார்த்தீனியத்தை கட்டுப்படுத்த பின்பற்ற வேண்டிய சில வழிமுறைகள்

1. நிகழ்கால, எதிர்கால சந்ததிகளின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தும் நோக்குடன் சுற்றுச்சூழல் மற்றும், உயிரியல் பன்மைத்துவம் பேண வேண்டும்.
2. உரிய அதிகாரப் பரப்புக்குரிய வலயங்களை பரிசீலிப்பதற்கு பொருத்தமான குழு அமைத்து, காலவரையறை தயாரித்தல் வேண்டும்.
3. நிலவும் சுற்றாடல் பிரச்சினைகளை பரிசீலனையின் போது இனங்காணுதல்.
4. ஆகக் குறைந்தது மாதம் ஒரு தடவையாவது கூட்டம் நடாத்துதல்.
5. பிரதேச குழுவினால் தீர்வு காண முடியாத பிரச்சினைகள் தொடர்பில், உரிய உள்ளூராட்சி நிறுவன, பொதுவசதிகள் குழு ஊடாக தீர்வு காணுதல் மற்றும் மாவட்டக் குழுவிற்கு அறிவித்து பொருத்தமான தீர்வு காணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உரிய உள்ளூராட்சி மன்றங்கள் குறித்த ஆதனத்திற்கு துப்பரவு செய்வது தொடர்பில் உரிய அறிவித்தல் வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.
7. தேவை ஏற்படும் போது பொதுமக்களுக்கு தெளிவூட்டுதல்.
8. தேவை ஏற்படும் போது ஏனைய அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற மற்றும் தனிநபர்களை வெளிக்கள ஆய்விற்கு அல்லது கூட்டத்திற்கு அழைத்தல்.

# வாசிப்பை நேசிப்போம்

*வளர்ச்சி வாசிப்பின் அறிவு*
*இதனை வாசிக்காமல் போனால்...*
*வளர்ச்சிக்கே முறிவு!!!*

**வி.திசானுகா**
**தரம் - 8**
**யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி.**

*சூரியன் என்பது*
*விடியும் வரை....*
*ஆனால் வாசிப்பு*
*என்பது சாகும் வரை!!!*

*உலகை சுற்றி அறிய*
*நீண்ட காலம் எடுக்கும்...*
*ஆனால் புத்தகம் விளக்கு*
*இதனை கற்றறிய சிறிய காலம் போதும்!!!*



*நெருப்பு என்பது*
*அணையும் வரை....*
*ஆனால் வாசிப்பு என்பது*
*மனதில் இருந்து...*
*கலையும் வரை!!!*

*பொதுஅறிவு பெற்றிடவே*
*நீ எப்போதும் வாசி...*
*அறிவுள்ள மனிதனாய்*
*மாற நீ வாசிப்பை நேசி!!!*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகமும் சமூகமும் :

## சமூக வலுவூட்டல் செயற்பாடுகள்



திரு. இரத்தினகுமார் குபேசன்
சிரேஷ்ட உதவி நூலகர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலாநிதி (திருமதி) கல்பனா சந்திரசேகர்
பிரதி நூலகர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கற்றல் செயற்பாடு, அறிவுப் பரவலாக்கம், மற்றும் சமூக வலுவூட்டல் செயற்பாடுகளுக்கான மையமாக நூலகங்கள் காணப்படுவதால், சமூகத்தை தாங்கி நிற்கும் தூண்களுள் ஒன்றாக அவை கருதப்படுகின்றன. நூல்களையும், ஏனைய தகவல் சாதனங்களையும் சேகரித்து வைக்கும் இடமாக மாத்திரமல்லாது, சமூக ஒற்றுமையை வளர்ப்பதிலும், பல்வேறு சமூகங்களின் பல தரப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்வதிலும் நூலகங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. தற்காலத்தில் இடம்பெறும் துரித தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், காலத்திற்குக் காலம் மாற்றமடைந்துவரும் சமூகத்தின் தேவைகளுக்கும் ஏற்ப, நூலகங்கள் பொருத்தமானவையாகவும், இலகுவில் அணுகக்கூடியவையாகவும் இருப்பதை உறுதி செய்வதில், நூலகங்களின் சமூக நலன் சார்ந்த முயற்சிகள் இன்றியமையாதனவாகும்.

இந்நிலையில், நூலகங்களின் சமூகத்திற்கான வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை புதிய வடிவில் கட்டமைத்து வழங்கவேண்டிய பொறுப்பு நூலக சமூகத்திடம் காணப்படுகின்றது. பாரம்பரியமான அல்லது நடைமுறையிலுள்ள நூலகக் கட்டமைப்பு மற்றும் அதன் சேவை வழங்கல் கட்டமைப்பை விடுத்து, புதிய சிந்தனையுடனும் செயலாக்கத்துடனும் நூலகத்தின் சமுதாய வலுவூட்டல் செயற்பாடுகளை நாம் திட்டமிட வேண்டிய தேவை சமகாலத்தில் காணப்படுகின்றது. நாம் வாழுகின்ற சமூகமானது மொழி, சமயம் மற்றும் இனத்தால் வேறுபட்டு, பன்மைத்துவ கலாசாரத்தைக் கொண்டதாக காணப்படுகின்றமையை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இவ்வாறானதொரு நிலைமையில் தனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களினதும், சமூகத்தினதும் தனித்துவங்களையும், அவர்களது தேவை களையும் கருத்தில்கொண்டு, அதற்கேற்ப நன்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைக்கவேண்டிய கடப்பாடு நூலகங்களுக்கு காணப்படு கின்றது. இதன் பொருட்டு, சிறந்த சமூக வலுவூட்டலுக்கான திறவுகோல்களாக அமையக்கூடிய சில விடயங்களைப் பற்றி நோக்குவோம்.

**நூலகங்கள் பங்குதாரராகவும் இணைந்தும் செயற்படல்.**

நூலகங்கள், உள்ளூர் நிறுவனங்களுடனும், பாடசாலைகளுடனும், வர்த்தக நிறுவனங்களுடனும் மற்றும் சமூகக் குழுக்களுடனும் இணைந்து பல்வேறு நூலக சேவைகளை ஒருங்கிணைத்து வழங்கமுடியும். உதாரணமாக தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடனோ அல்லது இலாபமீட்டும் நிறுவனங்களுடனோ இணைந்து பாடசாலைகளில் மாணவர்களின் எழுத்தறிவை மேம்படுத்தக்கூடிய செயற்பாடு களை மேற்கொள்ளலாம். மேலும் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை அணுகு வதற்கான வசதிகளை நூலகங்களில் ஏற்படுத்திக் கொடுத்தல், சுகாதார விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் கலை, கலாசார, இலக்கிய நிகழ்வுகளை இணைத்து ஒழுங்கமைத்தல் போன்றவற்றில் பங்களிக்கலாம்.

- ரூமேனியாவில், Bilionet மூலம் பயிற்றப்பட்ட நூலகர்கள் 100,000 விவசாயி களுக்கு இணையம் மற்றும் கணினி சேவைகள் ஊடாக அரச மானியங்களை பெற்றுக்கொள்ள உதவியுள்ளனர்.
- பொதுசன நூலகங்களின் உதவியுடன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிதிப் படிவங்களைப் பெற்று, நிரப்பி, அரசாங்கத்திற்கு சமர்ப்பித்து, இந்நிதி உதவியினை (US $ 187) விவசாயிகள் பெற்றுகொண்டனர்.
- பெண் விவசாயிகளுக்காக உகண்டா தேசிய நூலகத்தினால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிநெறியானது 2012 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- உள்ளூர் மொழிகளில் நடாத்தப்படும் இப்பயிற்சி நெறியானது, பெண் களிடத்தில் தொழில்நுட்ப திறன்களை வளர்த்தல், அவர்களது உற்பத்தி பொருட்களை online மூலம் சந்தைப்படுத்துவதற்கு உதவுதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் பெண்களை வலுவூட்டி அவர்களது பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துகிறது.
- செய்முறை பயிற்சிகளுக்கு மேலதிகமாக, mobile phones மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் விவசாயத் தகவல்களும் வழங்கப்படுகிறது.
- கலாசார பாரம்பரியமும் விலைமதிப்பற்ற ஆவணச்சேகரிப்பையும் கொண்ட வடக்கு மாலி (மேற்கு ஆபிரிக்கா) பிரதேசமானது 2013இல் ஆயுதக் குழுக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிப்புக்கு உள்ளானபோது, அங்குள்ள பொதுசன மற்றும் தனியார் நூலகங்கள், தன்னார்வலர்கள் மற்றும் சர்வதேசத்தின் உதவியுடன் அவற்றை பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்துவதில் முன்னின்று உழைத்தன.

தொடர்ந்து குறித்த ஆவணச் சேகரிப்பை மறுசீரமைத்தல்இ கணினிமப்படுத்தல் போன்ற நடடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

**நடமாடும் நூலக சேவையினை விரிவாக்கல்.**

மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதிகளைக் கொண்ட பிரதேசங்களுக்கும், வளப்பற்றாக்குறையுடன் வாழ்கின்ற சமூகக்குழுக்களுக்கும் நடமாடும் நூலக சேவையினை வழங்குவதன் மூலமாக தகவல் சாதனங்களுக்கான அணுகலை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இதன் மூலம் புதிய மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவலை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை அவர்களுக்கும் வழங்கமுடியும்.

இது தவிர, சமூக வலுவூட்டல் செயற்றிட்டத்தினூடாக பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கான இணைய வசதிகள், அவர்களுக்கென பிரத்தியேகமாக தேவைப்படும் தகவல் சாதனங்களுக்கான அணுகல், கல்வி மேம்பாட்டு நிகழ்வுகளை ஒழுங்கமைத்தல் என்பவற்றிற்கும் உதவலாம்.

- கென்யா மற்றும் உகண்டாவில், பல நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் தொலைவில் காணப்படும் பாடசாலைகளுக்கிடையில், விவாதங்கள், வினாடி வினாக்கள், போட்டிகள் போன்றவற்றை Kisumu பொதுசன நூலகமானது smartphone, laptop and video conferencing திட்டத்தின் கீழ் நடாத்துகிறது.
- ஐரோப்பிய ஒன்றியத்தில், பொதுசன நூலகங்களின் மூலம் வருடாந்தம் 250,000 பேர் வேலை தேடுகின்றனர்.
- ICT மற்றும் திறன்களுக்கான அணுகுகையை பொதுசன நூலகங்கள் கொண்டுள்ளமையாலும், பெரும்பாலான வேலைகளுக்கான விண்ணப்பிக்கும் பொறிமுறை onlineக்கு மாற்றமடைந்து உள்ளமையாலும், பொதுமக்களின் வேலை தொடர்பான விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் செயற்பாடுகளுக்கும் இந்நூலகங்கள் துணைநிற்கின்றன.
- நெதர்லாந்திலுள்ள Boekstart எனும் அமைப்பானது பகல்நேர பராமரிப்பு மையங்கள், சுகாதார நிலையங்கள், பொதுசன நூலகங்கள் மற்றும் ஆரம்பப் பாடசாலைகளுடன் இணைந்து, ஆண்டொன்றிற்கு 75,000 சிறுவர்களுக்கு நூல்கள் மற்றும் எழுத்தறிவு பயிற்சிகளை வழங்குகிறது.
- தேசிய மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களினால் ஆதரவளிக்கப்படும் இச்செயற்திட்டமானது, சிறுவர்களிடத்தில் கல்வியறிவை மேம்படுத்துவது தொடர்பில் பணியாற்றும் நிறுவனங்களிடயே நீண்டகால ஒத்துழைப்புடன் செயற்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்தோனேசியாவில், மக்களின் கல்வி மற்றும் எழுத்தறிவு வீதத்தை அதிகரிப்பதில் இந்தோனேசியா தேசிய நூலகம் முக்கிய பங்கு வகிக்கிறது. மக்கள் பரந்து வாழும் பல தீவுகளைக் கொண்ட இந்தோனேசியாவில் நூலக சேவைகள் படகுகள் மூலமாகவே வழங்கப்படுகின்றன.

**கலாசார மற்றும் பன்மொழி நகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.**

பல மொழிகளைப் பேசுகின்ற, பன்மைத்துவ கலாசார வேறுபாடுகளையுடைய சமூகங்களுக்கிடயில், குறித்த சமூகங்களின் தன்மைக்கேற்ப, அச்சமூகங்களை இணைக்கக்கூடியவாறான கலாசார மற்றும் மொழி சார்ந்த நிகழ்வுகளை குறித்த சமூகங்களுடன் இணைந்து நூலகங்கள் திட்டமிட்டு நடாத்தலாம். இத்தகைய கலாசார நிகழ்வுகள், மொழி வகுப்புகள் மற்றும் பன்முக கலாசார கொண்டாட்டங்களை நடாத்துவதன் மூலம் சமூகம் சார்ந்த அனுபவத்தை பெற்றுக்கொள்வதுடன், சமூகங்களுக்கடையில் சிறந்த புரிந்துணர்வையும் ஏற்படுத்த முடியும். மேலும் பல்வேறு மொழி சார்ந்த தகவல் சாதனங்களுக்கான அணுகலை வழங்குவது, மொழி ரீதியான தடைகளை கடந்து வாசிப்பில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குகிறது எனலாம்.

**விசேட தேவையுடையவர்களுக்கான சேவைகளை வழங்கல்**

நூலகங்கள் எப்போதும் விசேட சேவைகளை எதிர்பார்த்திருக்கும் முதியோர், சிறுவர், மாற்றுத்திறனாளிகள், குறைந்த வருமானத்தை ஈட்டும் சமூகத்தினர், மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கான தகவல் சேவைகளை வழங்க முன்வர வேண்டும். குறிப்பாக, நூல் இரவல்வழங்கல் சேவை, அரச ஆவணங்களை அணுகுவதற்கான வசதி, சமூக தகவல் விழிப்புணர்வு சேவை மற்றும் விசேட தகவல் அணுகல் சேவை என்பவற்றை திட்டமிட்டு வழங்கமுடியும்.

- வளர்முக நாடுகள் பலவற்றில், வசிப்பதற்கும், கற்றல் மற்றும் தொழில்சார் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தேவையான வெளிச்சத்தையும் மின்சாரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு கிராமப்புற பொதுமக்கள் பொதுசன மற்றும் சனசமூக நிலைய நூலகங்களை நாடி வருவதைக் காணலாம்.


வினைத்திறன்மிக்க சமூக மேம்பாட்டு முயற்சிகள், நூலகங்களுக்கு மட்டுமல்லாது சமூகத்திற்கும் பயனுடையதாகும். நூலகங்கள் சமூகத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம் சமூக முன்னேற்றத்தில் தாக்கம் செலுத்த முடியும். குறிப்பாக பன்மைத்துவ சமூகமொன்றில், கல்வி அடைவுமட்டங்களை உயர்த்து வதற்கும், வாழ்நாள் கல்விக்கும் மற்றும் சமூக வலுவூட்டலுக்கும் நூலகங்கள் பங்களிக்கின்றன. அத்துடன், சமூகத்தில் காணப்படுகின்ற தகவல் தேவைக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டுப்பாட்டை நீக்குவதன் மூலம் - அதாவது பொருத்தமான தகவலை அணுகுவற்கான வசதிகளை மேற்கொள்வதன் மூலம் - சமத்துவம் மற்றும் சமூக நீதியை மேம்படுத்துகின்றன நூலகங்கள். மேலும், நூலகங்களின் சமூக ஈடுபாடானது, சமூக ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதுடன் சமூகநலன் சார்ந்து சேவைகளை மேம்படுத்தவும் உதவுகின்றன.

பல்வேறு சமூகங்களின் பல தரப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் ஆற்றல்மிக்க நிறவனங்களாக நூலகங்கள் விளங்குவதற்கு, சமூக வலுவூட்டல் செயற்பாடுகள் மிகவும் இன்றியமையாதனவாகும். மேலும், தந்திரோபாய கூட்டணிகள், புத்தாக்க நிகழ்வுகள் மற்றும் சேவை இலக்குகளைக் கொண்டிருப்பதன் மூலம் நூலகங்கள் தமது சேவைகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்ளும் சமூகத்தினரை சென்றடைவதையும், தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதையும் உறுதி செய்யலாம். சமூக வலுவூட்டலை தமது பிரதான பணிகளுள் ஒன்றாக உள்வாங்குவதன் மூலம் நூலகங்கள் உலகளாவிய அறிவு மற்றும் வளங்களுக்கான அணுகலை வழங்கி சமத்துவமான, ஒன்றிணைக்கப்பட்ட சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்தல் - மொழியறிதல் - நூல் தேடல்

பரா கஜேந்திரன்
நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்,
தேசிய வெளிக்கள நிலையம்,
தொண்டைமானாறு.

## வாசித்தல்

வாசிப்பதால் மனிதன் முழுமை பெறுகின்றான். வாசிப்பே அறிவை முழுமைப்படுத்துகின்றது. ஆழமாக்குகின்றது. விரிவாக்குகின்றது. வாசித்தல் அல்லது படித்தல் என்பது எழுதப்பட்ட உரையின் எழுத்துக்களைப் பார்த்து சொற்களைப் புரிந்து, அதில் கூறப்பட்ட கருத்தை உணர்ந்து கொள்வது எனலாம். வாசித்தல் எழுத்தறிவின் அடிப்படைக் கூறு.

ஒருவன் சிறந்த அல்லது முழுமையான மனிதனாக அன்றி மனிதனாகவே இருக்க வேண்டுமாயின், அவன் முதலில் தன்னை அறிய வேண்டும். தன்னை அறிதல் எனப்படுவது யாதெனில் தன்னைச் சூழ உள்ள உலகை அறிதல் எனப் பொருள்படும். உலகை அறிவது அல்லது புரிவது என்பது இருவகைப்படும்.

(க) தான் சார்ந்த சமூகத்தின் மொழி, வரலாறு, மதம், கலை மற்றும் பண்பாட்டு விழுமியங்களைப் புரிதல்.

(உ) தனைச் சூழ உள்ள சமூகத்தின் மொழி, வரலாறு, மதம், கலை மற்றும் பண்பாட்டு விழுமியங்களைப் புரிதல்.

இவற்றைப் புரிவதாயின் அறிவுத்தேடல் அவசியமாகின்றது. இவ்வறிவுத் தேடலானது ஏட்டறிவு (கல்வி) பட்டறிவு (ஞானம் / பொது) எனக் காணப்படுகின்றது.

குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனத்தில் தெரிவு செய்யப்பட்ட கலைத் திட்டத்தில் சான்றிதழ் அல்லது பட்டம் ஒன்றைப் பெறுவதற்காக வரையறுக்கப் பட்ட அளவில் பெறும் அறிவு ஏட்டறிவாகின்றது. இவ்வாறாக பெறப்படும் அறிவானது குறுகிய வட்டம் கொண்டது. அத்துடன் ஆய்வாழம் கொண்டதாகவும், பரந்த தன்மை கொண்டதாகவும் அமைவதில்லை.

எனினும் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனத்தில், தெரிவு செய்யப்பட்ட அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட கலைத்திட்டத்தில் அறிவைப் பெறா விட்டாலும் கூட ஒருவன் மொழியறிந்து, நூல்தேடி வாசிப்பதால் பொது அறிவை அல்லது ஞானத்தைப் பெறுகின்றான். இவ்வாறு வாசிப்பதால் பெறப்பட்ட அறிவுடன், அவன் அனுபவத்தை இணைப்பதால் பெறப்படும் அறிவானது பட்டறிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு வளர, வளர மனிதன் தன்னையும் தன் சூழலையும் உலகையும் புரிந்து கொள்கின்றான். அதாவது வாழ்வியல் மொழியியல், பொருளியல் எனப் பல இயல்களை அறிந்து முழு மனிதனாகின்றான். இதனால் அவன் எண்ணங்கள் விரிவுபடுகின்றது. புரட்சிகரமான சிந்தனைகள் தோன்றுகின்றது. இதன் வெளிப்பாடாக ஆரோக்கியமான முன்னேற்றகரமான சமூகம் உருவாகின்றது. இதனால் தான் லெனின் "புரட்சிப் பாதையில் கைத்துப்பாகிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே!" என்று கூறியுள்ளார்.

**தாய்மொழியறிதல் (தமிழ்)**

தாய்மொழியென்பது ஒரு இனத்தின் அடையாளம். பண்பாட்டின் குறியீடு, தம் வாழ்வியலை அடையாளப்படுத்தும் ஒரு கலங்கரை விளக்கம். என்னதான் முன்னேற்றம் பெற்றாலும், நகரங்களை வளர்த்தாலும், அதிநவீன வாழ்வியல் மாற்றங்களுக்குச் சென்றாலும் தன் தாய்மொழியறியாவிடின் தம் சுயம் இழந்ததற்குச் சமனாகும். தாய்மொழியறியாத ஒருவன் தாய்மொழியல்லாதவனாகி, தேசிய இனங்களிலிருந்து விடுபட்டு நாடோடி ஆகிவிடுவான். அதாவது ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்கு கடத்தப்படும் மொழியே தாய்மொழியாகும்.

மொழிச் சிறப்பெனப்படுவது யாதெனில் அம்மொழிசார்ந்த அனைத்து அமைப்புகளாலும் நேர்த்தியாகவும், சீராகவும், தெளிவாகவும் அமையப் பெற்றிருத்தலே ஆகும். அவ்வாறு அமையப் பெற்ற மொழியொன்று உலகில் உண்டென்றால் அது எம் தாய்மொழி தமிழ் மட்டுமே தான்.

சொற்கள் அல்லது சைகைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி தொடர்பு கொள்வதற்கான திறனே மொழியாகின்றது. இது முறையான அமைப்பைக் கொண்ட இணைப்புக் கருவியாகும். இது இலக்கியம், இலக்கணம் மற்றும் சொல்வளங்களையும் உள்ளடக்குகின்றது. இது இதற்கான மனித வல்லமையைக் குறிக்கும். தனித்துவமான மொழியென்பதற்கு மேற்குறித்த முறைமை ஓர் எடுத்துக்காட்டாகும்.

ஒரு மொழியின் இலக்கியப் படைப்புகள் வளம் மிகுந்ததாவும், பழமையானதாகவும், அதன் தோன்றல் ஏனைய மொழிகளைச் சாராததாகவும் காணப்பட வேண்டும். அதுவே செம்மொழியாக அமையும். இதனால் தான் எம் தாய்மொழியான தமிழ்மொழிக்கு செம்மொழி என்ற அனைத்துலக அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மொழியானது பிறப்பு, இறப்பு, வளர்ச்சி, இடம்பெயர்தல் மற்றும் காலத்திற்கேற்ற மாற்றம் என பன்முகம் கொண்டதாக அமைகிறது. இவை மட்டுமல்லாது அம்மொழியைப் பேசுகின்ற இனத்தின் கலை, வரலாறு, அரசியல், சமூகநிலை, பழக்கவழக்கம், ஒழுக்கநெறிகள் போன்ற பல வாழ்வியல் கூறுகளையும் பண்பாட்டு நிலைகளையும், வெளிப்படுத்துவதாகவும் காணப்படு கின்றது.

இவ்வாறாக உலகின் மூத்தமொழியாகவும், மொழிகளின் தாய்மொழி யாகவும் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட முதிர்வுடன் இன்றுவரை உலகமெங்கும் உயிர்ப்புடன் இருக்கும் மொழியாக எம் தாய்மொழி தமிழ் காணப்படுகின்றது.

**"தமிழால் வளர்ந்தோம் தமிழ் வளர்ப்போம்"**

**நூல் தேடல்**

விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு
நூல் கற்றாரோடு ஏனை யவர்" — குறள் எண் 410

தாய்மொழியறிந்திட தேட வேண்டிய; கற்க வேண்டிய நூல்கள்

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே;
எள்ளின்று எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்" — போத்தனார் -

புத்தகம் வாசகனைப் பார்த்துக் கூறியது. "என்னை மேலிருந்து கீழாகப்படி உன்னை கீழிருந்து மேலாக உயர்த்துவேன்" என்ற கவிஞர் வாலியின் வார்த்தைகளுடன் நூல்களைத் தேடிடுவோம் கற்றிடுவோம் அறிவால் உயர்ந்திடுவோம் என்றோர் சபதம் எடுத்திடுவோம்.

தொல்காப்பி யத்தின் மேலோர்
துலங்குமொரு நூலு முண்டோ?
பல்காலம் சென்ற பின்னும்
பனுவலிது நின்றதைப் போல்
ஒல்காதும் ஓய்ந்திடாதும்
உற்றதகைப் படைப்பு முண்டோ?
வெல்காலம் வேண்டின் இந்த
மாமணிநூல் கற்பீ ரெல்லாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்க இலக்கிய நூல்கள்**



க - அகத்தியம்

உ - தொல்காப்பியம்

மூத்தோர்கள் பாடியருள் பத்துப்
பாட்டும், எட்டுத் தொகையும்
கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்.

ந - பதினெண் மேற்கணக்கு

1 எட்டுத்தொகை

| | | | |
|---|---|---|---|
| (அ) | நற்றிணை | (ஆ) | குறுந்தொகை |
| (இ) | ஐங்குறுநூறு | (ஈ) | பதிற்றுப் பத்து |
| (உ) | பரிபாடல் | (ஊ) | கலித்தொகை |
| (எ) | அகநானூறு | (ஏ) | புறநானூறு |

2. பத்துப்பாட்டு

| | | | |
|---|---|---|---|
| (அ) | திருமுருகாற்றுப்படை | (ஆ) | பொருநராற்றுப்படை |
| (இ) | சிறுபாணாற்றுப்படை | (ஈ) | பெரும்பாணாற்றுப்படை |
| (உ) | முல்லைப்பாட்டு | (ஊ) | மதுரைக் காஞ்சி |
| (எ) | நெடுநல்வாடை | (ஏ) | குறிஞ்சிப்பாட்டு |
| (ஐ) | பட்டினப்பாலை | (ஒ) | மலைபடுகடாம் |

ச. பதினென் கீழ்க் கணக்கு

நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்
பால் கடுகம் கோவை பழமொழி மா மூலம்
இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலையும் ஆய் கீழ்க்கணக்கு.

| | | | |
|---|---|---|---|
| (க்) | நாலடியார் | (ங்) | நான்மணிக்கடிகை |
| (ச்) | இன்னா நாற்பது | (ஞ்) | இனியவை நாற்பது |
| (ட்) | களவழிநாற்பது | (ண்) | கார்நாற்பது |
| (த்) | ஐந்திணை ஐம்பது | (ந்) | திணைமொழி ஐம்பது |
| (ப்) | ஐந்திணை எழுபது | (ம்) | திணைமாலை நூற்றைம்பது |
| (ய்) | திருக்குறள் | (ர்) | திரிகடுகம் |
| (ல்) | ஆசாரக்கோவை | (வ்) | பழமொழி நானூறு |
| (ழ்) | சிறுபஞ்சமூலம் | (ள்) | முதுமொழிக்காஞ்சி |
| (ற்) | ஏலாதி | (ன்) | கைந்நிலை |

**"சாவது நாமாகிலும் வாழ்வது தமிழாகட்டும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பினால் உயர்வோம்

சி.தனுஷ்கா
தரம் - 8
யா/வாதரவத்தை
விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

வீட்டிற்கு வெளிச்சம்
சாளரத்தின் ஊடே
அறிவிற்கு வெளிச்சம்
வாசிக்கும் நூலே!!!

வாசிக்காமல் யார்க்கும்
வளர்வதில்லை அறிவு
இதனை நேசிக்காமல் போனால்
வளர்ச்சிக்கே முறிவு!!!

பொதுஅறிவு பெற்றிடவே
எப்பொழுதும் நீ வாசி
அறிவுள்ள புத்தகங்கள்
அனைத்தையுமே நேசி!!!

அடிமைகளின் சூரியனாம்
ஆபிரகாம் லிங்கனுமே
அமெரிக்க குடியரசு தலைவனென்று
ஆக்கி உயர்த்தியதும் புத்தகமே!!!

மாணவப் பருவத்திலே
பாட புத்தகங்களின் வாசிப்பு
சதத்தினையும் தொட வைக்கும்
சாதிக்க வழி வகுக்கும்!!!

ஊருலகம் யாவும் யாவும்
சுற்றி அறிய காலம் கொள்ளும்
புத்தகங்கள் அனைத்தும் விளக்கும்
கற்றறிய குறுகிய காலம் போதும்!!!

இருந்த இடத்தில் எல்லாம் அறிய
கையடக்க நூலே போதும்
கற்றறியும் வழக்கமிருந்தால்
சுடர் விடும் உன் அறிவெப்போதும்!!!

கற்பனை உலகிற்கே - நம்மை
இட்டுச் செல்லும் புத்தகங்கள்
மூளைக்கும் சிறகு முளைக்கும்
மூவுலகும் இட்டுச் செல்லும்!!!

நூலகங்கள் சென்று வர
நாளும் நீ தவறிவிடாதே
நுண்மதி பெருக்கி வைக்கும்
நூல் கற்க மறந்திடாதே!!!

புதுப்பித்துக் கொள்ள நீயும்
புத்தகம் வாசித்துப் பழகு - உன்னை
புதுப்பிக்க புதுப்பிக்க புறந்தள்ளாது
இந்த உலகம்!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைவிலகலுக்கான தடைகளை அறிக்கையிடுகிறார்களேயொழிய விடைகாண முடியாதவாறு அவை வெறுங் கிடப்பிலே விடப்பட்டுள்ளது.

**சி.சிதம்பவேணி**

இலவசக்கல்வி, இலவச உணவு, இலவச உடை, இலவச பாடப்புத்தகம், இலவச மருத்துவம் இவ்வாறு பல வரப்பிரசாதங்கள் மாணவர்களுக்குப் பெரும்பேறாக இருந்த போதும், கல்விப் பெருஞ் செல்வப்பேறு, உரியவாறு உரிய இலக்கை இலங்கையில் எய்தவில்லை என்பது மிகவும் வருந்தக்கூடிய தொன்றாகும்.

இலங்கையானது பொருளாதார நெருக்கடியாலும், போதை வஸ்து களினாலும் வீடு வாசல் நிலபுலம் இன்மையினாலும் உழைப்புக்கேற்ற உடல் பலமும் ஊதியமும் இன்மையினாலும் பெற்றோர் பிள்ளைகளிடையே அன்னியோன்னியம் அருகிப் போனதாலும் சமூக இசைவாக்கம் என்பது மருந்துக்கும் தட்டுப்பாடாக நிலவுவதாலும், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எவராலும் கவனிக்கப்படாமையினாலும் இணைய வழிப் பாவனையினால் ஏற்பட்ட தவறான வழிகாட்டுதல்களினாலும், பாலியல் வழி துன்புறுத்தல்களினாலும் அதிபர், ஆசிரியர் பழைய மாணவர்களின் கைகளிலே அதிகளவு பணமானது பாவனையில் நிலவுவதாலும், ஏகப்பட்ட கடன் தொல்லைகளினால் பெற்றோர் ஒளிந்து வாழ்வதினாலும் பெற்றோரே பஞ்சமா பாதகங்களினால் மாண்டு போயிருப்பதனாலும், குறிப்பாக எமது சமயம் கட்டிடங்களிலேயும், காசு பணங்களிலே கவனமாயிருந்து விலாசமாகவும் விவரணமாகவும் இருப்பதனாலும் அடுத்து பிரமுகர்களையே முதலீடாகக் கொண்ட சமூகம் ஏமாந்திருப்பதனாலும், இலங்கையானது சிறுவர் துன்புறுத்தல்களால் 2022 முதல் எட்டு மாத காலப்பகுதியில் 7568 சாட்சிகளோடு கூடிய முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குப் பதிவாகியுள்ளமை ஒரு சிறு அளவே தவிர, இதைவிட மும்மடங்கு ஒன்பது மாகாணங்களிலும் இன்னுமே பதிவாகாமல் இருக்கின்ற செய்தியால் மாணவர்கள் நொந்து போய் இருப்பதனாலும் 23 இலட்சம் மாணவர்கள் மந்த போஷணையால் வதங்கி வாடியிருப்பதனாலும் இடைவிலகல் என்பது சர்வசாதாரணமாக அதுவும் வடமாகாணத்தில் அதிகரித்துக் காணப்படு கின்றது. இந்த மாதிரி ஒன்பது மாகாணங்களிலும் மோசமாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இடைவிலகலுக்கு முக்கிய காரணம் வறுமையேயாகும். 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வறுமையின் எல்லையைத் தாண்டியுள்ளமையானது கொழும்பை இன்னுமே வாட்டவில்லை. மாறாக வளர்ந்த வண்ணமேயுள்ளது.

ஆன்மீகமும் அரசியலும் வசதியானவர்களைத் தூக்கிக் கொடியேற்றுகிதே யொழிய, வறுமையான குடும்பங்களின் பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலைக்குப் போகும்படியாக ஏதாவது செயற்றிட்டத்தை முன்வைக்கிறாகளாவென்றால் அது இல்லை!

மக்களுக்காக அரசியல்,
மக்களுக்காகவே ஆன்மீகம்,

மாணவர்களுக்காவே இந்த இரண்டும்! எல்லாமே மக்களுக்காவும், மாணவ மணிகளுக்குமாகவே இருக்கும் போது போலியான மாயை வாழ்வுக்கும் ஆடம்பரமான நாகரீக வாழ்வுக்கும், அவசியமற்ற கட்டிடங்களுக்கும் கண் கடை தெரியாத அதீத நம்பிக்கையினால் ஏற்படும் புகழ் விரும்பிகளின் அனாவசியமான செலவழிப்புகளே வறுமைக்கும் இடைவிலகலுக்கும் மூலகாரணமாகும். இதற்கான மருந்து இந்த மண்ணிலேயே விதைக்கப்பட்டுள்ளது.

மிகமுக்கியமான விடயமாக, முப்பத்தைந்து புள்ளிகளுக்குக் கீழே எடுப்பவர்கள் பற்றியோ, எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள் பற்றியோ, அவர்களை எப்படிச் சித்திகரமாக்கலாம் என்பது பற்றியோ எவருமே அறவே சிந்திக்கவேயில்லை. இவர்களின் கதி என்ன? விடை இடைவிலகலேயாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளங்கையில் உலகம்

பி.சிவதர்சிகா
அச்சுவேலி தெற்கு.

மனிதராகப் பிறந்த அனைவருக்குமே உலகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று வர ஆவல் இருப்பது நிச்சயம். ஆனால் குடும்பச் சூழலில் சிக்கித் தவிக்கும் பெரும்பாலானோருக்கு இந்த வாய்ப்புக் கிடைக்குமா என்பது சந்தேகமே. பணம் படைத்தவர்கள் வெளிநாட்டுக்குச் சுற்றுலா சென்று ஆனந்தம் அடையும் வாய்ப்புக்கள் அதிகம். ஏழை மனிதனோ தன் கிராமச் சுற்றுப்புறத்தை விட்டு அதிகதூரம் செல்லாமலே வாழ வேண்டிய நிலையும் உள்ளது. நடுத்தர மக்கள் இரண்டுக்கும் நடுவில் சிக்கித் தவிப்பவர்கள். சம்பாதிக்கும் பணம் அன்றாட வாழ்வின் தேவைகளுக்கே செலவாகி விடும். இந்நிலையில் இவர்களுக்கு இத்தகைய வாய்ப்புக்கள் கிடைப்பது அரிது. நடுத்தர மக்கள் அதிகம் வாழும் நாடுகளில் இலங்கையும் ஒன்று. இந்நடுத்தர மக்களின் அறிவு மற்றும் சுதந்திர தாகத்தைத் தீர்க்க வந்திருப்பதே இணையம் என்று சொன்னால் மிகையாகாது.

உலகம் முழுவதிலும் கணினிகளை ஒரு திரையின் பின்னால் இணைத்து அவற்றுக்குள் கணக்கிட முடியாத அளவுக்கு இடம் வைத்து கோடிக்கணக்கான செய்தித்துளிகளைப் பார்ப்பதற்கு வசதி செய்துள்ள ஒரு கண்ணுக்குத் தெரியாத வலைப் பின்னலே இணையம். இணையம் செயற்படுவதைச் சிறிது விளக்கமாகப் பார்ப்போம்.

நீங்கள் ஒரு கணினி முன் உட்காந்திருக்கிறீர்கள்; அதில் ஒரு திரை இருக்கிறது; உங்கள் கணினியில் இணைக்கப்பட்டிருக்கும் தொலைபேசி மூலம் இணையம் இணைப்பு வழங்குபவரைத் தொடர்பு கொள்கிறீர்கள். தொடர்புக்கு நீங்கள் பணம் கட்டியிருக்க வேண்டியது அவசியம். அந்தத் திரைக்குள் அந்தரத்திலே கண்ணுக்கத் தெரியாத நிலையில் கணக்கிலடங்கா இடங்கள் இலட்சக்கணக்கான தகவல் பக்கங்கள் மற்றும் கோடான கோடி செய்திக் குறிப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. குழந்தையிடம் அன்பாக இருப்பது எப்படி என்பதில் ஆரம்பித்து, அணுகுண்டு தயாரிப்பது எப்படி என்பது வரை எழுத்துக்களாகவும், எண்களாகவும், படங்களாகவும், ஒலிப்பேழைகளாகவும், ஒளிச்சுருள்களாகவும் இத்தகவல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சுருங்கச் சொன்னால் வற்றாத தகவல் சுரங்கங்களின் தொகுப்பே இணையம்.

ஆயிரம் ஆயிரம் நூல்களைச் சேர்த்தாலும் இந்த நிழல்வெளி அற்புத மாயா ஜாலத்துக்கு இணையாகாது. பல இலட்சக்கணக்கான இணைய இரசிகர்கள் தங்களுக்குத் தெரிந்தவற்றை ஏதாவது ஒரு பிரிவில் அனுதினமும் இணைத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கான புதிய செய்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்று வருகின்றன. இவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றித் தெரிய வேண்டுமானால் கணினி மூலமே தொடர்பு கொள்ள முடியும். உங்கள் புகைப்படம் குடும்பப்புகைப்படம் ஆகியவற்றை இணைத்து அனுப்பவும் இயலும். உங்களுக்கு வரும் கடிதநகல்களையும் அவருக்கு அனுப்பலாம். நீங்கள் விரும்பினால் இவை அனைத்தும் கட்டணம் இல்லாமலேயே இணைய வசதி நம்மிடம் இல்லாவிட்டாலும் நிறைய கடைக்காரர்கள் (Cyber cofes) அதற்கு உதவுவார்கள்.

ஈ மெயில் சேவை மூலம் இக்கடிதம் பரிமாற்றம் நிகழ்கிறது. உங்களுக்கென்று ஒரு பெயரும் முகவரியும் இருப்பது போல் இதற்கும் ஒரு முகவரியும் பெயரும் பதிவு செய்து கொள்ள வேண்டும். யாகூ (Yahoo) ரொக்கட்மெட் (Rocktmait) ஹொட்மெயில (Hotmail) மெயில் சிட்டி (Mail city) பிக்புட் (Bigfoot) என்ற எண்ணற்ற நிறுவனங்கள் இந்த ஈமெயில் சேவையை இலவசமாகத் தருகின்றன.

இந்த ஈமெயில் சேவையால் மாணவர்கள் தங்களுடைய பாடத்தில் வரும் சந்தேகங்களை உலகம் முழுவதிலும் உள்ள அறிஞர்களிடம் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம். சக மாணவர்களிடம் கலந்துரையாடலாம். தங்களின் மேற்படிப்புக்குத் தேவையான விபரங்களையும் ஒப்புதல்களையும் குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களில் இருந்து தகவல் தேடும் இயந்திரங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம். பல்வேறு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் வழங்கும் படிப்புக்கள் மற்றும் பாடத்திட்டங்கள் குறித்தும் அறிந்து கொள்ளலாம்.

இத்தகவல் தேடும் இயந்திரங்கள் (Seargh Engines) மூலம் உங்கள் கட்டுரைகளுக்குத் தேவையான புகைப்படங்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் அல்லது பிரின்ட் எடுத்துக் கொள்ளலாம். வேலை தேடும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இணையம் ஒரு வரப்பிரசாதமாகும். பல முகவரிகளில் வேலை வாய்ப்புச்செய்திகள் ஆயிரக்கணக்கில் இடம்பெறுகின்றன.

தகவல்களைத் தேடி அறிந்து கொள்ள உதவுபவை தகவல் தேடும் இயந்திரங்கள். நமக்குக் கிரிக்கட் பற்றித் தெரிய வேண்டுமானால் இந்த இயந்திரத்தின் பக்கத்தை எடுத்துத் தேடும் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும். நமக்குத் தகவல் தெரிய வேண்டியதை டைப் அடிக்க வேண்டும். பின்னர் அதற்குப் பக்கத்தில் தேடுதல் என்ற பட்டனைத் தட்டினால் போதும் கிரிக்கட் என்ற வார்த்தையுடன் இணையத்தில் இருக்கும் அனைத்துப் பக்கங்களின் முகவரியையும் (URL) வரிசை அனைத்துப் பக்கங்களின் முகவரியையும் (URL) வரிசையை காண்பிக்கும். URL என்பது Unifoim Prsovie Locotor.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்டது. இந்நிலையில் இணையம் மூலம் உலகமக்கள் அனைவருடனும் தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. இணையத்தின் சாதனை வியப்பதற்கு அரியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்களுக்கு...

நா.சண்முகரத்தினம்,
ஓய்வுநிலை அதிபர்,
புத்தூர்.

சின்னச் சின்ன பிள்ளைகள்
சிறுவர் நீங்கள் கேளுங்கள்
ஆடிப்பாடி மகிழுங்கள்
ஆழ்ந்த நித்திரை செய்யுங்கள்



காலை மாலை வேளையில்
கல்வி கற்க விழையுங்கள்
அப்பா அம்மா சொல்வதை
அமுதமாக கொள்ளுங்கள்

சோம்பி இருக்க பழகாதே
சிறுவர் நீரும் கேட்டிடுவீர்
செய்து நீங்கள் கற்றிடுவீர்
செய்து கற்றல் அதுவன்றோ

பாடல் எல்லாம் இசையுடனே
பாட நீங்கள் முயலுங்கள்
இந்த உலகம் உங்களதே
இனிதாய் வாழ முயலுங்கள்

பயம் கொண்டு இருக்காதே
பாரில் எல்லாம் வாழ்ந்திடுவீர்
கோப தாபம் கொள்ளாதே
கோடி உயிர்கள் இங்குண்டு

பேரன் பேர்த்தி சொல்லும் கதை
நன்றாய் நீங்கள் கேட்டிடுவீர்
காலை மாலை கடவுளை நீர்
கண்ணியமாய் வேண்டுங்கள்



புத்தகங்கள் படியுங்கள்
புதிர் அறிவை பெற்றிடுங்கள்
வாழ்வே இன்பமயமாகும்
வாழ நீங்கள் கற்றிடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிகையாள்

யாத்ராதாஸ்
புத்தூர்.

பிறப்பில் குன்றாது விளங்கும்
பெருந்தோள் மடந்தையென இளங்கோ போற்றும்
கண்ணகியெனும் கதிரொளியால் மறைந்த
வெண்மதியாம் மாதவியின் கதை இது!
முத்தமிழ்க் கன்னியாய் ஈராறில்
மூவேந்தனாம் வெண்கொற்றானிடம்
தலைக்கோள் எனும் வாகை சுமந்த
தலைவியாம் மாதவி இவள்.
மாயோன் மயங்கு சொல்மாலை வரையும்
மங்கை இவள் மறைக்கப்பட்டதன்
காரணம் கண்டீரோ!
குலமரபு மீறிய தீப்பிழம்பு
தலைவன் தொழு தலைவியானது
குற்றமோ?
ஆண்நிகர் பெண்ணியத்தை
அன்றே கேட்டதனால்
அவள் இன்னும் விதிப்பாத்திரமோ?
தலைவனின் பிரிவிலும்
தாயெனும் பாத்திரமேற்றாள்
துன்பக் கதிர்களைத்
துறவறப் போர்வையாக்கினாள்
காப்பிய சிலம்பில் மறுக்கப்பட்டவள்
காவியத்தை ஈன்றாள் மணிமேகலையாய்
சிலம்பு நிகர் மேகலையைத் தந்த
சீர்திருத்தவாதியானவள் துணைப்பாத்திரமல்ல
பார்போற்றும் இரட்டைக் காப்பியத்தாள்.
இறைவனிடம் கேட்கிறேன் அவள்
ஈட்டிய பிழை என்ன?
குலம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்மை தரும் வாசிப்பு

க.டனுஜா
யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி.



வாசிப்பு மனிதனை பூரணமாக்கும். வாசிப்பு என்பது மனிதனுக்கு முக்கியமாகும். நாம் தினமும் வாசித்து பார்க்க வேண்டும். வாசிப்பு என்பது ஒவ்வொரு நாளும் முக்கியம் என்பதாகும். நாம் வாசிப்பை நேசித்தால் வாசிப்பு எம்மைத் தேடி வரும். ஒரு தனி மனிதன் வாழ்க்கையில் வாசிப்பு என்பது அவன் உயிருக்கும் மேலாகும். எனவே வாசிப்பு என்பது சாகும் வரை நம் மனதில் நிலைத்திருக்கும். நாம் தினமும் ஏதாவதை வாசித்து பார்க்க வேண்டும். வாழ்வு என்பது வாசிப்பதற்காகவே அமைந்துள்ளது.

எனவே வாசிப்பு எம் வாழ்வில் ஒரு பகுதி ஆகும். எனவே ஒவ்வொரு நிமிடங்கள் மிக முக்கியமாகும். அப்துல்கலாம் அவர்கள் வாசிப்பு மனிதனை பூரணமாக்கும். அவரது வார்த்தையே நாம் வாசிப்பை நேசிப்பதன் காரணமாகும். எனவே அவருக்கு மதிப்பளித்து வாசிப்பை நேசிப்போம் என்று விருப்புடன் வாசிப்பை நம் வாழ்வில் சேர்த்துக் கொள்வோம். என் வாழ்க்கையில் வாசிப்பு என்பது என் உடலில் ஒரு பகுதி. நாம் அனைவரும் தினமும் ஒவ்வொரு நிமிடமும் வாசிப்பை மனதில் நினைக்க வேண்டும். நாம் சாகும் வரை வாசிப்பை நேசித்து வாழப் பழக வேண்டும். வாசிப்பதற்காகவே பிறந்துள்ளோம். நாம் எல்லோரும் சேர்ந்து வாசிப்பை நேசிக்க வேண்டும். இந்த உலகில் மனிதனை பூரணமாக்குவது வாசிப்பாகும். வாசிப்பை நேசித்து வாயில் வருகின்ற ஒவ்வொரு வார்த்தையையும் வாசிப்பின் முன் அடையாளம் ஆகும். எப்போதுமே வாசிப்பை மனதில் நினைத்தால் மட்டுமே வாசிக்க முடியும். ஒரு மனிதனின் அடையாளம் வாசிப்பாகும். வாசிப்பை நேசித்து வாழ்வில் வெற்றி பெறவும் பெரியவர்கள் வாசிப்பை நேசித்து வாழ்ந்தவர்கள் ஆவார். எமது வாழ்வில் ஒவ்வொரு நிமிடம் பொன்னானது. நூல் என்பது வாசிப்பை வளர்ப்பதற்கு நாம் நூலை தினமும் வாசிக்க வேண்டும். எப்பொழுதும் வாசிப்பு அவசியம். நூலகம் என்பது வாசிப்பை வளர்க்கும் ஒரு பொதுக்கூடம் ஆகும். எனவே வாழ்க்கையில் வாசிப்பை நேசிப்போம். எனவே தினமும் வாசிப்பை நினைத்து வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வைக் கிராமத்தின் தொன்மையும் சிறப்பும் வரலாற்றுப் பாரம்பரியமும் - ஒரு நோக்கு

**ந.கணேசராசா**
**(ஓய்வுநிலை ஆசிரியர்)**
**முன்னாள் உதவி ஆசிரியர்,**
**உதயன், வலம்புரி, ஈழநாடு.**
**நீர்வேலி.**

ஓர் இனத்தின் தொன்மைச் சிறப்பை, வரலாற்றுப் போக்கைத் துல்லியமாக அறிந்துகொள்வதற்கு அவ்வினத்தின் வரலாற்றை நிர்ணயிக்கும் ஆதாரங்களைத் தேடி அறிந்து நடுநிலை குலையாமல் ஆராய வேண்டியது வரலாற்று ஆய்வாளரின் பிரதான பணியாயிருக்கிறது.

அவ்வகையில் வலிகாமம் கிழக்கின் நடுநாயகமாகத் திகழும் நீர்வைக் கிராமத்தின் அமைவிடச் சிறப்பை நோக்குதல் அவசியமாகிறது. கோப்பாய் கிராமத்தைத் தெற்கு எல்லையாகவும், ஊரெழு, அச்செழு கிராமங்களை மேற்கு எல்லையாகவும், சிறுப்பிட்டிக் கிராமத்தை வடக்கு எல்லையாகவும் பரந்துபட்ட வயல் பிரதேசத்தையும் தொண்டைமானாற்று ஆற்றுப் படுக்கையையும் கிழக்கு எல்லை யாகவும் கொண்ட வனப்புமிகு அழகொளிரும் கிராமம் நீர்வேலி ஆகும்.

மாரி காலங்களில் பச்சைப் பசேலெனக் காட்சி தரும் நெல் வயல்கள், கொத்துக் கொத்தாக நெல்மணிகளைக் கொண்டு விளங்குகின்ற காட்சிகள் பார்ப்போர் கண்களுக்கு விருந்தளிக்கின்ற காட்சிகள், பார்ப்போரைக் கவர்ந்திழுக் கின்ற அற்புதக் காட்சிகள், யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிக்குக் கிழக்கே காணப் படும் வயல் பிரதேசம் நீர்வைக் கிராமத்தின் கிழக்கு எல்லையாக விளங்குவது ஒரு தனிச் சிறப்பம்சமாகும். அது மட்டுமன்றி பயன்தரு விருட்சங்கள் தழைத்தோங்கு கின்ற, பக்தி அலையைப் பறை சாற்றுகின்ற ஆலயங்கள், அறிவுக் கண்களைத் திறக்கும் அரிய பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், அழகிய நீர்ச்சுனைகள், வாழை, கமுகு, தென்னை போன்ற வான் உயர் மரங்கள், கைத்தொழிலுக்கு மெருகூட்டும் கைத்தொழிற்சாலைகள், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற அமுத வாக்கிற்கு அமைவாக தோளில் காலை வேளைகளில் கலப்பையுடன் வயல்களுக்குச் செல்லும் கமக்காரர் (இக்காட்சியை இன்று காண முடியாதுள்ளது) பசு நிரைகள், முற்பகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைகளில் நிரை நிரையாக வயல்களுக்கு சென்று மாலையில் வீடு திரும்புகின்ற காட்சிகள் காண்போரைப் பரவசம் கொள்ளச் செய்யும் காட்சிகள் என்றால் அது மிகையில்லை. இயற்கை அன்னையின் தாலாட்டில் இன்றும் கூட தளிர் நடைபோடுகின்ற நீர்வைக் கிராமத்தின் சிறப்பே தனி.

இக்கிராமம் மூன்று மிகப் பெரிய ஆலயங்களையும் பல சிறு தெய்வ ஆலயங்களையும் கொண்டு விளங்குவது ஒரு சிறப்பம்சமாகவே கொள்ளப் படுகின்றது.

வரலாற்றுப் பெருமை மிக்க நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம் யாழ்ப்பாண அரசர் சங்கிலி மன்னனுடன் தொடர்புபட்டதாகவும் அக்காலப் பிரதானி யாகிய அரசகேசரி என்பவனுடன் தொடர்புபட்டதாக விளங்கும் இவ்வாலயம் செம்பாட்டுப் பிள்ளையார் ஆலயம் எனவும் அழைக்கப்படுகிறது. செம்மண் கொண்ட பதியில் இவ் ஆலயம் அமைந்துள்ளதால் செம்பாட்டுப் பிள்ளையார் எனவும் அழைக் கப்படுகிறது.

மேலும் நீர்வேலி கந்தசாமி ஆலயம் நீர்வேலி தெற்கில் யாழ் பருத்தித்துறை பிரதான வீதிக்கருகில் வானுயர் கோபுரத்துடன் ஆலய முன்னால் அழகிய குளம் மற்றும் கடம்பமரம் அமையப்பெற்று அந்தணப் பெருமக்களால் நித்திய, நைமித்திய பூசைகள், மகோற்சவங்கள் சிறப்பாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

மேலும் நீர்வேலி வடக்கில் அழகொளிரும் அம்பட்டன்துரவு கேணிக்கு சில மீற்றர் தொலைவில் மூத்த விநாயகர் ஆலயம் அமைந்து பக்தி அலையைப் பறை சாற்றிக்கொண்டிருப்பதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியது. மேலும் நீர்வேலிக் கிராமத்தின் கிழக்கு எல்லையில் ஆலமரங்கள் சூழ்ந்த ரம்மியமான சூழலில் அமைந்துள்ள கன்னிகா தெய்வ ஆலயமும் குறிப்பிடக்கூடிய ஒன்றே.

நீர்வேலி மத்தியில் அமைந்துள்ள ஞான வைரவர் ஆலயம், நீர்வேலி தெற்கில் முருகையன் ஆலயம், நீர்வேலி ஒல்லை வைரவர் ஆலயம், கம்பன்புலம் அன்னமார் ஆலயம், நீர்வேலி வடக்கு மீனாட்சி அம்மன் போன்ற சிறு தெய்வ வழிபாடுகளும் இங்கு காணப்படுவது சிறப்பிற்குரியதே.

மேலும் நீரை எல்லையாகக் கொண்டு விளங்குவதால் நீர் +வேலி = நீர்வேலி என்ற பெயர் மருவியிருக்கலாம் எனவும் ஒரு கருத்து நிலவுகிறது. அது மட்டுமன்றி 1ஆம் உல்க யுத்த காலப் பகுதியில் விமானம் ஒன்று பரீட்சார்த்தமாக இங்குள்ள வயல் பிரதேசத்தில் தரையிறக்கப்பட்டதாகவும், அவ்விமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுள் சிக்கிக் கொண்டதாகவும், அதன் பின்னரே பலாலி விமான நிலையம் அமைக்கப்பட்டதாகவும் கர்ணபரம்பரைக் கதை முதியோர் மத்தியில் கூறப்படுவதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

இக்கிராமத்தின் வயல் பகுதியைச் சார்ந்து பல்வேறு குளங்கள் அமைக்கப் பட்டிருப்பதும் கவனத்திற் கொள்ள வேண்டிய ஒன்றாகும். நீர்வேலி தெற்கில் நீர்வைக் கந்தப்பெருமான் நீராடுவதற்காகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் நறுவத்தாழ் குளம் குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். மேலும் நீர்வேலி முருகன் ஆலயத்திற்கு வடக்குப் புறமாக சில மீற்றர் தொலைவில் வாழைத் தோட்டங்களின் மத்தியில் சற்சதுர வடிவில் அமைக்கப்பட்ட கிணறு ஒன்று காணப்படுகின்றது. இக்கிணறு தற்போது குடும்ப தேவைக்காகப் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் ஆதி காலத்தில் நீர்வேலி கந்தசாமி பெருமான் இக்குளத்தில் நீராடியதாகவும் இப்பகுதியைச் சேர்ந்தோர் இவ் ஆலய நிர்வாகத்துடன் தொடர்புடையவர்களா கவும் அவர்களுக்கான நிலம் கந்தசாமி ஆலயத்திற்கு நிந்தமாக வழங்கப்பட்டதாக மரபு ரீதியான கர்ணபரம்பரைக் கதை முதியோர் மத்தியில் நிலவுவது சுட்டிக் காட்டத்தக்கது.

நீர்வேலி சுடுகாட்டிற்கு அண்மையில் அமைந்துள்ள கிராஞ்சிக்குளம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இக்குளம் தற்போது பயன்பாட்டில் இல்லாது விடினும் வயலுக்கு மேய்ச்சலுக்காகச் செல்லும் மாடுகள் தமது நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுவதும் கவனத்தில் கொள்ள வேண்டியது.

மேலும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு வடக்காக சில மீற்றர் தொலைவில் நேராலிவத்தை வயல்களுக்குச் செல்லும் வாய்க்காலையடுத்துக் காணப்படும் கட்டுரைக்கரைக் குளமும் குறிப்பிடக்கூடியது. இக்குளம் தற்போது மாடுகள் நீர் அருந்தப் பயன்படுவது குறிப்பிடத்தக்கது. இக்குளம் 1800ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரியதாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

நீர்வேலி வாய்க்கற்றரவை விநாயகர் ஆலயத்திற்குக் கிழக்காக நீர்வேலி சியாக்காடு மயானத்திற்குச் செல்லும் ஆரம்ப இடத்தில் யாழ் - பருத்தித்துறை வீதிக்கு கிழக்காக அமைந்துள்ள அம்பட்டன் துரவுக் குளம் இன்றும் கூட மாடுகள் நீர் அருந்துவதற்குப் பயன்படுகிறது.

அது மாத்திரமன்றி நீர்வேலி கதிர்காம ஆலயத்திற்கு வடக்காக நீர்வேலி - சுன்னாகம் வீதியை அண்மித்துக் காணப்படும் மோதிர் கேணியும் குறிப்பிடத்தக்கது. இக்கேணியில் இக்கேணிக்கு அருகாக வழிபாடாற்றப்பட்ட சிவன் நீராடுவதற்கு இக் கேணி பயன்பட்டதாகவும் மரபு ரீதியாக வம்சக் கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றன. (இக் கேணி பற்றிய தகவல் புகழ் மிக்க நீர்வேலி - இ.பரராசசிங்கம் என்னும் நூலில் தகவல் காணப்படுகிறது.) இக்குளம் தற்போது தூர்ந்து போயுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

குளம் தொட்டு வளம் பெருக்கிய புராதன கால மன்னர்களின் பணியைத் தொடர்ந்து குளங்கள் அமைக்கும் பணிகள், அவற்றைப் பேணும் பணிகள் நமது மூதாதையர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தமை அக்கால சூழலுடன் எவ்வாறு இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளார்கள் என்பதனைப் புலப்படுத்துவதாக இக் கிராமத்திற்கு வளம் சேர்க்கின்ற குளங்களின் கட்டுமானம் புலப்படுத்துகிறது.

நாம் வளர்க்கும் மிருகங்களை நன்கு பேணும் தன்மையும் இங்கு காணப் பட்டுள்ளது. வயல்களுக்கு மேய்ச்சலுக்குச் செல்லும் ஆநிரைகள் (மாடுகள்) தமது இருப்பிடம் திரும்பும்பொழுது நீர் அருந்தும் இடங்களுக்கு அருகாமையில் ஆவுரோஞ்சிக்கல் அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ் ஆவுரோஞ்சிக் கல் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வடக்கு வீதியில் ஆலயத்திற்குச் சமீபமாக இன்றும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இக்கிராம மக்கள் வரலாற்று ரீதியாக நாவற்குழி, மறவன்புலோ, கைதடி போன்ற இடங்களிலிருந்து புலம்பெயர்ந்து இங்கு வசித்திருக்கலாம் என்ற ஒரு கருத்தும் காணப்படுகிறது. அது மட்டுமன்றி நல்லூர் மன்னன் சங்கிலி, அவரது பிரதானி பரராசசிங்க முதலி ஆகியோரின் மரணத்தின் பின்னர் கெங்காதர ஐயரது வம்சத்து பிராமணக் குடிகள் நல்லூரை விட்டு இடம்பெயர்ந்து நீர்வேலியிலும் வடமராட்சியிலும் வசித்தார்கள் என (யாழ்ப்பாண வைபவமாலை - 81ஆம் பக்கம் - குல.சபாநாதன்) நூலில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தின் அறிஞர் பரம்பரை பற்றியும் நோக்குதல் அவசியமாகிறது. நீர்வேலி சிவசங்கர பண்டிதர், அவர் மகன் சிவகுருநாத பண்டிதர், அவர்களைத் தொடர்ந்து அறிஞர்கள் க.சிற்சபேசன், நீர்வேலி மத்தி சிதம்பரநாதப் புலவர் - அவர் சிலேடை வெண்பா புனைவதில் வல்லவர் என்றும் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து பீதாம்பர புலவர், பண்டிதர் செ.துரைசிங்கம், திருமதி.சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதர் இராமுப்பிள்ளை - இவரது பெயரைக் கொண்டு நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் இயங்குகிறது. பண்டிதர் இராசதுரை, பண்டிதர் நி.சி.முருகேசு, நீர்வேலி சீ.சீ.த.க. அதிபராக செயற்பட்ட வேலுப்பிள்ளை ஆசிரியர், நீர்வை பொன்னையன், கவிஞர் முருகையன் போன்ற அறிஞர் பெருமக்கள் நீர்வைக் கிராமத்தின் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்தார்கள் என்பதில் பெருமை கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவாக நீர்வேலிக் கிராமத்தின் சிறப்புகள், வளங்கள் பற்றிய ஒரு சிறிய தேடலே இவ் ஆக்கம். இத்துறையில் மேலும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தமிழரின் வரலாற்று ரீதியான இருப்புகள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. இத்துறையில் ஆர்வம் உள்ள இளம் சமுதாயம், ஆய்வாளர்கள், தமிழரின் வரலாற்றுப் பெருமை, வதிவிடச் சிறப்புக்கள் தேடல் அவசியமாகிறது. எதிர்கால புத்திஜீவிகள், அறிவியலாளர், சமூக நலன்விரும்பிகள் இத்துறைக்கு மேலும் பங்களிப்பை நல்க வேண்டுமென்பது எனது வேணவா ஆகும்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

---

## வழிகாட்டும் வாசிப்பு

**சி.டிலக்ஷா**
**தரம் - 8**
**யா/ வாதரவத்தை**
**விக்கினேஸ்வரா வித்தியாலயம்**



வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்கும் கருவியாகவே காணப்படுகின்றது. நாம் ஒவ்வொருவரும் சிறு வயதிலிருந்தே வீணான பொழுதுபோக்குகளில் ஈடுபட்டு நேரத்தை கழிப்பதற்கு நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இன்று நாம் நமது வீட்டிலிருந்து கொண்டே இணையத்தளங்களில் சிறந்த புத்தகங்களை வாசித்துக் கொள்ள முடியும்.

வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்குவதோடு சிறந்த அறிவுத் திறனையும் நுண்ணறிவையும் வழங்குகின்றது. பரந்துபட்ட உலகத்தில் நடக்கும் விடயங்களை அறிந்து கொள்ளவும், புதிய புதிய விடயங்களை அறிந்து கொள்ளவும் பொதுஅறிவினைப் பெற்றுக் கொள்ளவும் வாசிப்பு எமக்கு உதவுவதாகவே காணப்படுகின்றது.

"நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு" என்ற ஔவையாரின் வரிகள் இந்த உலகத்தில் ஒரு மனிதன் எந்த அளவுக்கு நூல்களை வாசிக்கின்றானோ அந்த அளவுக்கு அறிவுத் திறனை பெற்றுக் கொள்கின்றான். மேலும் வாசிப்பதன் மூலம் வெறும் புத்தக அறிவினை மாத்திரம் பெற்றுக் கொள்ளாமல் எம்மைச் சூழ உள்ள சமூகம் பற்றியும், உலகத்தின் நிலை பற்றியும் அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது "வாசிப்பு வாழ்வின் வழிகாட்டி" என்ற வாசகம் இதனாலே சொல்லப்படுகின்றது. ஒரு மனிதன் சிறந்த ஒரு பொழுதுபோக்கையும், மன - அழுத்தத்திற்கான அமைதித் தன்மையையும் வாசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்கின்றான். பல்வேறு புதிய விடயங்களையும் வாழ்வின் பல்வேறு அனுபவங்களையும் கற்றுக் கொள்வதற்கு வாசிப்பு உதவுவதோடு பல்வேறு தலைவர்களின் உருவாக்கத்திற்கு காரணியாகவும் அமைகின்றது.

மேலும் கற்பனை ஆற்றல், பொறுமை, படைப்பாற்றல் போன்ற பல்வேறு நன்மைகளைத் தருவதாகவும் வாசிப்பு காணப்படுகின்றது. மேலும் வாசிப்பு ஒரு மனிதனை மேன்மையடையச் செய்கின்றது. இந்த உலகில் வாசிப்பால் உயர்ந்த மனிதர்கள் பலர் உள்ளனர்.

அந்த வகையில் வறுமை குடும்பத்தில் பிறந்து வெறும் புத்தக வாசிப்பால் உலகைப் பற்றி அறிந்து அமெரிக்காவின் தலைசிறந்த தலைவராகத் திகழ்ந்த ஆபிரகாம்லிங்கன், மகாத்மாகாந்தியின் சத்தியசோதனை என்ற நூலின் விளைவாக உருவாகிய மாட்டின் லூதர் கிங், பல அறிவியல் நூல்களை உருவாக்கிய அணுவிஞ்ஞான அப்துல்கலாம், மகாத்மாகாந்தி, நெல்சன் மண்டேலா, லெனின் போன்ற அறிஞர்களும் வாசிப்பால் உயர்ந்தவர்களே ஆவார்.

இன்றைய உலகம் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக நவீனமடைந்துள்ள பல்வேறு சமூகங்களை கொண்டுள்ளதாகும். இச்சமூகத்தில் வாசிப்பு என்பது குறைவடைந்து ஏனைய பல புதிய அம்சங்களில் தமது பொழுதுபோக்கை இணையத்தளங்களில் மக்கள் கழிக்கின்றனர். குறிப்பாக இளம் வயதினர் இணையத் தளங்களில் மூழ்கி இணைய விளையாட்டுக்களில் தமது முழு நேரத்தையும் செலவழிக்கின்றனர்.

"ஒரு நல்ல நண்பனுக்கு ஒரு நல்ல நூல்" ஒப்பானது. எனவே எம்மால் எந்த அளவுக்கு நூல்களை வாசிக்கின்றோமோ அந்த அளவுக்கு எமது அறிவு விருத்தியடையும் என்பதை புரிந்து கொண்டு நாம் எமது ஓய்வு நேர பொழுது போக்கை வீணாக இணையத்தளங்களில் கழிக்கும் நடைமுறையை மாற்றி அமைத்து சிறந்த புத்தகங்களை வாசிக்க வேண்டும்.


இன்றைய தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக இணையத்தளங்களிலேயே கூட சிறந்த நூல்களை வாசித்துக் கொள்ள முடியும். இந்த வாசிப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் அவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைகிறது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் ஓய்வாக இருக்கும் போதாவது வாசிப்பை அதிகப்படுத்தி பயன்பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்ணயம்

யாத்ராதாஸ்
புத்தூர்.



தந்தை கண்டெடுத்த தலைவன்
கணிகையர் குலம் சென்றதறிவாயோ?
கைத்தலத்தில் கொடுத்த
களஞ்சுகளெல்லாம் கைவார்த்து
கொடுத்ததறிவாயோ?
என் கேள்விகளுக்கெல்லாம்
அவள் பதில்
"அறிவேன் ஆனால் என் செய்வேன்?"
ஏனெனில்
அவள் தான் நிர்ணயிக்கப்பட்டவளாயிற்றே
ஏமாற்றி வாழ தன்னையே,
இராமனை விடுத்து
இராவணனை போற்றும்
இவ்வுலகில்
மண்டோதரியும் மாதவியும்
மறக்கப்பட்டதெதனால்?
சீதையையும் கண்ணகியையும்
சமுகம் உவமையாய் நிர்ணயித்ததாலா?
சில நிர்ணயங்களை உடைக்க
காலமும் காவியமும் முற்படுவதில்லை.
ஏனெனில்,
அவை நிர்ணயிக்கப்பட்டவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் வடக்கின் (வடகோவை) கிராமிய வழிபாடும் இன்றைய நிலையும்

ரஜிதா அரிச்சந்திரன்
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
கோப்பாய்

வலிகிழக்கு பிரதேச செயலகப்பிரிவு சரித்திர முக்கியம் வாய்ந்தது. இது முப்பத்தொரு கிராம அலுவலர் பிரிவாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றில் கோப்பாய் கிராமத்தின் வடக்கு பகுதி வடகோவை என்றழைக்கப்படும். இப்பகுதியின் கிராமிய தெய்வ வழிபாடு குறித்து ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அறிமுகம்**

மண்வாசனை கமழும் கிராமங்களில் வடகோவை குறிப்பிடத்தக்க கிராமம் ஆகும். இக்கிராமத்தவர் வாழ்வியலில் வழிபாட்டியலில் முக்கியத்துவம் பெறுகின்ற கிராமியத்தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், சடங்குகள், கிராமியத் தெய்வ வழிபாட்டின் இன்றைய நிலை போன்ற உப தலைப்புக்களில் அழகியல், சமூக வியல் திறனாய்வுகளூடாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**1.0 கிராமியத் தெய்வங்கள்**

நம்பிக்கையினை வேராகக் கொண்டு நகரும் மக்கள் வாழ்வியலில் கிராமிய தெய்வங்கள் அசைக்க முடியாத பங்கினைக் கொண்டுள்ளன. அந்த வகையில் யாகங்களிலிருந்து தோன்றும் தெய்வங்கள், தேவர்கள் அரக்கர்கள் இணையும் போது உருவாகும் தெய்வங்கள், கிராமங்களில் வாழ்ந்து பலருடைய நலன்களுக்காக உயிரை விட்டவர்கள், தற்கொலை செய்து இறந்தோர், துன்பங் களுக்காளாகி இறந்தோர் கிராமிய தெய்வங்களாக மக்களால் வழிபடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றின் மூலம் தங்களுக்கு எந்தத் தீங்குகளும் நேராதிருக்க பயத்தினடிப்படையில் வழிபட்டு வருகின்றனர் என சமூக ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள். அந்தவகையில் உருவான கிராமிய தெய்வங் களில் வடகோவையில் வைரவர், நாச்சிமார், வீரசாமி, நாகதம்பிரான் போன்ற தெய்வங்களை இங்குள்ளவர்கள் வழிபட்டு வருகின்றமை குறிப்பிடதக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.1 வைரவர்**

சிவனின் அம்மசமாகக் கருதப்படும் வைரவர் காலவைரவர், ஞான வைரவர், சொர்ணவைரவர் என அறுபத்தினான்கு பெயர்களில் அறியப்படுகிறார். உக்கிர மூர்த்தியாக தட்சனின் யாகத்திலிருந்தும் அந்தகாசுரன் என்ற அரக்கனை அழித்து தேவர்களைக் காப்பாற்றுவதற்காக சிவன் தாருகாபுரம் எரித்த காலாக்கினி மூலம் வைரவரைத் தோற்றுவித்தார் எனவும் புராணங்கள் கூறுகின்றன. அந்த வகையில் வடகோவை மக்களால் மகிழ மரத்தின் கீழ் உக்ர வைரவருக்கு ஆலயம் அமைத்து மகிழடி உக்ர வைரவர் என வழிபட்டு வரு கின்றமை குறிப்பிடதக்கதாகும்.

**1.2 காளி**

சிவனின் சக்தியாகவும் அரக்கர்களையும் தீமைகளையும் அழிக்கும் தெய்வமாகவும் கருதப்படும் இவளின் வழிபாடானது சங்க காலத்திலும் புழக்கத்திலிருந்திருக்கிறது சங்க காலக் கொற்றவையே காளியாகப் பரிணமித் துள்ளாள். அவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட காளியை வீரப்பெண்ணாகவே பார்ப்பார்கள். அதனால் வீரமாகாளி என்றும் அழைப்பார்கள். இத்தெய்வத்தை இயற்கையோடிணைந்த வாழ்வியலைப் பேணிவருகின்ற வடகோவை மக்கள் காளி அம்மன் ஆலயம் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

**1.3 துர்க்கை அம்மன்**

சக்தியின் ஓர் அம்சமாகக் கருதப்படும் துர்க்கை அம்மன் வீரத்தின் தெய்வ மாக சமூகத்தில் நோக்கப்படுகிறாள். துர்க்கையை வழிபடக் கோழையும் வீரனா கிடுவான் என்கிற மரபு காலங்காலமாக பேணி வரப்படுகின்றமையும் நவராத்திரி வழிபாட்டில் முதல் மூன்று தினங்களும் இவளுக்கான வழிபாடாக அனுசரிக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் வடகோவையில் துர்க்கைக்கான ஆலயத்தை அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

**1.4 வீரசாமி**

கோப்பாய் வடக்கில் ஒரு சிறிய ஆலயம் அமைத்து முக்கோண வடிவ கல் போன்ற உருவத்தினராகிய வீரசாமியை வைத்து வழிபட்டு வருகின்றனர். அந்தணரல்லாதோர் விளக்கு வைத்து வருகின்றார்.

**1.5 நாச்சிமார்**

கிராமத்து பெண் தெய்வங்களில் சிறப்பு மிக்க பெண் தெய்வம் இவளின் சக்தி அளப்பரியது என்பதனால் வடகோவை மக்கள் இவளுக்கான ஆலயத்தை அமைத்து வழிபட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.6 நாகதம்பிரான்**

இயற்கையுடன் இணைந்த தமிழர் வாழ்வியலில் தொன்று தொட்டு பேணிவரும் வழிபாடு நாக வழிபாடு. நாக வழிபாடே நாகதம்பிரான் வழிபாடாகும். வயலும் பனங்குடிலுமிக்க வடகோவையில் நாக வழிபாடு என்பது பயத்தினால் ஏற்பட்டதாக சமூகவியல் அடிப்படையில் கருதினாலும் இவ்வழிபாட்டின் மூலம் மனநிறைவு ஏற்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**2.0 வழிபாட்டு முறைகளும் சடங்குகளும்**

கிராமிய வழிபாடானது இயற்கையும் அழகியலும் சமூக நம்பிக்கையும் நிறைந்த அம்சமாக விளங்குகின்றது. மரங்களுக்கு கீழும் குளத்தடியிலும் சிறிய மடங்கள் மாதிரியான அமைவிடங்களிலும் வைத்து கிராமியத்தெய்வங்கள் வழிபடப்பட்டு வந்தன. இத்தெய்வங்கள் அனைத்தும் ஆகமம் சாராத வழிபாட்டு முறைகளைக் கொண்டிருந்ததுடன் மக்களுக்கும் கடவுளுக்குமான ஆத்ம நெருக்கத்தைக் கொடுத்தன. பக்தர்கள் தங்களின் குல தெய்வங்களான கிராமியத் தெய்வகளுக்கு தாங்களே விளக்கேற்றியும் மடை பரவியும் தீமிதித்தும் வழிபட்டு வந்தனர். இக்கோயில்களில் பக்தர்கள் மீது சாமி ஏறி கலை ஆடுவதும் உண்டு .

வருடத்தில் ஒரு தடவை குளிர்த்தி, மடைபரவுதல் போன்றவற்றுடன் நேர்த்திக்கடனை நிறைவேற்றும்போதும் விசேடமாக மடை பரவி வழிபட்டு வந்தனர். பொங்கல், வடை, மோதகம், முறுக்கு மற்றும் பழங்களை இறைவனுக்கு முன்னால் பரப்பி கற்பூரம் ஏற்றி வழிபட்டு கடவுளரை மகிழ்ச்சிப்படுத்தி தமக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள்ள விளைவார்கள். இதனை சமூகவியல் நோக்கில் ஆராய்ந்தால் மக்கள் இறைவனுக்கு வேண்டியதை வழங்கி தங்களுக்கு தேவை யானதைப் பெறும் பண்டமாற்று வழிபாட்டினைக் கொண்டிருந்தமையையும் இறைவனைத் தங்கள் தேவைக்கேற்ப ஆட்டி வைக்கலாம் என்ற எண்ணப்பாட்டை யும் கொண்டிருந்ததை உய்த்துணர முடிகின்றது. அத்துடன் சடங்குகளூடாக ஒருவித அழகியலைக் கொண்டிருந்தார்கள். மடைபரவுதலின் போதும் குளிர்த்தி யின் போதும் வாழை இலை போடுவதிலிந்து படைத்தல் வரை கலையுணர்வையும் நேர்த்தியையும் காண முடிகின்றமை குறிப்பிடத்தக்கதாக அமைகின்றது .

மக்கள் கூடி ஒற்றுமை உணர்வுடன் ஒரே மனநிலையுடன் தங்கள் குல தெய்வத்தை ஆதரித்து ஆடுமாடு செழிக்க விவசாயம் சிறக்க மாரி பொய்க்கா திருக்கவும் நோய் நொடியின்றி வாழ வேண்டுவார்கள். இவர்களின் வேண்டுதல் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக இடம்பெற்று கிராமத்தின் எழிலைக் கூட்டும். மாவிலை தோரண அலங்காரத்துடன் ஊர் மிடுக்காய்த் திகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3.0. கிராமிய வழிபாடும் இன்றைய நிலையும்**

கிராமங்கள் தோறும் ஆகமத்தின் ஆதிக்கம் வெகு விரைவாகப் பரவியமையாலும் கிராம மக்களும் ஆடம்பரத்தை நாடுவதனாலும் கிராமத்தின் மரங்களை குளத்தைக் காக்க உருவாக்கப்பட்ட கிராமிய தெய்வ வழிபாடுகள் தங்கள் நிலை தவறிச் செல்வதனால் இயற்கைச் சூழலை அழித்து பாரிய ஆலய கட்டிடங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. இதற்கு வடகோவை கிராமமும் விதிவிலக்கல்ல. வீரசாமி ஆலயம் தவிர மற்றைய கிராமிய தெய்வங்களெல்லாம் ஆகம வழிபாட்டிற்கு மாறிவிட்டன.

மக்களின் மனநிலை மாற்றமும் வெளிநாட்டு பணத்தின் வருகையும் இயற்கையின் உன்னத வழிபாட்டு முறை சிதைவடைந்தமைக்கு முக்கிய காரணமாக அமைவதுடன் மக்களின் அழகியல் உணர்வு அதிகரித்தமை, அதன் காரணமாக நுண்கலைகள் மீதான மக்களின் ஆர்வமுமதிகரித்தமையும் காரண மாக கிராமிய வழிபாடு தன் உருவத்தை மாற்றியுள்ளது எனக் கருத முடிகின்றது.

**முடிவுரை**

கிராமங்கள் தோறும் சிறப்படைந்து விளங்கிய கிராமிய வழிபாடுகள் தன்நிலையில் மாறி காலந்தேறும் மாறி வருகின்ற மக்களின் சமுதாய எண்ணக்கரு அழகியல் தேவைக்கிணங்க தன்னை மாற்றியும் புதுப்பித்தும் ஏதோ ஒரு வடிவத்தில் மக்கள் மனங்களில் நிறைந்தும் விரிந்தும் உள்ளமைக்கு வட கோவையும் விதிவிலக்கல்ல. அந்த வகையில் வடகோவை மக்களும் தங்களுடைய கிராமிய தெய்வங்களை ஆகம வழிபாட்டிற்கு மாற்றி நேரடியாக இறைவனை வழிபடாது தரகர்களை உருவாக்கி கடவுளிலிருந்து தூரமாகியமையைத் தெட்டத் தெளிவாகக் காண முடிகின்றது.

**உசாத்துணை**


1.0 வடகோவை கிராமிய ஆலயங்களின் வரலாற்று பதிவுகள்

2.0 களஆய்வுகள் கிராம மக்களிடம் நேர்காணல்கள்

3.0 இந்து சமய தத்துவம் ரி.எம்.பி.மகாதேவன்

4.0 பண்டை தமிழர் வாழ்வும் வழிபாடும் பேராசிரியர் க.கலைாசபதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுக வாழ்விற்கான பிரதான 8 அம்சங்கள் (Super 8 for Healthy Life)

அ.ஜெயகிருஷ்ணா
பொது சுகாதார பரிசோதகர்,
புத்தூர்.
Student of MSC in Health management,
University of Jaffna.

சுகாதாரம் என்பது உடல், உள, சமூக, சமய மற்றும் ஆன்மீக ரீதியான பரிபூரண நிலையை அடைதலைக் குறிக்கும். வெறுமனையே நோயற்ற நிலையைக் குறித்தலாகாது. (World Health Organization) ஒரு மனிதனின் சுகாதாரத்தினைப் பாதிக்கும் காரணிகளாக அவனது தனிப்பட்ட காரணங்கள் (Individual Factors) மற்றும் சமூக பொருளாதார மற்றும் கலாசார காரணிகளும் (Social Economic and Cultural) முக்கியமானதாக அமைகின்றன. சமகால உலகில் தொற்றா நோயானது (Non commutable Disease) மக்களிடையே அதிகரித்து வருகின்றது. உதாரணம் - நீரிழிவு, இருதய நோய், புற்று நோய், சுவாச நோய்கள். இதனால் வாழ்நாள் காலம் (Life Expectancy) மிகவும் குறைவாக வருவதை அவதானிக்க முடிகிறது. முக்கியமாக பெண்களை விட ஆண்களே சற்று அதிகமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். உலக சுகாதார ஸ்தாபனம் (World Health Organization) இதற்கு 4 பிரதான காரணிகள் (root causes) இருப்பதாக வலியுறுத்துகின்றது. சுகாதாரமற்ற உணவுப் பழக்க வழக்கம் (Unhealthy diet), போதிய அளவு உடற்பயிற்சி இன்மை (Physical Inactivity), புகையிலை மற்றும் மதுபான பாவனை (Tobacoo use Harmful use of alcohol), சூழல் மாசடைதல் (Air Pollution). இக்கட்டுரையின் வாயிலாக நல்வாழ்வுக்கான Super 8 எனும் பிரதான செயற்பாடுகளை அறியத் தருகின்றேன்.

"நாம் நலமாக உள்ளோம்" எனும் பாடசாலை மாணவர்களை முன்னோடிகளாக வலுவூட்டல் மற்றும் சமுதாய மாற்றத்திற்கான கருவிகளாக்குதல் எனும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட கைந்நூலிலிருந்து பெறப்பட்ட முக்கிய விடயங்களாகும்.

Super I. உங்கள் உடல் திணிவுச் சுட்டெண்ணை ற்கும் இடையில் பேண வேண்டும். 23 மிகச் சிறந்தது.

Super II. உணவில் அதிகளவு உப்பைச் சேர்க்க வேண்டாம். (நாளொன்றிற்கு ஒருவருக்கு ஒரு தேக்கரண்டி உப்பினை உள்ளெடுப்பதற்கு மட்டுப்படுத்தவும். 400g உப்பு 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு 30 நாட்களுக்குப் போதுமானதாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Super III. டிரான்ஸ் கொழுப்பு உணவைக் குறைக்க வேண்டும். (இது வணிக ரீதியாகத் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிகள், கேக் வகைகள், பேஸ்டரி மாஜரின், மீளச் சூடாக்கும் எண்ணெய்களில் அதிகம் காணப்படு கின்றது.

Super IV. குறைந்தது ஒரு வாரத்துக்கு 5 நாட்களுக்கு 30 நிமிடங்கள் மிதமான உடற்பயிற்சி செய்ய வேண்டும். (உதாரணமாக சுறுசுறுப்பான நடை, ஏரோபிக் பயிற்சிகள், சைக்கிள் ஓடுதல்)

Super V. மேலதிக சீனி சேர்ப்பதைத் தவிர்க்கவும். நாளொன்றிற்கு நீரிழிவு அல்லாத ஒருவருக்கு 6 தேக்கரண்டி சீனிக்கு மேலாகச் சேர்க்க வேண்டாம்.

Super VI. நாளொன்றிற்கு 5 பரிமாறல்கள் பழங்களும் மரக்கறிகளும் உட் கொள்ள வேண்டும். (ஒருவருக்கு நாளொன்றிற்கு 400ப பழங்களும் மரக்கறிகளும் மொத்தமாக எடுக்க வேண்டும்)

Super VII. புகைப்பிடித்தல் மற்றும் மதுபானம் அருந்தும் பழக்கங்களை விட்டு விடுங்கள்.

Super VIII. உங்களுடைய இரத்த அழுத்தத்தினை க்கு குறைவாகப் பேணுங்கள். ஆண்டு தோறும் குருதி அமுக்கத்தினைப் பரிசோதித்துப் பாருங்கள்.

எனவே இனை எமது வாழ்நாளில் கடைப்பிடித்து நலமாக வாழ்வதுடன் எமது குடும்பம், சமுதாயம் நாட்டிற்குப் பெருந்தூண்களாக இருப்போமாக.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அமைப்புக்களின் தலைமைத்துவமும் வகிபாகமும்

**மு.விக்னேஸ்வரன் S.P**
**(ஓய்வுநிலை அதிபர்)**
**தலைவர்,**
**வலி கிழக்கு ஓய்வூதியர்**
**நம்பிக்கை நிதியம்.**

எந்தவொரு செயலினதும் செயற்பாட்டினதும் வெற்றிக்கு வாய்ப்பளிப்பதில் தலைமைத்துவத்தின் பங்கு அளப்பரியது. இது குடும்பம் தொடங்கி சமூகம், கிராமம், பிரதேசம், மாவட்டம், மாகாணம், தேசியம் எனப் பரவலாக்கம் செய்யப் படுகின்றது. ஒரு குடும்பத்தின் சிறப்பு அக்குடும்பத்தின் தலைமைத்துவத்திலேயே தங்கியுள்ளது. இது ஒரு நாட்டின் சிறந்த அரசாட்சிக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் பொருந்தும். ஆக ஒரு சமூகத்தினதும் கிராமத்தினதும் தனித் துவத்தையும் மகத்துவத்தையும் பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எந்த ஒரு மனிதனின் நடத்தை மற்றவர்களின் நடத்தையில் மாறுதலை தன்னில் ஏற்படுத்தும் மாற்றத்தைவிட அதிகமாக ஏற்படுத்துகின்றதோ அந்நடத்தையே சிறந்த தலைமைத்துவத் தன்மையாகும். ஆயின் பின்பற்று வோரைச் செயற்படத் தூண்டும் செயற்பாடே தலைமைத்துவம் என்பது கல்வியிய லாளர்கள் மற்றும் உளவியலாளர்களின் கருத்தாகும். தலைமைத்துவத்தின்ட சிறப்பானது தனதும் தன்னைப் பின்பற்றுவோரதும் விழுமியங்களையும் (Values) ஊக்கல்களையும் (Motivation) நோக்குகின்ற பார்வையிலேயே தங்கியுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் ஒக்கிரோ பல்கலைக்கழக ஆய்வில் தலைமைத்துவத்தின் பண்பியல் கூறுகள் நான்காகக் குறிப்பிடப்படுகின்றன.

1) பிறர்நலச் சிந்தனை (coveideration)
2) குழு அமைப்பினைத் தொக்கி வைத்தல் (initiating structure)
3) உற்பத்திக்கு வலியுறுத்தல் (Production emphasis)
4) சமூக நுண்ணறிவு (Social awaneress)

ஆயின் தலைமைத்துவம் (Leadership)

என்பது சவால்கள் மலிந்த ஒரு விளையாட்டு போன்றது எனலாம். எனின் வெற்றியும் தோல்வியும் தலைவரின் ஆளுமையிலேயே (Persionality) தங்கியுள்ளது. சம காலத்தில் பொது அமைப்புகளின் தலைவர் தெரிவுகள் சவால்கள் நிறைந்ததாகவே அமைந்துள்ளது. பொதுவாக சனசமூக நிலையங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய பரிபாலன சபைகள், மாதர் சங்கங்கள், முதியோர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற அனைத்துக்கும் இது பொருந்தும். இதில் பரம்பரை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இன்மை தலைமைத்துவம் கை மாறுவதை அங்கீகரிக்காமை ஏற்கனவே தலைமையிலிருந்தவர்கள் தமது வாரிசையே பற்பற்ற வேண்டும் என்று விடாப்பிடியாக நிற்றல் அங்கத்தவரிடையே சமூக குழுக்களுக்கிடையேயான குழுச் செயற்பாடு தகுதியானவர்களின் பொருத்தமான செயற்பாடுகளுக்கு ஒத்துழையாமை போன்றவை அமைப்புகளின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. தலைமைத்துவத்தின் வகைகள் துறை சார்ந்தோரால் பின்வருமாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன. அதாவது,

நிறைவேற்றுத் தலைவர் (Administrative Leader), நிர்வாகத் தலைவர் (Bureaucrat Leader), கொள்கை வகுப்புத் தலைவர் (Policy Maker Leader), துறைசார் நிபுணத்துவத் தலைவர் (Expert Leader), கவர்ச்சித் தலைவர் (Charisuatic Leader), அடையாளத் தலைவர் (Sympolic Leader) போன்றன.

தலைவர்கள் பிறக்கிறார்கள். உருவாக்கப்படுவதில்லை என ஒரு சாராரும், தலைவர்கள் உருவாக்கப்படுகிறார்கள் பெற்றெடுக்கப்படுவதில்லை என்று ஒரு சாராரும் கூறுவதுண்டு. இதில் எது சரி எது பிழை என்பது வேறு விடயம். ஆயின் வாய்ப்புக்கள் வழங்கப்படும் போதே தலைமைத்துவப் பண்புகள் வளர்ச்சியடையும். சுருங்கக் கூறின் பதவிகளும் ஒருவரைத் தலைவனாக்கும். இதைத் தலைவராக இருப்பவரும் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கேற்ப பண்புகளில் வகிக்க வேண்டும். அங்கத்தவர்கள் மற்றும் உறுப்பினர்கள், சமூகத்தினரிடம் மதிப்பைப் பெறுதல் (Like ability) தலைமைத்தவத்தின் முக்கிய பண்பாகும். அல்லா விட்டால் அது தலைமைத்துவத்தைப் பாதிக்கும் தலைமைத்துவம் தாம் எடுக்கும் முயற்சிகளில் (Task success) வெற்றியீட்டும் வல்லமையும் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். பணிகளில் ஏற்படும் தடைகள் முயற்சிகள் தோல்வி யடைதல் ஆகியன தலைமைத்துவத்திற்குள் முரண்பாட்டை ஏற்படுத்தும். எனவே தலைவரிடம் சாதிக்கும் திறன் மிக மிக முக்கியம். அர்ப்பணிப்பு, முன்மாதிரி, விசுவாசம், நேர்மை, மனிதத்துவம் முடிவெடுக்கும் திறன் போன்ற ஆளுமைப் பண்புகள் (Persionality Traits) இருத்தல் வேண்டும். ஏனெனில் ஒரு தலைவர் முன்மாதிரியாகச் செயற்பட்டு பல தலைவர்களை சமூகத்துக்கு உருவாக்கலாம். நான்தான் தலைவர். நான் சொல்வதே சரி எனத் தனக்குத்தானே முடிசூடிக் கொள்ளக்கூடாது. குழு அங்கத்தவர்களின் செயற்பாடுகளை மழுங்கடிக்காமல் ஊக்குவித்துப் பொருத்தமானவர்கட்கு பொருத்தமான பொறுப்புகளை வழங்கி முன் திட்டமிட்டு (Be Proactive) பகிர்ந்து கொடுப்பது தலைமைத்துவத்தின் தனிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாகும். அதாவது தலைவர் கட்டளையிடுவதைத் தவிர்த்து வேண்டுகோளை விடுபவராக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆயின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் பொறுப்புடையவராகவும், வகை கூறுபவராகவும் இருத்தல் விசேட பண்பாகும். இந் நிலையில் தலைமையின் அதிகாரம் கவர்ச்சிகரமானதாக அமையும். (Chaismatic Authority Power)

நிறைவாக தலைமைத்துவத்தை நோக்கின் நலிவான சிந்தனையுடன் கூடிய தலைமைத்துவம் தோல்விக்கே வித்திடும். இதை வெற்றி கொள்ள ஆக்க பூர்வமான சிந்தனைகளே வழிவகுக்கும். ஆக்கபூர்வமான சிந்தனை என்பது கற்பனை தொடக்கம் கனவு வரைர ஆகும். அது பழைய ஒன்றிலிருந்து புதிய ஒன்றைத் தோற்றுவிப்பதற்கும் ஆக்கபூர்வமான நோக்குவதற்கும் தொடர்புகளைப் புதுப்பிக்கவும் துணையாக அடைவும் ஆக்க சிந்தனைக்கான தலைமைத்துவம் திறனை வளர்ப்பதற்கும் விரிவடையச் செய்வதற்கும் முயற்சிகளின் வெற்றி தோல்விக்கும் பக்கபலமாக அமையும். ஆயின் வெற்றியடையச் செய்வதே முழுமையாக அமைதல் வேண்டும்.

## வாழ்விற்கு ஒளியூட்டும் வாசிப்பு



**ப.டஸ்மிகா**
**தரம் 7**
**யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்**

வாசிப்பு மனிதனை பூரணமாக்கும் என்ற வாக்கியம் மிகவும் உண்மையானது. வாசிப்பு என்பது ஒரு மனிதனின் அறிவை விரிவுபடுத்துகிறது. புதிய கலாசாரங்களை அறிந்து கொள்ளவும் வாசிப்பு அவசியம். வாசிப்பதால் மன அழுத்தத்தைக் குறைத்துக் கொள்வதுடன் சிறந்த பொழுதுபோக்காகவும் வாசிப்பு அமைகின்றது.

“நூலறிவேயாகுமாம் நுண்ணறிவு” என்ற ஔவைப்பாட்டியின் வரிகள் மிகவும் உண்மையான ஒரு வரியாகும். வாசிப்பின் மூலம் ஒருவன் பல பயன்களை அடைகின்றான். வாசிப்பு என்பது ஒரு முக்கிய செயல்பாடு ஆகும். எனவே எமது அன்றாட செயற்பாடுகளை ஒருவன் எவ்வாறு செய்கின்றானோ அவ்வாறே வாசிப்பதையும் ஒரு செயல்பாடாக கொண்டு செய்தல் எமது கடமையும் பொறுப்பும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஒரு நூல் ஒரு நண்பனுக்கு ஒப்பானது.” அதே போல் நாம் எவ்வளவு வாசிக்கின்றமோ அதே அளவு எமது அறிவு விருத்தியடையும். நாம் வாசிப்பதன் மூலம் பல தகவல்களை அறிந்து கொள்ளலாம். நாம் புத்தகத்தை வாசிப்பது போல் பத்திரிகைகள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள் போன்றவற்றையும் வாசித்தல் வேண்டும். எனவே நாம் நண்பனை எவ்வாறு மதிக்கின்றோமோ அதே போல் புத்தகங்களையும் மதித்தல் அவசியமாகும்.

வாசிப்பு மனிதனை பூரணமாக்கும் என்ற பழமொழி ஔவையாரால் கூறப்பட்டுள்ளது. ஆகவே, அப்பழமொழிக்கு அமைய நாம் வாசிக்கும் பழக்கத்தை பழக்கத்தில் கொண்டு வரவேண்டும். வாசிப்பை ஔவையார் மிகவும் சுருக்கமாக குறிப்பிட்டிருக்கிறார். எனவே நாம் வாசித்து வாழ்வில் முன்வர வேண்டும். வாசிப்பதன் மூலம் புதிய புதிய கலாசார பண்புகளை வளர்த்துக் கொள்ளலாம். எனவே வாசியுங்கள் வாழ்வில் முன்வாருங்கள் என பல கவிஞர்கள் கூறியுள்ளனர். எனவே வாசித்து முன் வாருங்கள்.

எமது தாய்மொழியாம் தமிழ் மொழியில் மட்டுமல்லாது எங்களுக்குப் பரிச்சயமான எந்த மொழியிலும் நாம் வாசிப்பை மேற்கொள்ளலாம். எனவே மீண்டும் ஒரு முறை கூறுகிறேன். வாசிப்பு என்பது மிகவும் முக்கியமானது. அதனால் தான் வாசிப்பை பழக்கப்படுத்தி கொள்ளுங்கள் என பல நூல்கள் கூறுகின்றன. நாம் சிறுபராயத்திலிருந்தே வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

எமது கல்வியின் முதற்கட்டம் வாசிப்பு ஆகும். எனவே நாம் வீட்டிலிருக்கும் போதும் அல்லது வெளியில் செல்லும் போதும் வாசிக்கலாம். எனவே எந்நேரத்திலும் வாசிக்கலாம்.

நாம் சிறுவயதில் மட்டும் வாசிக்காமல் பெரிய வயதிலும் வாசிக்க வேண்டும். அதற்காக ஔவைப்பிராட்டி “கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு” என்றார். வாசிப்போம்! வாசிப்போம்! வாசிப்போம்! எங்கள் வாழ்வு வளம் பெற வாசிப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குகளில் முதலீடு

சு.ஜனார்த்தனன்
சிவன் கோவிலடி,
ஆவரங்கால்.

"பங்குகளில் முதலீடு என்றால் என்ன?" என்ற கேள்வியை பல பேர் உள்ள இடத்தில் கேட்டால் அதில் கணிசமானவர்களுக்குப் பதில் சொல்வது மிகவும் கஷ்டமான ஒன்றாக இருக்கும். சிலருக்கு பதில் சொல்லத் தெரியாது ஆனால் அதுபற்றித் தெரிந்திருக்கும்.

உண்மையில் பங்குகளில் முதலீடு என்றால் என்ன? இதற்கு பதில் கூறுவதற்கு முன்னர் பங்குகள் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும். பங்குகள் என்றால் கம்பனி ஒன்று தனது நிதித் தேவைக்காக கம்பனியின் மொத்த பெறுமதியைப் பல கூறுகளாகப் பிரித்து அதற்கு ஒரு விலையைக் குறித்து அதன் ஒரு பகுதியை பொதுமக்களுக்கு விற்று அதன் மூலம் திரட்டப்பட்ட தொகையைக் கொண்டு தனது கம்பனியை விருத்தி செய்வதாகும். இங்கு கூறுகளாகப் பிரிக்கப்பட்ட ஒவ்வொன்றுமே குறித்த கம்பனியின் "பங்குகள்" என அழைக்கப்படு கின்றது. இந்தப் பங்குகளை முதன் முறையாக மக்களுக்கு வழங்கும் செயற்பாடு "ஆரம்பப் பொது வழங்கல்" (Initial Public Offering - IPO) என்று அழைக்கப் படுகிறது.

ஆரம்பப் பொது வழங்கல் என்ற செயற்பாடு முதலாம் தர சந்தையில் நடைபெறுகிறது (Primary Market). இவ்வாறு வழங்கப்பட்ட பங்குகளை பெற்றுக் கொண்ட ஒருவர் அதனை வேறு ஒருவருக்கு உடனடியாக மாற்றம் செய்யவோ அல்லது விற்கவோ முடியாது.

இவ்வாறு நாம் முதலாம் தர சந்தையில் பெற்றுக்கொண்ட பங்குகளை விற்கவோ அல்லது வேறு ஒருவருக்கு மாற்றம் செய்ய வேண்டுமாக இருத்தல் நாம் பங்குச் சந்தை (Share market) என்ற கட்டமைப்புக்குள் செல்ல வேண்டும்.

பங்குச் சந்தை என்றால் வெவ்வேறுபட்ட கம்பனிகளில் முதலாம் தர சந்தையில் கொள்வனவு செய்து பெற்றுக்கொண்ட பங்குகளை வேறு நபர்களுக்கு விற்பதற்கும் அல்லது மேலதிகமாக வாங்குவதற்கும் அல்லது வேறு ஒருவருக்கு மாற்றம் செய்வதற்கும் அல்லது வேறு ஒருவரிடமிருந்து மாற்றிக் கொள்வதற்குமாக உருவாக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு, பங்குச் சந்தை என்று அழைக்கப்படுகிறது. இது இரண்டாம் தர சந்தை (Secondary Market) என்று அழைக்கப்படுகிறது. தோட்டத்தில் வெங்காயம் பயிரிடப்படுகிறது. அந்த வெங்காய அறுவடையின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரி ஒருவர் (முதலீட்டாளர் ஒருவர்) நேரடியாக தோட்டத்துக்குச் சென்று தோட்டக் காரரிடம் பெறுமதிக்கேற்ப பணத்தைக் கொடுத்து நேரடியாக வெங்காயத்தைப் பெற்றுக்கொள்வது (இவர் மட்டுமல்ல, இவ்வாறு நேரடியாக எத்தனை பேர் பெற்றுக்கொண்டாலும்) முதலாம் தர சந்தைக்கு மிகச் சிறந்த உதாரணமாகும். இங்கு தரகர் தேவையில்லை. அதனால் தரகுப்பணம் செலவளிக்கப்படுவதில்லை. அதனால் இது ஆரம்பப் பொது வழங்கலுக்கு (IPO) ஒப்பானது என்பதுடன் Primary Market க்கும் ஒப்பானதாகும்.

இதே தோட்டக்காரர் அறுவடை செய்த வெங்காயத்தைச் சந்தை ஒன்றிற்குக் கொண்டுசென்று (இங்கு இவர் மட்டுமல்ல இந்த தோட்டத்தில் இவரிடம் வெங்காயம் வாங்கியவரும் சேர்ந்து இன்னும் பலரும்) கூறி விற்பதானது இரண்டாம் தரச் சந்தைக்கு ஒப்பானது. இங்கு தரகர் ஒருவர் இருப்பார். தரகுப்பணம் செலுத்தப்படும். அதனால் இது பங்குச் சந்தைக்கு ஒப்பான செயற்பாடாகும்.

தோட்டத்தில் வெங்காயம் மட்டுமல்ல பூசணி, வெண்டி, உருளைக்கிழங்கு, பாகற்காய், பயிற்றை என பல பயிர்கள் காணப்படும் அதேபோன்று பங்குச் சந்தையில் பல்வேறுபட்ட கம்பனிகள் காணப்படுகின்றன. அதே போன்று சந்தையிலும் தனியே வெங்காயம் மட்டுமல்ல பல்வேறுபட்ட மரக்கறிகள் காணப்படுகிறன.

இவ்வாறுதான் முதலாம் தரச் சந்தை மூலம் பல்வேறுபட்ட கம்பனிகளால் பொதுமக்களுக்கு விற்கப்பட்ட கம்பனியின் பங்குகள் இரண்டாம் தரச்சந்தை யாகிய பங்குச்சந்தையில் பட்டியற்படுத்தப்பட்டு காணப்படுகின்றன.

பொதுச்சந்தை ஒன்றில் அன்றைய கேள்வி நிரம்பல்களின் அடிப்படையில் பல்வேறுபட்ட மரக்கறிகள் விற்கப்படுவது வாங்கப்படுவது போல பங்குச் சந்தையினுள் பட்டியலிடப்பட்ட பல்வேறு கம்பனிகளின் பங்குகளும் அன்றைய கேள்வி நிரம்பல் அடிப்படையில் விற்கப்பட்டு வாங்கப்பட்டு கைமாற்றம் செய்யப்படுகிறது.

வியாபாரி ஒருவர் வெங்காயத்தில் முதலீடு செய்தால் தருணம் வரும்போது அவரது முதலீட்டுக்குத் தகுந்தபடி அதனை விற்குமபோது அவருக்கு அந்த நேர கேள்வி நிரம்பல் அடிப்படையில் அந்த வெங்காயத்தின் மூலம் இலாபமோ நட்டமோ ஏற்படுகின்றது. இது வெங்காயம் மட்டுமல்ல அல்லது எந்தெந்த மரக்கறி உற்பத்தியில் முதலீடு செய்திருப்பாரோ அதற்கேற்றபடி இலாபத்தையோ நட்டத்தையோ அடைந்திருப்பார். இலாபம் கிடைத்தால் மூலதன இலாபம் என்றும் நட்டமடைந்தால் மூலதன நட்டம் எனவும் கொள்ளப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போலத்தான் பங்குச்சந்தையிலும் பல்வேறுபட்ட கம்பனிகள் பட்டியற்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றன. அவ்வாறு பட்டியல்படுத்தப்பட்டுக் காணப்படும் கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதையே நாம் பங்குகளில் முதலீடு என்கிறோம். மரக்கறிகளில் முதலீடு செய்யும் போது கிடைத்த இலாபம் அடைந்த நட்டம் அது போலவே பங்குகளில் முதலீடு செய்யும்போதும் இலாபம் நட்டம் என்ற இரண்டையும் எதிர்நோக்க நேரிடுகிறது.

இப்பொழுது இந்தப் பங்குகளில் எவ்வாறு முதலீடு செய்வது என்பது தொடர்பில் அறிந்துகொள்வோம்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல பங்குகளில் முதலீடு செய்வதற்கு நாம் பங்குச் சந்தை பற்றி அறிந்துகொள்ள வேண்டும். இலங்கையில் ஒரே ஒரு பங்குச்சந்தை உள்ளது. அதனை நாம் கொழும்பு பங்குச்சந்தை என்று அழைக்கிறோம். (Colombo Stock Exchange - CSE)

பங்குகளில் முதலீடு செய்வதற்கு, முதலில் நாம் பங்குச் சந்தையில் கணக்கு ஒன்றை வைத்திருக்க வேண்டும். பங்குச்சந்தையில் கணக்கு மிகவும் எளிமையான முறையில் தற்பொழுது திறந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. அதனையும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

பங்குகளில் முதலீடு செய்வதற்காக பங்குகளை பரிமாற்றம் செய்வதற்கான கணக்கு மத்திய வைப்புத் திட்டக் கணக்கு (CDS Account - Central Dipositary system Account) என அழைக்கப்படுகிறது. இந்த CDS எனப்படுவது கொழும்பு பங்குச் சந்தையில் ஒரு துணைநிறுவனமாகும்.

இப்போது நாம் இங்கு கணக்கினை எவ்வாறு திறந்து கொள்வது எனப் பார்க்கலாம். மத்திய வைப்புத்திட்டக் கணக்கினை ஆரம்பிக்கும் ஒருவர் இலங்கைப்பிரஜையாக இருந்தால் தேசிய அடையாள அட்டையை மட்டும் கொண்டு கொழும்பு பங்குச் சந்தையில் தொலைபேசி செயலி மூலம் (CSE Moble App) இலகுவாகத் திறந்து கொள்ளலாம். இதற்கு பணம் செலுத்த தேவையில்லை. வழங்கும் தகவல்களில் தேசிய அடையாள அட்டை, தொலைபேசி இலக்கம், வங்கி கணக்கு இலக்கம், மின்னஞ்சல் முகவரி, என்பன கட்டாயமாகும். வெளி நாட்டுப்பிரஜைகளுக்கு வேறு நடைமுறை உள்ளது.

இங்கு முக்கியமான ஒரு விடயம் யாதெனில் பங்குகளைப் பரிமாற்ற உதவுகின்ற இடமாக நாம் மத்திய வைப்புத்திட்டக் கணக்கை உருவாக்குவதற்கு நாம் ஒரு தரகரைத் தெரிவு செய்ய வேண்டும்.

கொழும்பு பங்குச் சந்தையில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பங்கு தரகு நிறுவனங்கள் காணப்படுகின்றன. மத்திய வைப்புத்திட்ட கணக்கு திறப்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலியில் இந்த தரகு நிறுவனங்களின் பட்டியல் காணப்படுகின்றது. கணக்கினை ஆரம்பிக்க ஆயத்தமாகும் போது நாம் எந்த தரகு நிறுவனத்தைத் தெரிவு செய்யப்போகிறோம் என்பதை ஏற்கனவே தீர்மானித்திருக்க வேண்டும்.

கணக்கை ஆரம்பிக்க முனைபவர் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவரோ அந்தந்த மாவட்டங்களில் எந்தெந்த தரகு நிறுவனங்கள் உள்ளனவோ அதனை தெரிவுக்குட்படுத்தினால் எதிர்காலத்தில் பங்குப்பரிமாற்ற நடவடிக்கைக்கு அது பேருதவியாக இருக்கும்.

CSE Mobile App மூலம் கணக்கு ஆரம்பிப்பதற்கான தகவல்களைத் தரவேற்றம் செய்ததும் CSE இலிருந்து மின்னஞ்சலுக்கு தெரிவு செய்யப்பட்ட தரகு நிறுவனத்தை மேற்கோள் காட்டி பதில் ஒன்று அனுப்பி வைக்கும். அதன் பின்னர் குறித்த தரகு நிறுவனத்தைச் சேர்ந்தவர் தொடர்பு கொள்வர்.

சாதாரணமாக இரண்டு வார காலத்துள் கணக்கு திறக்கப்படும். அவ்வாறு நடைபெறவில்லையெனில் குறித்த தரகு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைக் கேட்டறிந்து கொள்ளலாம். திருத்தங்கள் ஏற்படின் திருத்திக் கொள்ளலாம்.

மத்திய வைப்புத்திட்டக் கணக்கு ஆரம்பித்த பின்னர் பங்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தெரிவு செய்த தரகு நிறுவனத்தில் தரப்படு கின்ற வங்கிக் கணக்கிலக்கத்திற்கு எந்தப் பங்கு எந்தளவு தொகை என்பதற்கு ஏற்ப பணம் வைப்பிலிடப்பட வேண்டும்.

இங்கு பங்குகளை வாங்குவதற்கும் விற்பதற்கும் தனித்தனியான தரகுப்பணம் 1.12% அறவிடப்படும். அதற்கும் சேர்த்தே பணம் வைப்பிலிட வேண்டும். பங்குத் தரகு நிறுவனங்களில் தரகர்களாகச் செயற்படும் நபர்கள் முதலீட்டு ஆலோசகர்கள் எனப்படுகின்றனர்.

தெரிவு செய்யும் தரகு நிறுவனங்களுக்கு ஏற்ப பங்குகளை நிகழ்நிலையில் (Online) வாங்கி விற்பதற்கான செயலி இலவசமாகவோ முதலீட்டின் தொகைக்கு ஏற்பவோ வழங்கப்படுகிறது என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

கொழும்பு பங்குச் சந்தையில் பங்கொன்றின் விலை (பெறுமதி) பத்து சதத்திலிருந்து 15000 ரூபா வரையிலான பெறுமதியான பங்குகளை உடைய 300க்கும் மேற்பட்ட கம்பனிகள் பட்டியற்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றன. கொழும்பு பங்குச் சந்தையில் வளர்ச்சியை அல்லது வீழ்ச்சியை பிரதானமாக அதன் அனைத்துப் பங்கு விலைச்சுட்டியை (All Share Price Index - ASPI) வைத்துக் கண்டு கொள்ளலாம். இது அங்கே பட்டியற்படுத்தப்பட்ட 300 கம்பனிகளின் பிரதிபலிப்பைக் காட்டுவன்வாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட S&P SL 20 என்ற ஒரு சுட்டியும் காணப்படுகின்றது. இது இந்த 300 கம்பனிகளில் தெரிவு செய்யப்பட்ட 20 கம்பனிகளின் பிரதிபலிப்பை மாத்திரம் காட்டுவனவாக அமையும்.

2024 டிசம்பர் மாதத்தில் கொழும்பு பங்குச் சந்தையில் அனைத்துப்பங்கு விலைச்சுட்டி 13500 என்ற ஏற்கனவே இருந்த உயர் புள்ளி (All Time High) ஐக் கடந்து. 14000 என்ற புதிய உச்சத்தைத் தொட்டது. அதன் பின்னர் 14500, 15000ஐயும் கடந்து இன்று இக்கட்டுரை எழுதும் நாட்களில் 15500 ஐயும் தாண்டிச் சாதனை படைத்துள்ளது. இந்தச் செய்தி கொழும்பு பத்திரிகைகளிலும் செய்திகளிலும் சமூக ஊடகங்களிலும் கண்டிருப்போம். இது என்னவென்று விளங்காதவர்களாகக் கூட இருந்திருப்போம். இன்றிலிருந்து விளங்கிக்கொள்ளுங்கள்.

இறுதியாக உதாரணம் ஒன்றுடன் நிறைவு செய்யலாம். உலக பொருளாதார, இலங்கை பொருளாதார பிரச்சினை, ரஷ்யா யுத்தம், எரிபொருள் வரிசை போன்ற பல்வேறு காரணங்களால் 2022 ஆம் ஆண்டில் கொழும்பு பங்குச் சந்தை வெகுவாக வீழ்ச்சியடைந்தது.

அப்போது அனைத்துப் பங்கு விலைச்சுட்டி 6700 என்ற அளவுக்கு வந்தது. அன்று அங்கு பட்டியற்படுத்தப்பட்ட ஒரு கம்பனியாகிய சம்பத் வங்கியின் பங்கொன்றின் விலை 26 ரூபாவுக்கு விற்கப்பட்டது. இன்று இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் அனைத்துப் பங்கு விலைச்சுட்டி 15500 ஐக் கடந்துள்ள நிலையில் அப்பொழுது 26 ரூபாவாகக் காணப்பட்ட சம்பத் வங்கி பங்கு 110 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யப்படுகின்றது. அன்று 26 ரூபாவுக்கு விற்கப்பட்டது இன்று 110க்கு விரும்பி வாங்கப்படுகிறது. இதுதான் முதலீடு 400%க்கும் மேற்பட்ட மூலதன இலாபம். இதே வங்கியில் வைப்பிலிட்ட பணத்துக்கு வட்டியாக அந்த பொருளாதார சிக்கல் நிலையிலும் 25% வீதத்தை விட அதிக வட்டி தரப்படவில்லை.

பங்குச் சந்தை தொடர்பாக மேலதிக தகவல்களை அதன் இணையத் தளமாகிய www.cse.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முதலீடு என்பது மேற்தட்டு வர்க்கத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. யாரும் முதலீடு செய்யலாம். பங்குச்சந்தை தொடர்பில் இங்கு கூறப்பட்டது ஒரு சிறிய விடயம் மாத்திரமே. நிறைய விடயங்கள் உள்ளன. கால் வைத்தல் தான் ஆழம் அறியலாம். கரையில் நின்று பார்த்தால் அழகை மட்டும் ரசிக்கவே முடியும். அனுபவிக்க முடியாது. அறிவான முதலீட்டால் வளமான எதிர்காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மழுங்கடிக்கப்படும் விஷகடி வைத்தியம் மீண்டும் புத்துயிர் பெற வேண்டும்"

### இதுவே எனது ஆதங்கம் என்கிறார் விஷகடி வைத்தியர் திரு.சு.பரமநாதன்

**நேர்காணல் : நீர்வையூரான்**

கிராமிய வைத்திய முறைகள் தற்போது கைவிடப்பட்டு மேலைத்தேய வைத்திய முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இன்றைய சூழ்நிலையில் சித்த வைத்தியத் துறையின் மாண்பு பற்றியும் நோக்க வேண்டியது அவசியமாகின்றது.

மேலைத்தேய வைத்திய முறைகள் எவ்வளவு வேகமாக நவீனத்துவ வைத்திய சிகிச்சை முறைகளை வழங்கினாலும் கூட சித்தவைத்திய முறை புறக்கணிக்கக் கூடிய ஒன்றல்ல.

சித்த வைத்தியத்துறை யாழ்ப்பாணத்தின் கிராமங்களில் பழமைகுன்றாது இயற்கையோடு இணைந்து வாழ்க்கை முறை அமைக்கப்பட்ட இக்கிராமங்களில் சித்த வைத்திய முறையின் எச்சசொச்சங்களை இன்னும் காணமுடிகின்றது.

அவ்வகையில் வலி - கிழக்கின் கிராமங்களில் ஒன்றான நீர்வேலிக் கிராமத்தில் இன்றும் சித்த வைத்தியம் பேணப்பட்டு வருகின்றது. குறிப்பாக கைநாடி வைத்தியம், வாகடப்படி மூலம் வைத்தியம் போன்ற வைத்திய முறைகள் குறிப்பிடத்தக்கதாக நீர்வேலிக்கு வந்து நோயாளர் சிகிச்சை பெற்றும் செல் கின்றமை குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் நீர்வேலி கிராமத்தில் இன்றும் பேணப்பட்டு வருகின்ற விஷகடி வைத்திய முறைகளும் அதற்காக மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறைகளும் முக்கியம் பெறுகின்றன.

விஷகடி வைத்திய முறைகளில் தற்போது ஈடுபட்டு வரும் சுப்பிரமணியம் பரமநாதனுடனான நேர்காணலை வாசகர்களின் நன்மை கருதி இங்கு தருகின்றோம்.

கேள்வி :- தாங்கள் விஷகடி வைத்திய துறைகளில் ஈடுபடுவதற்கான காரணம் யாது?

பதில்:- இத்துறையில் ஏற்கனவே ஈடுபட்டு வந்த எனது பேரனார் கணகபதியார் சின்னத்துரை என்பவரிடம் இவ்வைத்திய முறை பற்றி கற்றேன். அன்றிலிருந்து இன்று வரை விஷகடி வைத்தியத்துறையில் ஈடுபாடு காட்டி வருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி :- விஷகடி வைத்திய முறையின் தன்மை அதன் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட முடியுமா?

பதில்:- இத்துறையானது ஒரு தொழில் அல்லது தெய்வத்தின் கடாட்சம் வேண்டி தெய்வத்தின் ஆசீர்வாதத்துடன் இச்சிகிச்சை முறை மேற்கொள்ளப்படுகிறது. ஏமத்தாலும் சாமத்தாலும் வருவோரை கோவிக்காமல் வேதனம் ஒன்றும் கையில் வேண்டாமல் இவ்வைத்தியம் மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக வாகடங்கள் மூலம் ஏடுகளில் எழுதப்படும் மந்திரங்கள் மற்றும் தெய்வ ஆராதனை மூலம் இவ்வைத்திய முறை மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக கருடனை அழைத்து கண்ணன் மேல் நம்பிக்கை வைத்து வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது.

கேள்வி : விஷகடி வைத்திய முறை எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது.

பதில்:- நாகபாம்பு முதல் சிற்றெறும்பு வரை விஷத்தால் தீண்டப்பட்டால் பூனை மடங்கியுடன் சுண்ணாம்பும் சேர்த்து அரைத்து பூசுவதுடன் மந்திரம் ஓதுதலும் மேற்கொள்ளப்படுகிறது. மட்டைத்தேள் கடித்தாலும் இவ்வாறான சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. பூனை மடங்கி என்பது இங்கு குப்பை மேனியைக் குறிக்கிறது. புலிமச்சிந்தியால் கடியுண்டவருக்கு தென்னம் மட்டையை நீரில் ஊறவைத்து பின்னர் அவித்த வெந்நீரால் குளித்தல் வேண்டும்.

கேள்வி :- விஷகடி வைத்தியம் போல் உண்ணாக்கு பார்த்தல் என்னும் முறையும் கிராமங்களில் சிகிச்சையாக மேற்கொள்ளப்படுவதாக அறிகின்றோம். அது பற்றிக் கூற முடியுமா?

பதில் :- தொடர்ந்து இருமல் காணப்படின் உண்ணாக்கு பார்த்தல் சிகிச்சை முறை மேற்கொள்ளப்படுகிறது. குப்பைமேனிச் சாற்றை தலையின் உச்சியில் விட்டு உச்சி மயிரைப் பிடித்து இழுத்தல் வேண்டும்.

கேள்வி :- காலில் நோ ஏற்பட்டால் உழுக்கு பார்க்கும் சிகிச்சை கிராமங்களில் இன்னும் மேற்கொள்ளப்படுகிறது. இது பற்றிக் கூற முடியுமா?

பதில் :- புற்றுமண் எடுத்து நோ உள்ள இடத்தில் உரிய மந்திரம் சொல்லி தடவுதல் வேண்டும். அது மட்டுமல்ல கால் பக்கமாகப் பிறந்தவர்கள் குறித்த இடத்தில் காலால் தடவுவதன் மூலமும் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

கேள்வி :- இத்துறையில் ஈடுபடும் ஏனையோர் பற்றிக் கூற முடியுமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :- சின்னத்துரை, கனகலிங்கம், சின்னத்துரை பஞ்சலிங்கம் ஆகியோரும் இவ்வாறான சிகிச்சை முறைகளை மேற்கொண்டார்கள். ஆனால் விஷகடி வைத்தி முறைக்கு தெய்வவழிபாடு, கட்டுக்கோப்பான வாழ்க்கை முறை என்பன மிக முக்கியம்.

கேள்வி :- இத்துறையில் எதிர்கால போக்கு பற்றி யாது கூற விரும்புகிறீர்கள்?

பதில் :- இது ஒரு குடும்பமட்டத்தில் மட்டும் வரையறுக்கப்பட்ட வைத்தியமுறை அல்ல. ஆனாலும் இச்சிக்கிச்சையை முறையாகப் பயின்று சிகிச்சை அளிக்கக் கூடிய ஒருவரை தேடுகிறேன். அவர் மூலம் இச்சிகிச்சை முறையை அழியவிடாது பாதுகாக்க வேண்டும் என்பது எனது வேணவா. எதிர்காலத்தில் இச்சிகிச்சை முறை மேம்பட வேண்டும் என்பது எனது ஆவல். தெய்வ அருள் இருந்தால் நிச்சயம் எனது ஆவல் நிறைவேறும்.



---

காலம் என்னும் ஆழ்கடலில் நீந்துகின்றவனுக்கு
அறிவு என்னும் துறைமுகத்தை அடையக்
கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளமை
சிறந்த புத்தகங்கள்

–கார்ல்மாக்ஸ்

மன அமைதியை
புத்தகங்களைப் படிப்பதன் மூலம்
ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

– மறைமலைஅடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் மூழ்கி...

சாளரத்தின் ஊடாக
ஒரு சத்தம்
தொலைவில் வானம்
தொலைந்துவிட்ட
என் நினைவுகள்
என் குரலோசை
எட்டி கேட்கும் மட்டும்
நான் கத்திக் கூப்பிடுகின்றேன்
என் குரல் மட்டும்
என் அம்மாவிற்கு
கேட்டால் என்னைத்
தேடி ஓடி வந்திடுவாள்
ஓ.... ஓடுகின்ற கடலே
ஒரு முறை எனக்காக
உன்னைக் கிழித்து
படகாய் மாற்றி
பத்திரமாய் ஏற்றி
பாசத்தைக் கடத்து
என் கனவுகள், நினைவுகள்,
கற்பனைகள் எல்லாம்
அங்கே அலைமோதுகின்றது
இங்கு உயிரில்லாத
உடல் மட்டும் தான் இருக்கின்றது!
இவையெல்லாவற்றையும்
தவிர்த்து கம்பிக்குள்
தனிமரமாய் நிற்கின்றேன்
கம்பிகளின் பின்னால்
கவிதைகளை மட்டும் வடிக்கின்றேன்
ஆனால் உள்ளே
கண்ணீரில் மூழ்கி வாழ்கின்றேன்....



P.முத்துக்குமாரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொறோனா கற்றுத் தந்த பாடம்

செல்வி ப.நாகேஸ்வரி,
முன்பள்ளி இணைப்பாளர்,
கோப்பாய்க்கோட்டம்.

எண்ணங்கள் பல கொண்டோம்
மாற்றங்கள் பல பல கண்டோம்
அசுரவேகம் கொண்டு வந்ததே
கொறோனா என்னும் பேரலை.
அலைகளில் பலவிதம் கண்டோம்
கொறோனா அலையானது
கதிகலங்க வைத்துள்ளதே!
மூச்சுக் காற்றுடன் முட்டிமோதி
வீட்டில் பதுங்கிட வைத்த கொறோனாவே!
உலகையே அதிரவைத்து
உயர்வு, தாழ்வின்றி
அனைவரையும் பதறவைத்தாயே!
சொல்லாமல் வந்து
நில்லாது பரவி
உலகத்தை போர்க்களமாக்கி
இறக்குமதி, உள்ளூர், சமுதாயம்
என்று பல்முகம் கொண்டு பரவும் ஆபத்தே - நீ
தொற்றாய் வந்தாயே....
தொந்தரவும் தந்தாயே
விந்தைமிக்க இவ்வுலகில்
வியப்புமிக்க மூன்றாம் போர் - நீ



எபோலாவை காட்டிலும்
சாள்ஸ்சை காட்டிலும் உனக்கு
வீரியம் குறைவு என்றனர் விஞ்ஞானிகள்
முகக்கவசம் அணிந்தோம்
கிருமிநாசினியை அழித்தோம்
சமூக இடைவெளியை கருத்தில் கொண்டு
தினம், தினம் கலங்கித் தவித்தோம்.
காலத்தின் இயல்புதனை
கருத்தாய் நினைத்து
கடமை, கண்ணியத்துடன்
குடும்ப உறவை வலுப்படுத்தி
சிந்தித்து நாம் செயல்பட
வழி வகுத்தாய் கொறோனாவே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் நடமாட பயந்து நடுங்கினோம்
வேலைப்பழுசை வீட்டிலே முடித்தோம்
இயற்கையின் நியதி என்று
இன்னல்கள் பலவும் தாங்கி
இயல்பான வாழ்வுதனை
இயன்றவறை வாழ்ந்து வந்தோம்.

போர்க்களத்தில் போரையே!
எதிர்கொண்ட மக்கள்
புலம்பித் தவித்ததை நாம் கண்டோம்.
உள்ளூர் பண்டமாற்று
உதவிகள் பல பெற்று
உடலை உசார்படுத்த
வீட்டில் மட்டுமா?
உலகத்திற்கே உடற்பயிற்சி
கொடுத்துவிட்டாய்
மஞ்சள், உள்ளியின் மதிப்புத் தெரியாத பலரும்
வேப்பிலை, சாணத்தின் அருமை புரியாத பலரும்
இலைக்கறிகளின் மகத்துவம் தெரியாத சிலரும்
இயல்பு வாழ்வதனை வாழத் தொடங்கினரே!

உனது கொடூரம் தாங்காது
தடுப்பூசி என்னும் பெயரில்
சினோபாம் மட்டுமா பைசறையும்
பட்டாசு போல விரைவாய்
மனித உடலில் இறக்கிட
வழிசமைத்தாயே நீ, எப்படி
நாம் மறப்போம்.

உன் பரீட்சையில்
எத்தனை எத்தனை உயிர்களை
காவு கொண்டாய்
எண்ணிப் பார்க்கையில் எம் மனங்கள்
இன்னும் இயல்பு நிலைக்கு வரவில்லையே!
மறவோம் மறவோம் நீ கற்றுத் தந்த
பாடமதை என்றும் நாம் மறவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் பதிந்த ஆசிரியர்

**கணபதிப்பிள்ளை பரமேஸ்வரன்,**
**பதில் அதிபர்,**
**யா/ புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை.**

மாரி கண்டு பூரிக்கும் வயல் நிலமும் கோடை கண்டு புழுதி தூவும் தரிசுகளும் பற்றைக் காடுகளும் பண்பாட்டு ஆலயங்களும் சூழ்ந்த தூவில் ஏழை விவசாயிக்கு எழுவருக்கு இளையவனாகப் பிறந்தேன். மூத்தவர்கள் கற்பவர்களாக இருந்ததினால் இயல்பாகவே கல்வியில் நாட்டம் இருந்தது.

ஆசையுடன் பாடசாலைக்கு சென்ற எனக்கு அருவருப்பே மிகுதியானது. ஆலயம் என்று இரண்டை மட்டுமே அழைக்கின்றோம். ஒன்று எங்கள் ஆத்மா லயப்படும் ஆனந்த வாழ்வு பெறக்கூடிய வணங்கும் தலங்கள். அடுத்தது எமது அறிவுப் பசியைத் தீர்த்து இவ்வுலக வாழ்விற்கு எம்மைத் தயார்ப்படுத்தும் வித்தியாலயங்கள். இவை இரண்டிலும் சேவை செய்வது இறை அருளே! எல்லாவற்றிற்கும் மேலாக குருவாக அறிவை உண்டாக்குபவராக சேவையாற்றக் கிடைப்பது தெய்வத் திருவருளே...

அந்த வகையில் எனது மனம் பதிந்த ஆசிரியரை நான் எண்ணிப்பார்க்கின்றேன். தரம் மூன்றில் கல்வி பயிலும் போது திருவாளர் கதிர்காமு கந்தவனம் என்ற அதிபர் புதிதாக எமது பாடசாலைக்கு வர இருப்பதாக பாடசாலையில் பேசிக்கொண்டார்கள். அவர் எப்படி இருப்பார்? பிரம்பும் கையுமாக வலம் வந்து எம்மை எல்லாம் அடித்து பயமுறுத்துவாரா? அல்லது வந்தேன் ஒப்பமிட்டேன் சம்பளம் எடுத்தேன் என்று எமது நலனைக் கவனிக்காது இருந்து விடுவாரா? என எனது சின்ன மனம் எடை போட்டது. எனது மூன்று வருட அனுபவத்தில் கசப்பான அதிபர்களையே என்னால் சந்திக்க முடிந்ததால் அதிபர், ஆசிரியர்கள் எனக்கு வெறுப்பானவர்களாகவே இருந்தார்கள். எனவே புதிய அதிபர் வரும் நாளில் பாடசாலைக்குச் செல்வதில்லை என்ற முடிவுடன் பொய்யான காரணங்களைக் கூறி வீட்டில் இருந்து விட்டேன்.

புதிய அதிபரை ஊர் பெரியவர்கள் வரவேற்று பாடசாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று திடீரென்று முடிவு செய்து எனது அப்பா மற்றும் ஊர்ப்பெரியவர்கள் புறப்பட்டனர். வெறுப்புடன் இருந்த எனக்கும் இந்நிகழ்வைக் காணவேண்டும் என்று விருப்பம் ஏற்பட்டது. அப்பாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு பாடசாலை முன்றலுக்குச் சென்றேன்.

ஒரு கம்பீரமான உயர்ந்த உருவம். முகத்தில் அன்பு தவழும் இனிமையான பார்வை. ஊரவர்களின் வரவேற்பை ஏற்றுக் கொண்டு ஒரு சில வார்த்தைகள் கூறினார். அவருடைய கணீர் என்ற குரல் இப்பாடசாலைக்கு ஒரு நல்ல எதிர்காலம் வரப்போகின்றது என்ற உணர்வை ஏற்படுத்தியது. அவருடைய குரல் மங்களமான ஆலய மணியாகவே எனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாளில் இருந்து ஒழுங்காக பாடசாலை செல்ல வேண்டும் என்ற உணர்வு ஏற்படவே அன்றைய ஒரு நாளையும் இழக்க விருப்பமின்றி இருந்தேன். புதிய அதிபர் எனது அப்பாவின் பாலிய நண்பர் என்பதால் அவரிடம் என்னை அப்பா அறிமுகம் செய்து வைத்தார். ஏன்று இன்று பாடசாலைக்கு வரவில்லை என்று கேட்ட போது எனக்கு என்ன கூறுவது என்றே புரியவில்லை. அடி மனதில் பொய் கூறக்கூடாது என்ற உணர்வு மட்டுமே மேலோங்க பாடசாலைக்கு வராததற்கான வெறுப்புணர்வைக் கூறிவிட்டேன். ஒரு புன்னகை பூத்த அதிபர் அப்பாவுடன் சென்று உடனே புத்தகங்களை எடுத்துக் கொண்டு வருமாறு கூறினார். அவ்வாறே அப்பாவும் என்னைப் பாடசாலைக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டார். அன்று கடைசியாக பாடசாலைக்கு வந்த நான் அன்றிலிருந்து முதல் மாணவனாகத் திகழ்ந்தேன் என்றால் எமது வகுப்புகளில் செய்த சேவையினாலேயே என்பது உண்மை.

அதிகமான தண்டனை முறைக் கலாசாரத்தில் இருந்து வந்த எமக்கு அவர் முதலில் வழங்கிய (பரிசு முறை), ஊக்குவிப்பு முறை வெகுவாகக் கவர்ந்தது. அதாவது சரியாக அழகாக பாடப் பயிற்சிகளை நிறைவு செய்யும் ஒவ்வொரு மாணவர்களது கொப்பிகளிலும் ஏதாவது நற்சிந்தனை ஏற்படுத்த வல்ல வாசகத்தை தனது முத்துப் போன்ற சிவப்பு நிறப் பேனாவால் எழுதுவார். அவருடைய எத்தனை வாசகங்கள் எனது கொப்பியில் பதிந்துள்ளன என்று எண்ணிப் போட்டி போடுவோம். அதன் போது கணிதத் திறன்களான எண்ணுதல், ஒப்பமிடுதல், கூட, குறைய பார்த்தல், கூட்டல், கழித்தல் என பல திறன்களை கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளின்றி நாம் பெறுவோம். அது மட்டுமன்றி அவ்வாசகங்களை விருப்புடன் பல தடவை வாசிப்போம். சில வேளைகளில் அதிபரின் அழகான எழுத்துப் போல எழுத வேண்டும் என்பதற்காக மீள மீளப் பார்த்து எழுதுவோம். இதன் போது தமிழ் வாசிப்பு, எழுத்து திறன் விருத்திகள் எம்மை அறியாமல் எம்மில் ஏற்பட்டது. தரம் மூன்றிலிருந்து தரம் எட்டு வரையே அவரிடம் கல்வி கற்ற நான் அதன் பின்பும் பிரபல பாடசாலைகளிலும் முதல்தர மாணவனாகத் திகழ வைத்த எனது ஆசானை எனது வாழ்க்கையில் எவ்வாறு தான் மறக்க முடியும்.

பொதுவாக கற்றல் கற்பித்தலில் கணிப்பீட்டு முறைக்கான திருத்தங்கள் வழி முறைகளுக்கு இன்று மிகவும் முக்கிய இடமளிக்கின்றது. ஆனால் நாம் கல்வி கற்ற காலப்பகுதியிலேயே அதனைத் தினமும் சீரிய முறையில் செய்து காட்டியவர். இன்று நான் ஓர் ஆசிரியராக இருப்பதினாலும் கணிப்பீடுகள் செய்வதற்கான பயிற்சி செயலமர்வுகளில் பங்கு பற்றியதினாலும் எமது ஆசான் எமக்குச் செய்த கணிப்பீட்டு முறைகள், பரிகாரக் கற்பித்தல் முறைகள் எவ்வளவு நேர்த்தியானது என்பதை உணர முடிகின்றது.

அவர் சிறந்த ஆசிரியராகவும் நிர்வாகத் திறன்மிக்க அதிபராகவும், பண்பான சமூகத்தவராகவும் விளங்கியமையினால் அவரின் இடத்தை இதுவரை யாராலும் நிரப்ப முடியவில்லை. ஒவ்வொரு ஆசிரியரும் மாணவர் மனதில் பதிய முயற்சிப்போம் என என் சக ஆசிரிய சமூகத்தைக் கேட்டு நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையோடு மனிதன்

சதீஸ்வரன் - ஹரிஸ்ராகவி
க.பொ.த உயர்தரம்

நிலவொளியில் தவிழ்ந்தெழுந்தேன்
நட்சத்திரங்களிடையே மின்னியெழுந்தேன்
நானும் ஒரு பறவையாய்
வானில் பறந்தேன்.

பிறைச்சந்திரனின் நுனியில் மின்னும்
நட்சத்திரம் போல் - இயற்கையின்
படைப்புக்களும் மின்னுகின்றன - மனித
வாழ்வையும் மாற்றுகின்றன.

பச்சைநிற வயலில் மறைகின்ற பச்சைக்கிளியும்
மரப்பட்டையின் நிறத்திற்கு மாறும் - பச்சோந்தியும்
மனித தன்மையை மறைமுகமாக வெளிக்காட்டுகிறது.
மாறும் மனிதனது அம்சங்கள் இயற்கையோடு ஒத்தவை.

இயற்கையோடு ஒத்த மனிதன் எங்கே!
மனிதனோடு ஒத்த இயற்கை எங்கே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழித்திடு மனமே...

**திருமதி. S. கருணாகரன்**
**நெல்லியோடை,**
**அச்சுவேலி தெற்கு.**

மாசு படிந்துள்ள மனித மனங்களில்
அதிகாரத்தில் கட்டுண்டது மனித வாழ்வியல்
நீ எவ்வளவு உயர்ந்தவன் என்பது
உன் படிப்பிலோ உன் பணத்திலோ
உன் அறிவிலோ அல்ல மற்றவர்களை
நீ எப்படி மதிக்கிறாய் என்பதில் தான்!

அடாவடிகள் தலைவிரித்தாட
ஆணவம் தாண்டவமாட
அதிகாரமே அகிலத்தில் ஆதிக்கம்
உலகெங்கிலும் ஊழல்! அதனால்
கேள்வியானது பொருளாதாரம் வாழ்வில்
திறமைக்கு இங்கு மதிப்பில்லை
போலிகளைக் கண்டு மதிமயக்கம்
நீதிக்கு வந்தது சோதனை

உண்மையாக உழைத்துக் களைப்பவன்
ஊதியம் உரிமை மரியாதை இன்றி அவமதிக்கப்பட
பொய் வேடம் பூண்டவர் தன் நடிப்பால்
எண்ணங்களுக்கு வண்ணம் பூசி
ஏய்த்து மேய்ப்பவன் உள்ளொன்றும் புறமொன்றுமாய்
தகுதியற்ற தலைவனாய் வலம் வருகின்றான்

தோல்வி வந்தால் பொறுமை அவசியம்
எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்
வெற்றி வந்தால் பணிவு அவசியம்
எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்
எப்போதும் தோல்வியை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புக் கொள்ளத் தயங்காதே
தோல்வியிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது
இவ்வுலகில் நிறைய இருக்கிறது

பொய் சொல்லி தப்பிக்க நினைக்காதே
உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள்
ஏனென்றால் பொய் வாழ விடாது
உண்மை உன்னை சாக விடாது
சிலரை மட்டும் நம்பு – ஏனெனில்
எங்களுக்கென்று சில பழக்க வழக்கங்கள் உண்டு

மக்கள் எம்மை சிறந்த தலைவர்களென்று எண்ணி
எமக்கு ஒரு அந்தஸ்தை வழங்கியுள்ளார்கள்
ஒரு சில நல்ல மனிதர்களின்
சக்தி மிக்க தலைவர்களின்
அர்ப்பணிப்புள்ள சேவையினால் தான்
இவ்வுலகம் இயங்குகின்றது!!
எம்மால் இயன்றளவு முழுமையான
பணிகளை அர்ப்பணிப்போடு செய்து
மக்களின் நலன் பேணி இப்பணியில்
மக்களுக்கான சேவையை வழங்க வேண்டும்!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவார்ந்த சமூகத்துக்கான வாசிப்பு



கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

உடல் பொசிப்புக்குச் சுவாசிப்பு எப்படி அத்தியாவசியமோ, அதேபோல உளப் பசிக்கும் வாசிப்பு என்பது பிரதான வரமாக வல்லமை பெறுகிறது.

உலகின் 1000 கோடி புத்தகங்கள் நல்ல நிலையில் இருப்பதாக ஒரு சமூக நிறுவனம் தமது ஆய்வில் எடுத்தியம்புகின்றது. ஆனாலும் பெருவாரியான புத்தகங்கள் இன்னுமே கைபடாமல், மெய்படாமல், கண்படாமல் எவராலும் கவரப்படாமல் இருக்கின்ற துரதிஷ்டத்தில் தமது ஆயுளைக் கழித்து வருகின்றன.

பண்டிதர்களும், புலவர்களும், ஞானிகளும், விஞ்ஞானிகளும் நீதித்துறை சார்ந்தவர்களும், ஆன்மீக அரசியல்வாதிகளும், ஆசான்களும் ஆயிரமாயிரம் புத்தகங்களைக் கரைத்துக் குடித்துப்படித்த பின்னர் தான் உச்ச நிலையில் உன்னதம் அடைந்த வரலாற்றினை நாம் இன்று படிக்கின்ற பாக்கியத்தைப் பெற்றிருந்தும், நாம் வாசிப்பதிலும் போசிப்பதிலும் தோற்றுப் போயுள்ளோம். வாசிப்பு இலவசமானது. ஆம்! மதிப்பார்ந்த அறிவுப் பெட்டகங்களான ஹலாம், நேரு, மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, பிடல் காஸ்ரோ, யாஸிர் அரபாத் வல்லபாய் பட்டேல், வெங்கட்ராமன், அம்பேத்கார், இந்திராகாந்தி, அண்ணாத்துரை, கண்ணதாசன், சிவத்தம்பி, கம்பவாரிதி ஆகியோர் வாசிப்பதனாலேயே தம்மை உலகத்தவர்களால் வாசிக்குமாறு செய்த பேறு கொண்டவர்களாக இன்றும் திகழ்கின்றார்கள். அவர்கள் தோற்றுப்போனதில்லை.

அப்துல் கலாம் அவர்கள் கூறுகையில், "இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும், வரலாற்றின் பக்கங்களில் ஒரு பெரியதொரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தப்பக்கத்தை இந்த உலகையே படிக்க வைப்பது உங்கள் கைகளில் தான் உள்ளது.

"நிமிர்ந்து நில்
நிலவு உனக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது நெற்றிப் பொட்டிடும்." ஆம்! ஹலாம் அவர்கள் தாம் ஏற்ற பொறுப்புக்கள் யாவற்றிற்கும் மூலகாரணம் மொழியாற்றலே என்று குறிப்பிட்ட அவர் வாசிப்பே தனது மூச்சும் பொழுது போக்கும் என மெய்சிலிர்க்கின்றார்.

சுமார் 10000 மெஞ்ஞான விஞ்ஞான அறிவார்ந்த நூல்கள் பலவற்றை ஆற அமர இருந்து உணர்ந்து வாசித்துக் குறிப்பெடுத்து மேதையானவரே கலாம் அவர்கள் ஆவார். அவர் ஒரு ஹின்னஸ் சாதனையாளராவார். மற்றும் சிறை சென்ற காந்தி, மண்டேலா போன்ற விடுதலைக் கொடையாளர்கள், தாம் அடைபட்ட சிறைச் சாலையையே நூல் நிலையமாக்கிய சாதனையாளர்களாகத் திகழ்கின்றார்கள். மாறாக, கைதிகளை அறிவுள்ளவர்களாக மாற்றுகின்ற பயனுள்ள ஒரு செயற்றிட்டம் இருக்கும் பட்சத்தில் சிறைச் சாலைகள் அறிவார்ந்த பாடசாலையாக மாற்றப்படும் என்பது திண்ணமே.

அண்மையில் இலங்கையில் ஒரு கைதியானவர் அதியுயர் விருதான "சாகித்தியரத்னா" பட்டத்தையும் பதக்கத்தையும் பெற்று இலங்கையரை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர். இவர் சிறையில் இருக்கும் போது ஒவ்வொரு நிமிடத்தையும் அவம் போகாமல் தவமாக்கிய நிலையில் வாசிப்பையும் எழுத்தையும் சேமிப்பாக்கிச் சட்டங்களுக்கே ஒரு திருத்தத்தை அவசியமாக்கினார்.

ஆம்! சாகித்திய ரத்னா விருதை, ஒரு அரசு தனது கைதிக்கே வழங்கி வாசிப்பையும் மொழியையும் எழுத்தாக்கததையும் படைப்பாற்றலையும் ஊக்குவித்துள்ளது என்றால், ஏன் விடுதலை செய்ய முடியவில்லை என்ற வினாவுக்கு உரிய செயற்றிட்டம் இனியாவது பிறக்கும் என நம்பலாம்.

வாசிப்பு என்ற பண்புக்கும், புத்தாக்கப்படைப்பிலக்கிய நூலுக்கும் ஒரு சிறைக்கைதி விடுதலை செய்யப்படுகின்ற வரலாறு இனி இலங்கையில் பதிவாகும் என நம்பலாம். அடேயப்பா! ஐரோப்பிய நாடொன்றில் கைதியானவர், சிறையில் கொடுக்கப்படும் நூலை வாசித்து முடிப்பாராக உறுதி செய்யப்படும் பட்சத்தில், அக்கைதி விடுதலை செய்யப்படுகின்றார். இஃது ஒரு சமூகத்துக்கான தூர நோக்கமாகும். இது எமது நாட்டுக்கு ஏன் பொருந்தாது? பொருந்துமே! ஊடகங்கள் வாசிப்பினை ஊக்கப்படுத்தி ஓர் அறிவார்ந்த சமூகத்தினை இவ்வுலகிற்கு வரமாக்க ஆவல் கொள்கின்றன. ஒவ்வொரு பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம் அதற்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும். ஒரு பத்திரிகை பிரதம் ஆசிரியரானவரின் வாசிப்பினது தேட்டமே ஆசிரிய தலையங்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைய வழி வாசிப்பும் கற்றலும் ஒரு புறம் சமாதானப்படுத்தினாலும் கையால் எழுதி வடிவமைத்து வாசிப்பது போல மூளை சோபிக்காது. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். கண்ணும் கணினியும் கடுகதியாய் உலகை வாட்டும். உலகில் எதிர் வரும் காலங்களில் அசாதாரண அனர்த்தங்களினால் முடங்கும் நிலை ஏற்பட்டால் மிஞ்சப் போவதும் விஞ்சப் போவதும் வாசிப்பொன்றேயாகும். வாசிப்பொன்றினாலேயே உலகை ஆளவும் முடியும், வெல்லவும் முடியும். காக்கவும் முடியும்.

நமது நாட்டில் போர் முடிந்த கையோடு இணைய கணினி யுகம், ஏற்பட்டதைத் தொடர்ந்து எழுதுதல், மனனம் செய்தல், வாசித்தல், ஆக்கங்கள், படைத்தல், அளவுளாவுதல் வரைதல், வடிவமைத்தல், விமர்சித்தல் ஆகியனயாவும் மாணவர், ஆசிரியர் வாழ்வில் வெகுவாகக் குறைந்தேவிட்டன. வாசிப்பில் நேசிப்புக் குறைவினாலும், ஊக்கப்படுத்துவோரின் தட்டுப்பாட்டினாலும், மேனிலைக் கல்வியாளர்களின் பொறுப்பற்ற தன்மையினாலும் இன்றைய மாணவ சமூகம் கொஞ்ச நஞ்சமல்ல 43 இலட்சம் மாணவர்கள் மொழியாற்றலிலும், புதியன படைப்பதிலும் மந்த அசமந்த போக்கையே கடைப்பிடிக்கின்றார்கள்.

ஒரு அறிவார்ந்த சமூகத்தைப் படைப்பதற்கு ஏதுவாக நாம் எடுக்கும் முயற்சிகள் யாவும் ஒவ்வொரு வீட்டிலிருந்தே ஆரம்பிக்கப் படவேண்டும். மனம் வைத்துப் பொறுமையோடிருந்து, உரத்து வாசிக்கின்ற பழக்கத்தையும், வழக்கத்தையும் குறிப்பாகப் பெற்றோர் தத்தம் வீடுகளில் அமுலாக்க வாஞ்சைப்பட வேண்டும். போட்டிகளிலும், படைப்பினிலும் நாட்டில் அண்ணளவாக இரண்டு இலட்சம் மாணவர்களே பங்குபற்றுகிறார்கள். மிகுதி 40 இலட்சம் மாணவர்களையும் வாசிப்புக் கலாசாரத்துக்குள் கொண்டு வருவதே இதன் இலக்காகும்.

"புத்தக வாசிப்பே புதிய
விடியலுக்கான
ஒற்றையடிப் பாதை"
-தாகூர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து தமிழ்ச் சூழலில் நினைவு மலர் வெளியீட்டுப் பாரம்பரியம் - ஒரு பார்வை

**சண்முகலிங்கம் சஜீலன்,**
**பன்னாலை**

ஈழத்து தமிழ்ச் சூழலில் நினைவு மலர் வெளியீட்டிற்கு மிக நீண்ட வரலாறொன்று உண்டு. நினைவு மலர் என்பது இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து இறைபதமடைந்து விட்ட ஒருவரது வாழ்க்கைக் குறிப்புகளையும், பசுமையான நினைவுகளையும், பல்வேறு விடயங்களையும் தாங்கி வெளியிடப்படும் ஒரு புத்தகமாகும். தமிழ் இந்துப் பாரம்பரியத்தில் ஒருவர் இறைபதமடைந்து அவரது அந்தியேட்டிக் கிரியைகள் நிறைவடைந்ததும் முப்பத்தொராம் நாளில் இப்புத்தகம் வெளியிடப்படுகிறது. தற்போது அனைத்து இன மதப்பிரிவினரிடமும் இவ்வெளியீட்டுப் பாரம்பரியம் காணப்படுகிறது. ஆரம்பகாலத்தில் ஒருவரது வம்சவிருட்சம், குலப்பெருமை ஆகியவற்றை எடுத்தியம்பும் வகையில் நினைவு மலர் வெளியீடு அமைந்திருந்தது. எனினும் தற்போது இவ்வுலகில் வாழும் ஒவ்வொழு மனிதர்களது வாழ்வும் பெறுமதி மிக்கது என்பதும், அது அடுத்த சந்ததியின் வாழ்வுக்கு முன்னுதாரணமாகவும், வழிகாட்டியாகவும் அமைகிறது என்பதும் இவ்வெளியீட்டின் மூலம் உணர்த்தப்படுகிறது.

நினைவு மலர் வெளியீட்டினை கல்வெட்டு என்று கூறும் வழக்கமுண்டு. கல்வெட்டு என்பது அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் அவர்கள் ஆலயங்கள், பொதுநிறுவனங்கள், மக்கள் ஆகியோருக்கு அளித்த தானங்கள், கொடைகள், சொத்துக்கள், செல்வங்கள் முதலியவற்றை கற்களின் மேல் பொறித்து வைத்ததைக் குறித்தது. கற்களின் மேல் பொறித்த வசனங்கள் அழியாது நீண்ட காலம் நிலைத்து நிற்கும் என்பதால் கல்லில் பொறிக்கும் வழக்கம் ஏற்பட்டது. இது போன்றே ஒருவரது நினைவுகளைத் தாங்கிய புத்தகமும் நீண்ட காலம் நிலைத்திருக்க வேண்டும். பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று கருதி கல்வெட்டு என்று நினைவு மலரை அழைத்தனர். ஆரம்பகாலங்களில் புலவர்கள் அறிஞர் பெருமக்கள் சமூகத்தில் உயர்மட்டத்தில் உள்ள ஒருவர் இறந்தால் அவரது பிரிவைத் தாங்காது சரமகவி பாடும் வழக்கமொன்றிருந்தது. அதாவது செய்யுள் வடிவில் அல்லது பா வடிவில் பிரிவுத் துயரினைப் பாடும் வழக்கம் இருந்தது. பிற்காலத்தில் அவை இரங்கற்பாக்கள் என அழைக்கப்பட்டன. ஆறுமுகநாவலர் காலமாகிய போது அவரது சமகாலத்தில் வாழ்ந்த அறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்கள் பாடிய சரமகவிகள் இன்றும் புகழ் வாய்ந்தவையாக உள்ளது. ஒரு நினைவு மலர் வெளியீட்டின் உள்ளடக்கம் காலத்திற்கு காலம் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வந்துள்ளது. தொகுப்பாசிரியரின் சிந்தனை நடைமுறை, செயற்பாடு ஆகியவற்றுக்கமைய ஒரு நினைவு மலரில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் மாறுபட்டமையும். இற்றைக்கு அறுபது எழுபது வருடங்களுக்கு முன் வெளியிடப்பட்ட நினைவு மலர்கள் அதிகமாக இறைபதமடைந்தவரது மிக நெருங்கிய உறவுகளின் இரங்கற்பாக்களையும், சுற்றத்தாரின் அஞ்சலிக் குறிப்புக்களையும் கொண்டமைந்தது. அதன் அடுத்த கட்டமாக பழைய அரியபல படைப்புகள் சுற்றத்தாரின் அஞ்சலிக் குறிப்புகளையும் கொண்டமைந்தது. அதன் அடுத்த கட்டமாக பழைய அரியபல படைப்புகள் நினைவு மலரில் மீள் பிரசுரமாகின. உதாரணமாக மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை முத்துராசர் கவிராயரின் கைலாயமாலை, மாவைச் சின்னக்குட்டிப் புலவரின் தண்டிகைக்கனகராயன்பள்ளு முதலானவற்றைக் குறிப்பிடலாம். இலங்கை வரலாறு மற்றும் இலங்கை கல்வி அமைச்சின் பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்ட கல்வியல் சார்ந்த விபரங்களும் மொழி இலக்கணம், இலக்கியம், கலை வரலாறு சார்ந்த விடயங்களும் நினைவு மலரில் வெளியாகின. குறித்த ஊரிலுள்ள ஆலயங்களின் தலபுராணம், வரலாறு பிரபந்தங்கள், பக்திப்பாமாலைகள் என்பனவும் நினைவு மலரை அலங்கரித்தன. சிறுவர் இலக்கியங்கள் பலவும் வெளிவந்தன.

அண்மைக்காலத்திலிருந்து பொதுவான ஒரு நினைவு மலர் பின்வருவனவற்றை உள்ளடக்கமாக கொண்டிருப்பதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. முன் அட்டையில் நினைவு மலரின் பெயர் (உதாரணம் - தங்கமலர், சண்முகஜோதி, மணித்தீபம், புனிதகாவியம், தேவகிகானம், நித்தியசீதர மான்மியம், வாழ்வாங்கு வாழ்தல் போன்றன. இப்பெயரில் நினைவு மலர்கள் வெளியாகியுள்ளன.) கடவுளர் படங்கள், ஆலயங்களின் புகைப்படங்கள் அல்லது இறைபதம் அடைந்தவரது சற்றுப் பெரிய புகைப்படம் பிறந்த இறந்த ஆண்டுகள் குறிக்கப்பட்டிருப்பதோடு இறந்த நாள் திதி செய்யுள் வடிவில் வெண்பாவாக அமைந்திருக்கும் அடுத்ததாக பஞ்சபுராணம், தேவார தோத்திர திரட்டு ஆகியன இருப்பதை அவதானிக்கலாம். அமரத்துவம் அடைந்தவரது வாழ்க்கை வரலாறு மற்றும் நெருங்கிய உறவினர்கள், சுற்றத்தாரின் இரங்கற் பாக்கள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை உரைகள், அஞ்சலிக் குறிப்புகள் அன்னாரது வாழ்க்கைக்கால புகைப்படங்கள் என்பன இடம் பெற்றிருக்கும். அதன் பின்னர் இடம் பெறும் விடயதானங்கள் குறிப்பு நினைவு மலருக்கேற்ப மாறுபட்டமையும். மனிதனுக்கேற்படும் நோய்கள், நோய்த்தடுப்பு முறைகள், சிசிக்சை முறைகள் பற்றிய விபரம் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து விரதங்கள் பற்றிய விபரம் கோயிற்கிரியை முறைகள், ஆன்மீகம் சம்பந்தமான கட்டுரைகள், விரதகாலங்களில் படித்து பயன்பெறத்தக்க முறைகள், ஆன்மீகம் சம்பந்தமான கட்டுரைகள், விரதக காலங்களில் படித்துப் பயன்பெறத்தக்க தேவார தோத்திரத் திரட்டுக்கள் காணப்படும். திருமண நடைமுறைகள், அபரபக்கிரியை இயல்விளக்கம் என்பனவும் நினைவு மலரில் இடம் பெறுவதுண்டு. பொதுத் தகவல்கள், பயனுள்ள குறிப்புகள் மற்றும் பல வாழ்வியல் சார்ந்த விடயங்கள் இடம் பெறுவதையும் அவதானிக்கலாம்.

இவ்வாறாக மிகப்பயனுள்ள வகையில் நினைவு மலர் வெளியீடுகள் அமைவது வழக்கம். அந்தியேட்டி தினத்தில் வெளியிடப்படும் நினைவு மலர்கள் சபையோர்கள் முன்னிலையில் வாசித்துக் காட்டப்படும் நடைமுறையும் உண்டு. ஒருவர் அமரத்துவமடைந்து ஆண்டு தோறும் வரும் அவரது ஏதாவதொரு நினைவு நாளில் நினைவு மலர்கள், ஞாபகார்த்த வெளியீடுகள் என நினைவு வெளியீடுகள் வெளியிடப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்நினைவு மலர்கள் வெளியீட்டுப் பாரம்பரியத்தில் மயிலங்கூடலும், பி.நடராசன், பண்டிதர் சி.அப்புத்துரை, சைவப்புலவர் சு.செல்லத்துரை போன்ற பல அறிஞர் புலவர்கள் மிகக்காத்திரமான கனதியான விடயங்கள் நினைவு மலரில் வெளிவருவதற்கு உறுதுணை புரிந்துள்ளனர்.

பெரும்பாலும் நினைவு மலராக புத்தக வடிவில் வெளியிடப்படும் இவ்வெளியீட்டுப் பாரம்பரியத்தில் சில வேளை ஒரு குடும்பத்தில் குழந்தைகள், சிறுபிள்ளைகள் காலமாகியிருந்தால் சிறிய அட்டையில் குறித்த பிள்ளைகளின் புகைப்படத்துடன் சிறு குறிப்புக்களையும் அச்சிட்டு அட்டை வடிவ நினைவு மலராக வெளியிடுவதுமுண்டு. சில குடும்பத்தினர் தமது அன்புக்குரியவர்களின் ஞாபகார்த்தமான பஞ்சாங்க நாட்காட்டிகளையும், மாதக்கலண்டர்களையும் வெளியீடு செய்கின்றனர். இவ்வெளியீடுகளும் நினைவு மலர் வெளியீட்டுப் பாரம்பரியத்தின் ஒரு அம்சமாகவுள்ளது. தற்காலத்தில் ஈழத்தில் மட்டுமன்றி தமிழகம் மற்றும் புலத்திலிருந்தும் (ஈழத் தமிழர் வசிக்கும் நாடுகள்) நினைவு மலர்கள் ஞாபகார்த்த மலர்கள் வெளிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நினைவுமலர் பற்றி எழுதப்பட்ட கட்டுரையொன்று “ஈழத்தின் நூல் வெளியீட்டு முயற்சிகளில் கல்வெட்டுப் பாரம்பரியம்” என்ற பெயரில் வெளிவந்துள்ளது. 2005 ஆம் ஆண்டு வெளிவந்த “நூலியல்பதிவுள்” எனும் நூலில் காணப்படும் இக்கட்டுரையினை நூலகவியலாளர் என் செல்வராசா அவர்கள் எழுதியுள்ளார். நூலகங்களைப் பொறுத்தவரையில் குறிப்பாக யாழ்மாவட்டத்தில் யாழ் பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனநூலகம், சுன்னாகம் பொதுநூலகம் மற்றும் வலிகாமத்திலுள்ள சில பொது நூலகங்கள் வாசகர்களின் பயன்பாட்டிற்காக நினைவு மலர்களை காட்சிப்படுத்தி வைத்துள்ளன. இதே போன்று வேறு சில நூலகங்களிலும் சனசமூகநிலையங்களிலும் நினைவு மலர் வெளியீடுகளைப் பார்க்க முடிகிறது. நினைவு மலர் வெளியீட்டின் முக்கியத்துவம் பற்றி பல கருத்துரைகளையும் புலமையாளர்கள் வழங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக மிக நல்ல விடயங்களையும் தாங்கி வெளிவரும் நினைவு மலர் வெளியீட்டுப் பாரம்பரியம் ஈழத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் சூழலில் மிக அண்மைக்காலத்தில் இவ்வெளியீட்டுப் பாரம்பரியத்தில் ஒரு தளர்வு நிலை தென்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதாவது நினைவு மலர் வெளியீட்டுப் பாரம்பரியம் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் அதிகரித்துள்ள அச்சிடற் பொருட்களுக்கான செலவு, குறுகிய காலத்திற்குள் நினைவு மலரை தொகுத்து வெளியிடுவதிலுள்ள சிரமம், நினைவு மலர் தொகுப்பாசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை, நினைவு மலரைப் பெற்றுக்கொள்வோர் படிப்பதிலோ, பேணிப்பாதுகாப்பதிலோ அதிக அக்கறை காட்டாமை, அதிக பணச் செலவு, நேரவிரயம் போன்ற பல்வேறு காரணிகளினால் நினைவு மலர் வெளியீடு செய்வது குறைந்துள்ளது. சமகாலச்சூழலில் நினைவு மலர் வெளியீட்டிற்குப் பதிலாக அந்தியேட்டி நிகழ்வில் அல்லது நினைவு தின நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு பயனுள்ள மரக்கன்றுகள் வழங்குதல், மங்களகரமான நிகழ்வுகளுக்குரிய பொருட்கள் வழங்குதல் (உதாரணம் - நிறைகுடம், குத்துவிளக்கு, அர்ச்சனைத்தட்டு, செம்பு முதலியன) பள்ளிச் சிறார்கள், மாணவர்களுக்குரிய கற்றல் உபகரணங்கள் வழங்குதல் (உதாரணம் - புத்தகப்பை, கொப்பி, எழுது கருவிகள் முதலியன) என்பதாக நிகழ்வுகள் மாற்றமடைந்து செல்கின்றமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு ஏதாவதொருவகையில் பயனுள்ளதாகவே நினைவு தின நிகழ்வுகள் அமைகின்றன. எனினும் நினைவு மலர் என்பது அமரத்துவம் அடைந்தவர் எவ்வாறு தனது வாழ்க்கை சுவட்டை இவ்வுலகில் பதித்துச் சென்றுள்ளார் என்பதை எஞ்ஞான்றும் அறிவிக்கும் ஒரு தகவல் பெட்டகமாகவே அமைவதால் நினைவு மலர் வெளியீட்டுப் பாரம்பரியம் ஈழத்தில் தடையின்றி தொடரவேண்டும் என்பதே அனேகரின் பேரவாவும் வேண்டுகோளுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CONTRIBUTION OF LIBRARIES DURING READING MONTH

**MS. JEREENA JEYAMOHAN**
**Associated Member of The Sri Lanka Library Association**
**Former Employee of the National Library and Documentation Services Board,**
**No. 14 Independence Avenue,**
**Colombo 7**

**Introduction:**

Reading is often referred to as a gateway to knowledge. It opens up new worlds, stimulates our imagination, sharpens our intellect, and helps us understand different perspectives and cultures. In the digital age, where distractions abound and technology is pervasive, the simple act of reading continues to be a vital tool for personal growth and intellectual development. Across the globe, countries have designated specific times to celebrate the importance of reading. One of the most widely observed is Reading Month, typically celebrated in October. This month focuses on raising awareness about the benefits of reading, encouraging individuals to engage with books, and emphasizing the role libraries play in promoting reading habits.

Libraries, as institutions dedicated to learning, have always played a crucial role in nurturing a reading culture. They serve as custodians of knowledge and are accessible to everyone, regardless of age, background, or socioeconomic status. During Reading Month, libraries contribute in significant ways to promote reading, enhance literacy, and create a deeper connection between people and books. Their efforts are multi-faceted, ranging from organizing events to providing access to resources and creating awareness about the joys and benefits of reading. This article explores the various contributions libraries make during Reading Month and highlights their essential role in fostering a culture of reading in communities.

**Raising Awareness About Reading:**

One of the primary objectives of Reading Month is to raise awareness about the importance of reading and encourage people of all ages to engage in this enriching activity. Libraries take this opportunity to organize a range of programs and initiatives that not only promote books but also educate the public on the mental, emotional, and social benefits of reading.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Libraries often partner with schools, colleges, and community centers to organize workshops, seminars, and campaigns that highlight the advantages of reading. These initiatives aim to dispel myths about reading and emphasize its importance in everyday life. For instance, libraries might hold discussions on how reading helps improve vocabulary, enhances cognitive skills, reduces stress, and fosters creativity.

In addition, libraries use Reading Month to showcase the variety of reading materials available, including fiction, non-fiction, biographies, historical texts, and scientific journals. They also highlight the importance of reading for both personal growth and professional success. By providing access to such a wide range of books, libraries make it easier for individuals to understand that reading is not just a leisure activity but a powerful tool for learning and self-improvement.

**Organizing Events and Activities:**

During Reading Month, libraries host numerous events designed to encourage reading and make the process of engaging with books more fun and interactive. These events range from book clubs and author readings to storytelling sessions, exhibitions, and literary festivals. Each of these events serves a different purpose but collectively they contribute to the overarching goal of promoting reading in the community.

- **Book Readings and Author Visits:**

  One of the most effective ways libraries encourage reading is by organizing book readings and inviting authors to speak about their works. These events create an atmosphere of excitement and curiosity around books. They provide readers with an opportunity to meet authors, ask questions, and engage in discussions about the themes, characters, and messages in the books. For younger readers, hearing an author read aloud can help make the reading experience more vivid and enjoyable.

- **Storytelling Sessions:**

  Libraries also organize storytelling events, especially for children, during Reading Month. Storytelling is a powerful tool to spark children's imagination and help them develop an early love for reading. Libraries bring in professional storytellers or staff members to narrate popular stories, often using props and interactive techniques to engage young audiences. These sessions also encourage children to think critically and explore different genres of literature. Storytelling not only fosters a love for reading but also nurtures other important skills like listening, concentration, and comprehension.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **Book Fairs and Exhibitions:**

  Another popular event held during Reading Month is book fairs and exhibitions. These events provide an opportunity for libraries to showcase new arrivals, rare books, and thematic collections. Libraries may collaborate with local bookstores and publishers to offer discounts, promotions, and special deals on books. By creating an environment where books are celebrated, libraries encourage the public to explore new titles and genres, while also reinforcing the idea that books are valuable and worth investing in.

**Facilitating Access to Books:**

One of the most important contributions libraries make during Reading Month is to facilitate easy access to books. Libraries are at the forefront of making books accessible to everyone, regardless of financial limitations. During Reading Month, libraries offer an even greater array of services to ensure that people have access to a wide range of reading materials.

- **Extended Library Hours:**

  To accommodate the increased interest in reading during this time, many libraries extend their hours of operation. This allows individuals with busy schedules, including working professionals and students, to visit the library at convenient times. Libraries might also offer special hours for children and young readers, ensuring that families can take full advantage of the library's resources.

- **Book Lending Programs:**

  During Reading Month, libraries often encourage people to borrow books for extended periods. This program enables individuals who may not have the financial means to purchase books to still have access to a variety of reading materials. Libraries often run campaigns to encourage people to sign up for memberships and take out books they may not have considered otherwise.

- **Digital Access:**

  In addition to physical books, libraries also offer digital access to eBooks, audiobooks, and other online resources. This is especially important in today's increasingly digital world, where many people prefer to read online or on their mobile devices. Libraries are leveraging technology to expand their reach,providing digital collections that can be accessed by users from anywhere in the world. During Reading Month, these services are often promoted to encourage more people to explore digital reading.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Promoting Literacy and Education:**

Libraries also play a pivotal role in supporting literacy during Reading Month. They host literacy programs, reading challenges, and educational workshops that aim to enhance the reading and writing skills of participants. This is particularly important for children, who benefit from early literacy interventions, as well as adults who may be trying to improve their reading or writing abilities.

➢ **Reading Challenges and Competitions:**

Reading challenges and competitions are a fun and engaging way to motivate people to read more books. Libraries often organize these events for various age groups, such as children, teenagers, and adults. Challenges may include reading a certain number of books in a set period, participating in themed reading contests, or writing book reviews. These events help create a sense of community among readers and encourage friendly competition, making reading an enjoyable and social activity.

➢ **Educational Workshops:**

In addition to recreational reading activities, libraries organize educational workshops on various topics. These might include improving reading comprehension, writing skills, or critical thinking. For students, libraries often offer workshops on academic reading strategies, helping them improve their study habits and become more effective readers. Adults can also benefit from workshops that teach them how to read more efficiently, manage their time, or explore new genres and topics.

**Creating a Reading Culture in the Community:**

The role of libraries during Reading Month goes beyond simply providing books. Libraries are essential in creating a lasting reading culture in communities. They promote the idea that reading should be a lifelong habit, not just something that people do during a special month.

➢ **Library Outreach Programs:**

Libraries often conduct outreach programs to promote reading in schools, community centers, and even senior citizen homes. These outreach initiatives may include book donations, mobile libraries, and remote reading sessions. By taking books directly to where people live and work, libraries ensure that reading is accessible to everyone, even in remote or underserved areas.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **Collaboration with Schools:**

  Schools and libraries often collaborate during Reading Month to organize joint events and programs. Teachers and librarians may work together to encourage students to read books outside the curriculum. This collaboration fosters a sense of shared responsibility in promoting reading and helps create a strong connection between students and their local libraries.

- **Public Awareness Campaigns:**

  Libraries also run public awareness campaigns during Reading Month to highlight the importance of reading. These campaigns may involve posters, social media outreach, and public service announcements. Through these campaigns, libraries emphasize that reading is not only fun and entertaining but also an essential skill that benefits people in all areas of life.


**Conclusion:**

In conclusion, libraries are instrumental in the success of Reading Month, playing a pivotal role in fostering a love for reading and promoting its numerous benefits. Through a diverse range of programs, events, and initiatives, libraries not only provide access to books and resources but also encourage people to actively engage with literature, broadening their minds and deepening their connection to the written word. From workshops and author readings to digital resources and community outreach, libraries ensure that reading is inclusive and accessible to everyone, regardless of age, background, or financial situation. Their impact extends well beyond the confines of Reading Month, contributing to a culture of lifelong learning, intellectual curiosity, and personal growth. In an increasingly digital age, libraries remain essential in shaping a society that values education, critical thinking, and the transformative power of books, continuing to inspire and empower individuals and communities alike.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவை நாதம் – இதழ் 5




**எரிபொருள் நிரப்பு நிலையம்,**
**சிறுப்பிட்டி**
**(விஸ்வலிங்கம் கௌதீசன்)**
**T.P : 0779565751**

**றோயல் பொழுதுபோக்குக் கழகம்**
**(சிவப்பிரகாசம் அருள்)**
**சுன்னாகம் வீதி, வாகையடி, புத்தூர்.**
**T.P : 0774203780**

**வானுஷா ரான்ஸ்போட்**
**(வி.பிரதீபன்)**
**வேவில் லேன், வல்வெட்டித்துறை.**
**T.P : 0751212442**

**என்.எஸ்.கன்சஸ்டன்**
**ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.**
**T.P : 0778001962**

**வரன் கன்சஸ்டன்**
**வாதரவத்தை, புத்தூர்.**
**T.P : 0779800025**

**அக்கரகாரம் உணவகம்**
**(தியாகராஜசர்மா கிருபாகரன்)**
**ஆவரங்கால், புத்தூர்.**
**T.P : 0779451787**

**அருணோதயம் புத்தகசாலை**
**(S.கிருஷ்ணகுமார்)**
**புத்தூர் கிழக்கு, புத்தூர்.**
**T.P : 0772236059**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீடு சிறக்க வாழ்த்துகின்றோம்.


சந்தோஷ் ஜுவலர்ஸ்
(நடராஜா கஜந்தன்)
No.40 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

E.S.P நாகரத்தினம்
மணியோகை கோவில் வீதி,
நல்லூர் /யாழ்பபாணம்/
காரைநகர்.
T.P : 0212224395

விஷ்ணு ஹாட்வெயர்ஸ்
பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்,
புத்தூர்.
T.P : 0212230426

ANKAJAN POWER & PIPES
Point Pedro Road, Puththur East,
Puththur.
T.P : 021 223 2670

THISHANAN CIVIL ENGINEERING,
Contract Work (Road, Building, Bridge)
(A.Rakupathi)
Maruthady Puththur West.
T.P : 0776153812, 0772718216

YASO ENGINEERING,
Erlalai East, Erlalai.
T.P : 0212241735, 0776006219

நியூ பிரியங்கா
நகை மாளிகை,
இல.68, கஸ்தூரியார் வீதி,
யாழப்பாணம்.
T.P : 0777175059, 0212285433



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.



உப அலுவலகம், புத்தூர்.




பொது நூலகம், புத்தூர்.










ISSN :2714 - 1578

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org